Registered as a Newspaper
பக்கம் -24
விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர்
TAMILALAI
அலை -.01
சனிக்கிழமை, 20.09.2003
ஓசை -25







தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

வாரமலர் தமிழ் அலை Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com
20.09.2003

## யார் கீரி? யார் பாம்பு?

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்தின் மூலம் மக்கள் ஆணையைப் பெற்ற பிரதமருக்குமிடையிலான அதிகாரப் போட்டிகள் தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையையடுத்து அரசின் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி அதிருப்தி தெரிவித்து வந்தார்.

இடைக்கிடையே ஆட்சியைக் கவிழ்த்து விடுவது போன்ற மிரட்டல்களும் விடுக்கப்பட்டே வந்தன. எனினும் ரணில் அரசு சந்திரிக்காவின் சாட்டையடிகளைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. சர்வதேச சமூகத்தின் ஆதரவு தன்வயமிருப்ப தால் எல்லாவற்றையும் சுலபமாக வென்று விட முடியும் என்ற நம்பிக்கையுடன் ஆட்சியை நகர்த் தியது.

தற்போது ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகாரப் போட்டி உச்சக்கட்டத்தையடைந்து விட்டது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் யார் கலந்து கொண்டு உரையாற்றுவது யார் என்ற பிரச்சினை அதிகாரப் போட்டி விஸ்வரூபம் எடுக்கக் காரணமாகும்.

நாட்டின் இறையாண்மை மிக்க தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியே கலந்துகொள்ள உரித்துடையவர் என்ற வாதம் ஒரு புறமிருக்க, சர்வதேச சமூகத்தின் பார்வையில் தன்னை சமாதான நாயகனாக வெளிக்காட்டிவரும் பிரதமர் அவர்கள் ஐ.நா. சபையில் உரையாற்றுவது தற்காலத்துக்குப் பொருத்தமான விடயம் எனச் சர்வதேச சமூகம் கருதுகிறது.

த்ற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஐ.நா.சபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தவுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ஜனாதிபதியின் சீற்றம் அதிகரிப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஐ.நா. சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சி.மகேந்திரன் இராஜதந்திர மரபுகளை மீறிவிட்டதாகக் கூறி ஜனாதிபதி கடிதம் ஒன்றை மகேந்திரனுக்கு அனுப்பி வைத்துள்ளார். அவை ஒருபுறமிருக்க நாட்டின் இறைமைக்கு ஆபத்து சூழ்ந்துள்ளதாகக் கூறிப் பிரதமருக்கு மிகநீண்ட கடிதம் ஒன்றையும் ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளமை நானே அதிகார பலம் மிக்கவர் என்பதை அர்த்தப்படுத்தும் வகையில் அமைந்துள் ளது. இப்போது உற்று நோக்கும் போது ஜனாதிபதி, பிரதமர் அதிகாரப்போட்டி பாம்பு, கீரி சண்டையாக மாறிவிட்டது.

தமது நிறைவேற்று அதிகாரத்தைத் தக்க வைக்கும் வகையில் ஜனாதிபதி அவர்கள் ரணில் அரசைக் கட்டுப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டால் அது சமாதான முன்னெடுப்புக்களை வெகுவாகப் பாதித்து விடும். அத்துடன் இம்மாத இறுதியில் விடுதலைப்புலிகளால் இடைக்கால நிர்வாக சபை தொடர் பான மாற்று யோசனை சமர்ப்பிக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படும் ஒரு சூழ்நிலையில் ஜனாதிபதியின் இந்தக் கடிதம் சிந்திக்க வேண்டியதொன்று. அம்மணியின் அடுத்த கட்ட நகர்வுகள் அரசுக்கு ஒரு ஆபத்தான கட்டமாகவும் இருக்கலாம்.

# புலிகளின் பதில் வரைபை அரசு அங்கீகரிக்குமா?

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நோர்வே மத்தியஸ்தத்துடன் தற்போது இடம் பெற்று வரும் சமாதான முயற்சிகள் தேக்க நிலையை அடைந்துள்ள சூழலில் பேச்சுவார்த்தை ஆரம்பித்து ஒருவருடம் கடந்த செவ்வாயன்று பூர்த்தியடைந்துள்ளது. ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்து கடந்த ஏப்ரல் மாதம் தேக்க நிலையை அடைந்துள்ளது.

ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் உள்ளக சுயநிர்ணய உரிமை இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சிரான் என்ற புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கான அமைப்பு இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான படைத்தரப்பு புலிகள் தரப்பு இணைந்து செயற்படும் அமைப்பு முஸ்லிம் விவகாரங்களைக் கையாள்வதற்கான அமைப்பு என்பன ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் இணக்கப்பாட்டுடன் உருவாக்கப்பட்டன.

போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பிருந்தே இடைக்கால நிர்வாக சபை குறித்து வலியுறுத்தி வந்த புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தையின் ஆரம்பத்தில் வலியுறுத்தி அரசாங்கத்திற்குத் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தக்கூடாதென்பதற்காகவே மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வாய்ப்பளித்தன.

ஆனால் சிங்களப் பேரினவாதம் தமிழர்களுக்கு எதையுமே கொடுக்காது போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்குச் சர்வதேச சமூகத்தின் பாதுகாப்பு வலையைப் போடுவதில் அக்கறை காட்டியதே தவிர இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றாக ஏற்படுத்தப்பட்ட சிரான் போன்ற அமைப்பைப் பெயரளவில் இயங்க வைக்க முற்பட்டதே தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியது எனலாம்.

புலிகளை எப்படியும் வசப்படுத்த சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை நன்கு பிரயோகிக்கும் வகையில் டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டைப் பயன்படுத்த ஸ்ரீலங்கா அரசு முற்பட்டது. முன்னோடி மாநாட்டை அமெரிக்காவில் நடாத்தி அங்கு புலிகளை அழைக்காது குட்டுப் போடலாமென ஸ்ரீலங்கா அமெரிக்கா கூட்டுத் திட்டம் சிந்தித்தது.

ஆனால் புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளாது தவிர்த்து ஸ்ரீலங்கா அரசுக்குத் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இனப்பிரச்சினை ஆரம்பித்த வேளை சர்வதேச சமூகம் அனுதாபம் காட்டியபோது உள்நாட்டுப் பிரச்சினை என்று தவிர்த்தவாறு தமிழ் மக்கள் மீது அடக்கு முறைகளைக் கையாண்ட ஸ்ரீலங்கா அரசு இன்னும் அதே நிலைப்பாட்டைக் கையாளாது செப்டெம்பர் 11ன் விளைவுகளைப் பயன்படுத்தி இனப் பிரச்சினையையும் எந்த வெளிநாடும் கையாளக் கூடியவாறு சிறந்த கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது.

அன்று இந்தியாவைத் திட்டித் தீர்த்த பேரினவாதிகள் இன்று இந்தியாவின் பிரதிநிதிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெற வேண்டும் என்று மனுச் செய்யும் அளவுக்கு இனப்பிரச்சினை பேரினவாதிகளால் உள்நாட்டுப் பிரச்சினை என்ற வரம்புக்கு அப்பால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

சமாதான நடவடிக்கைகளின் இன்றைய கட்டத்தில் கூட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதான இலக்காக இருப்பது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென்பதற்கு அப்பால் டோக்கியோ மாநாட்டு நிதியைப் பெறுவதே இதற்காகப் புலிகளால் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளே தற்போது தீவிரம் பெற்றுள்ளது.

அண்மையில் இலங்கை வந்து சென்ற யப்பானிய விசேட சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கொடையாளி நாடுகளையும் ஸ்ரீலங்கா அரசாங்கம் மற்றும் புலிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து மாநாடு நடத்த முற்பட்டார் அதனைப் புலிகள் புறக்கணித்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே உதவி என்பது மீண்டும் வலியுறுத்தப்ப ட்டிருக்கிறது.



நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சர் விதார் ஹெல்கிசன் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் இலங்கை வந்து தடைப்பட்டுப் போன சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபையை இறுக்கமாக வலியுறுத்திய அவ்வேளை விரைவில் தாம் தயாரிக்கும் பதில் வரைபு தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலேயே சமாதான நடவடிக்கைகள் தங்கியிருப்பதையும் தெளிவாக வலியுறுத்தினார்கள்.

நடந்து முடிந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாடுகளைச் சிறிலங்கா அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில் காட்டிய விடாக்கண்டன் கொடாக்கண்டன் நிலையே இடைக்கால நிர்வாக சபையைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாகப் புலிகள் தெளிவாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் தடைப்பட்டுப்போன பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது என்பது புலிகள் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ள பதில் வரைபிலேயே தங்கியுள்ளது. அரசாங்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை தொடர்பான வரைபுகளைப் புலிகள் முற்றாக நிராகரித்ததாக அறிவித்தது போல புலிகள் சமர்ப்பிக்கும் பதில் வரைபை அரசு நிராகரித்தால் சமாதான நடவடிக்கைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும்.

புலிகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக் கூடியதாக நிலம், பொலிஸ் அதிகாரம், சட்டமும் ஒழுங்கும், நிதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகப் பதில் வரைபைச் சமர்ப்பிப்பார்களென்றே எதிர்பார்க்கப்படுகிறது. அரசு சமர்ப்பித்து புலிகளால் நிராகரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை வரைபுக்கே ஜே.வி.பி. சிகல உறுமய, பொதுஜன ஐக்கிய முன்னணி கச்சை கட்டி எதிர்த்து வருகின்றன. இந்த நிலையில் புலிகளின் வரைபை ஏற்று சிறிலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடருமா? அதற்கான துணிச்சல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டா? என்பதே இப்போது பதில்காண வேண்டிய வினாக்களாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்று இருவருடங்கள் பூர்த்தியடைகின்றன. சமாதானப் பேச்சுவார்த்தையைக் காரணம் காட்டி மூன்று வருடத்தை இழுத்தடித்தது. ஆனால் சமாதானத்தின் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கக் கூடியவாறு அபிவிருத்தித் திட்டங்களையோ சம்பள அதிகரிப்பையோ,வழங்காத நிலையில் பொது மக்களின் அதிருப்திக்கும் தொழிற் சங்கங்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கும் மத்தியிலேயே இரண்டாவது வருடத்தை நகர்த்தி வருகிறது.

**ஜி.நடேசன்**

பொதுமக்களின் அபிப்பிராயத்தைத் தனக்குச் சாதகமாக்க வேண்டுமானால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு தடைப்பட்டுப்போன சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதிலேயே தங்கியுள்ளது. இடைக்கால நிர்வாக சபையை ஏற்றுக்கொள்ளுவதிலேயே சமாதான முயற்சிகளின் எதிர்காலம் தங்கியுள்ளது.

முன்னைய சமாதான முயற்சிகளை விட தற்போதுள்ள நடவடிக்கைகள் நீடித்த ஆயுள் நித்திய கண்டம் என்ற நிலையிலும் ஒரு வருடத்தைக் கடந்து நீடித்து வருகிறது. இதற்குக் காரணம் முன்னைய சமாதான நடவடிக்கைகளின் போது அரச தரப்பு இழுத்தடிப்புக்களைச் செய்த போது புலிகள் முறித்தார்கள். அதனைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு சமாதான விரோதிகளாகச் சர்வதேச மட்டத்தில் புலிகளைச் சித்தரித்தார்கள்.

இம்முறை புலிகள் மிகவும் பொறுமையாகக் காய்களை நகர்த்தி வருகிறார்கள். தற்போதய சமாதான முயற்சிகள் சிறிலங்கா அரசிற்குப் பலத்த சவாலாகவே அமைந்து வருகின்றன.

# வைத்திய ஊழியர் வேலை நிறுத்தம் அரசு நெருக்கடி நிலையில்!

(நமது நிருபர்)

சம்பள உயர்வுகோரி அரச வைத்தியசாலைகளில் சுகாதாரச் சேவை ஊழியர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக வைத்திய சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ் ஊழியர்களுக்குப் பதிலாக சிறிலங்காப் படையினரை சேவையில் தற்காலிகமாக அமர்த்திய போதும் இவை திருப்தியான சேவையாக அமையவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக அரசு நெருக்கடியான நிலையினை எதிர்நோக்கியுள்ளதுடன் இதனைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும் ஆராய்ந்து வருகிறது.

# 25வது வெள்ளி சிறப்பு இதழாக தமிழ்அலை!

அன்புடன் வாசகர்களுக்கு,

மிகக் குறுகிய காலத்தில் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் ஆழமாகத் தடம் பதித்துக் கொண்ட தமிழ் அலை வார இதழ் இன்று தனது 25வது இதழில் வெள்ளி சிறப்பு இதழாக அலை வீசுகிறது.

தென்தமிழீழத்தில் அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை மண்ணில் இருந்து தமிழ்அலை அலைவீசுவது தமிழ் மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் விடயம்.

தமிழ் பேசும் உறவுகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் துணிச்சலுடன் தட்டிக் கேட்கும் ஒரு நீதியாளனாக, கலாசார சீரழிவுகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் ஒருபாதுகாவலனாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சுவடுகளைப் பாதுகாக்கும் ஒரு காப்பகமாக, தமிழ்அலை தொடர்ந்து தமது பணியினைச் செய்யக் காத்திருக்கிறது. தமிழ்அலை தொடர்ந்து ஓசை எழுப்புவதற்குக் கல்விச்சமூகம் , புத்திஜீவிகள் உட்பட அனைத்து தரப்பு வாசகர்களுக்கும் தமிழ்அலை தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது தொடர்ந்து உங்கள் ஆதரவை ''தமிழ்அல்லக்கு'' வழங்குங்கள்.

-ஆசிரியர்.

# தமிழ்அலை 25வது வெள்ளி இதழ் விமர்சன ஆய்வரங்கு இன்று

(அரியம்)

கடந்த ஏப்ரல் 05ம் திகதி (05.04.2003) தொடக்கம் இன்று வரையும் வெளிவந்த 25 தமிழ்அலை வார இதழ்களையும் விமர்சனம் செய்யும் ஆய்வரங்கு இன்று காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தினால் அதன் தலைவர் இரா.துரைரெட்ணம் தலைமையில் இடம்பெறுகின்றது.

ஆய்வுரைகளைக் கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தகத்துறைத் தலைவர் கு.தம்பையா, ஊடகவியலாளர்,பா.சிவகுமார்,ஆகியோர் நிகழ்த்துவதுடன் சிறப்புரையாக ''தமிழ் ஊடகங்கள்'' பற்றி இராணுவ ஆய்வாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான த.சிவராம் உரையாற்றவுள்ளார்.

தமிழ்அலை வாசகர்களின் அபிப்பிராயங்கள் ஆலோசனைகள் என்பனவும் இக்கருத்தரங்கில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் ஏற்புரையினை பா. அரியநேத்திரன், நன்றி உரையினை சண்.தவராசா ஆகியோர் கூறவுள்ளனர். இதேவேளை இதுவரை காலமும் வார இதழாக வெளிவந்து அனேகமான வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற தமிழ்அலை நாளை மறுதினம் தொடக்கம் நாளிதழாக வெளி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் பொங்கு தமிழ்

வவுனியாவில் எதிர்வரும் செப்டெம்பர் 24ம் திகதி பொங்கு தமிழ் எழுச்சி நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு பொங்கு தமிழ் எழுச்சி வாரம் கடந்த செப்ரெம்பர் 17ம் திகதி ஆரம்பமானது.

இதேவேளை யாழ்பாணத்திலிருந்து 12அடி உயரமான பானை ஒன்று எடுத்துவரப்பட்டுள்ளது.இப்பானை கிராமம் கிராமமாகக் கொண்டு செல்வதற்கான அலங்கரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இம்முறை பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# போடியார் பொறிவெடி

**சமாதான முயற்சிக்கு எதிராக பௌத்த அமைப்புக்கள் சத்தியாக்கிரகம்** --செய்தி



**அப்ப காவிச்சட்டய கழட்டிப் போட்டு, காக்கிச்சட்டய போட்டுத்து ''புத்தம் சரணம் கச்சாமிக்கும் பதிலாக,, ''யுத்தம் சரணம் அச்சா ஆமி'' எண்டு சொல்லுங்கவன்....**

# வைத்திய ஆலோசனை விழிப்பூட்டல் கருத்தரங்கு

வைத்திய ஆலோசனைகள் சம்பந்தமான விழிப்பூட்டும் கருத்தரங்கு கடந்த செப்ரெம்பர் 17ம் திகதி முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ஜே. விஜயானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் கலந்து கொண்டு வைத்திய ஆலோசனைகள், நோய் பரவாமல் தடுக்கும் வழிமுறைகள் உட்பட பல்வேறு சுகாதாரம் சம்பந்தமான கருத்துரைகள் வழங்கினார். அதிபர், ஆசிரியர்கள், பொது மக்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று போலியோ தடுப்பு மருந்து

(எஸ். ரவீந்திரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று சனிக்கிழமையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18ம் திகதியும் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளதாகப் பதில் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வில்லியம் தெரிவித்தார்.

# அம்பாறைக்கு அகாசி வருகை மூவினங்களின் பிரச்சினைகளும் ஆராய்வு

(இரா துரைரத்தினம்)

இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கென ஜப்பான் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசேட சமாதானத்தூதுவர் யசூசி அகாஷி கடந்த வாரம் இலங்கை விஜயத்தின் ஒரு கட்டமாக அம்பாறைக்கும் வருகை தந்தார். பலசமூகங்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக மோதல்களும் , முறுகல் நிலைகளும் அடிக்கடி ஏற்பட்டு அப்பிரதேச மக்களின் இயல்புவாழ்க்கை பெரும் கேள்விக்குறியான நிலையில் யசூசி அகாசியின் அம்பாறை விஜயம் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்திருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் அம்பறை மாவட்டம் பல மோதல்களையும் கொந்தளிப்புக்களையும் சந்தித்திருக்கிறது.



தமிழ் மக்கள் முஸ்லீம்கள் மீதும், முஸ்லீம் மக்கள் தமிழர்கள் மீதும் சந்தேகம் கொள்ளும் அளவிற்கு பிரச்சினைகள் உருவாகின. சில அரசியல்வாதிகளும் இந்தப் பிரச்சினைகளை வளர்த்து தமது அரசியல் செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள முற்பட்டனர். இவ்வாறு முரண்பட்டுக் கொண்ட தமிழ், முஸ்லீம், சிங்கள, மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாகவே எண்ணிக்கொள்கின்றனர். ஒவ்வொரு சமூகத்தினரும் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், இழைக்கப்பட்ட அநீதிகளைச் சர்வதேச சமூகத்தின் முன் தெரியப்படுத்திவிட வேண்டும் என்ற வேகத்தை யசூசி அகாசி வருகைதந்திருந்த போது காணமுடிந்தது. அம்பாறை மாவட்டத்தில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவும், தமது வாழ்விடங்கள் முஸ்லீம்களால் பறிக்கப்பட்டு விட்டதாகவும் தமிழ் மக்கள் கூறும் அதேவேளை தமக்கு பல தொல்லைகள் ஏற்பட்டிருப்பதாக முஸ்லீம் தரப்பில் கூறப்படுகிறது. இவ்வாறு முரண்பட்ட சமூகங்களின் பிரச்சினைகளை நேரில் காண்பதற்காக வருகை தந்த ஜப்பான் தூதுவர் முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் நேரில் அறிந்து கொண்டார். அம்பாறைக்கு வருகை தந்த அவர் கல்முனையில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஷ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லீம் பிரதிநிதிகளையும், பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தலைமையிலான தமிழ் பிரதிநிதிகளையும், தமிழ் முஸ்லீம் மக்களைக் கொண்ட சமாதானக் குழுவினரையும் சந்தித்தார். இம்மூன்று தரப்பினரையும் தனித்தனியாக அவர் சந்தித்த போது தத்தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி விபரமாகக் கூறினர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் மகாசங்கம் ஜப்பானிய விசேட தூதுவரிடம் விரிவான மகஜர் ஒன்றையும் கையளித்தது. அம்பாறை மாவட்டத்தில் அடிக்கடி இடம்பெற்றுவரும் இன வன்முறைச் சம்பவங்களில் அதிகளவு பாதிக்கப்படுவது தமிழ்ச் சமூதாயமாகும். அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் இழந்தவை ஏராளம். அரசாங்கத்தின் அமைச்சராக இருக்கின்ற முஸ்லீம் அமைச்சர்களின் திட்ட செயற்பாட்டினால் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதாகவும், தமிழ் மக்கள் தங்கள் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு வருவதாகவும் தமிழர் மகாசங்கம் தெரிவித்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் இனவன்முறைகளின் போது உயிர்களையும் உடமைகளையும் அதிகம் இழந்தவர்கள் தமிழர்கள்தான்.

ஆனால் இவை வெளியில் வருவதில்லை. அம்பாறை தமிழர்கள் சொல்லொணா கஸ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். சில முஸ்லீம் அரசியல்வாதிகள் திட்டமிட்டு தமிழர்களுக்கான கல்வி, சுகாதார அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளை மறுத்துவருகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்கள் ஒருபுறம் முஸ்லீம்கள் மறுபுறம் தமிழ் மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து துரத்தி வருகின்றனர் என அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தமது ஆதங்கங்களை ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசியிடம் விளக்கிக் கூறினர். கல்முனை மஹ்முத் மகளிர் வித்தியாலயத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லீம் பிரதிநிதிகளை ஜப்பான் விசேட தூதுவர் சந்தித்த போது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்களே அதிகம் பாதிக்கப்படுவதாகக் கூறினர். பாதுகாப்பு, மீன்பிடி, வர்த்தகம், விவசாயம், ஆகிய விடயங்களில் முஸ்லீம்கள் எதிர்நோக்கும் பல்வேறு நடைமுறைப்பிரச்சினைகள் குறித்து முஸ்லீம் பிரதிநிதிகள் விளக்கினர். முஸ்லீம்களுக்கு பாதுகாப்பு பிரச்சினை ஏற்பட்டிருப்பதாகவும், சுதந்திரமாக அவர்கள் தொழில் செய்வதற்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்றும் முஸ்லீம்களின் எண்ணங்கள், அபிலாசைகளை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லீம் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கல்முனை வெஸ்லி கல்லூரி மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தலைமையிலான தமிழ் பிரதிநிதிகளை ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாசி சந்தித்தபோது முஸ்லீம் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களுக்கு எதிர்மறையான கருத்துக்களே தெரிவிக்கப்பட்டன. அம்பாறை மாவட்டத்தில் யுத்த காலத்தில் சிங்கள இராணுவத்தினராலும் முஸ்லீம் ஊர்க்காவல் படைகளாலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். திட்டமிட்ட படுகொலைகள் மூலம் தமிழர்களின் இருப்புக்கு சவால் விடுக்கப்பட்டது. சில கிராமங்களிலிருந்து தமிழர்கள் முற்றாக வெளியேற்றப்பட்டனர். அந்த இடங்களில் இன்று முஸ்லீம்கள் குடியேறியுள்ளனர். தமிழர்களின் பல காணிகள் முஸ்லீம்களாலும் சிங்களவர்களாலும் அபகரிக்கப்பட்டுவிட்டது என்பதை தமிழ் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதனையடுத்து அம்பாறை நகரில் சிங்கள மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தார். மூன்று இனங்களின் பிரதிநிதிக்ளையும் சந்தித்த பின் ஜப்பானிய விசேட தூதுவர் அகாசி கருத்து தெரிவிக்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் நிரந்தரத் தீர்வு

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# தேச விடுதலை அவாவி நிற்கும்

## அரசியல் விழிப்புணர்வு



பரிமாணத்தைத் திறம்பட எடுத்தியம்புகிறது. அடி முடி அறிய முடியாத அற்புதம் சர்வதேசத்துடன் கைலாகு கொடுக்கின்றது.

மிக வலுவான நிலையிலிருந்துகொண்டேசர்வதேச அனுசரணை மூலம் சிங்கள தேசத்துடன் சமாதானத்துக்கான சந்தர்ப்பம் ஒன்றை ''மீள் வழங்கல்'' செய்திருக்கின்றோம். சர்வதேச அரசியல் அரங்கிலே ஈழத்தமிழர் பிரச்சினைகளும், அபிலாசைகளும் ஆற அமர ஆனால் அட்சரப் பிசகின்றி அறிவிப்புச் செய்யப்படுகின்றன. அகாசியுடனான அண்மைய சந்திப்பில் கூட தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்கள், அவருக்கேயுரித்தானபாணியில் மக்கள் நலன் இயல்பு வாழ்க்கை சார்ந்த விடயங்களை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்துள்ளமை கவனிக் கத்தக்கது.

தமிழர் தேசத்தில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் நன் நோக்கில் செய்யப்பட்ட அமைதி பேணலை, சிங்கள தேசம் தன்னைக் கட்டியெழுப்புகிற ''கைங்கரி யத்தையே'' ஆற்றுகின்ற வேதனையைக் காண்கின்றோம். எமக்கான இயல்பு வாழ்க்கையை தேச விடுதலைப் போரை முன்னெடுத்த தேசத்தவர்களாகிய நாமே ஈட்டிக்கொள்ள வேண்டியதன் தேவை பெருவாரியாக உணரப்படுகின்றன. இதற்கு அறிவுசார் தெளிவுடன் கூடிய அரசியல் விழிப்புணர்வு மற்றும் அரசியல் அணி திரட்டல் பணிகள் நேர்த்தியாக அவசியப்படுகின்றன. ''அரசியல் விழிப்புணர்வு மூலம் தான் சுதந்திரப் போராட்ட உணர்வே எழுகின்றன'' என்று தேசியத் தலைவர் அவர்கள் முன்னம் கூறியது இக் கருத்தை நியாயப்படுத்துகின்றது. காலம் நம் கையில் தந்த் ஒளி விளக்கின் வைரவரியல்லவாஇது?

''உண்மையான இரும்புக் கோட்டை எது? பொது மக்களே, புரட்சியை உண்மையாகவும் விசுவாசமாகவும் ஆதரிக்கும் இலட்சோபலட்சம் பொதுமக்களே ஆவர்.இதுதான் உண்மையான இரும்புக்கோட்டையாகும். இதை எந்த சக்தியாலும் உடைப்பது சாத்தியமாகாது, சிறிதும் சாத்தியமாகாது. எதிர்ப்புரட்சியால் நம்மை நசுக்க முடியாது, அதற்கு மாறாக எதிர்ப்புரட்சியை நம்மால் நசுக்க முடியும். புரட்சிகர அரசாங்கத்தைச் சூழ இலட்சோ பலட்சம் மக்களை அணி திரட்டி, நமது புரட்சி யுத்தத்தை விரிவாக்கி, நாம் எதிர்ப்புரட்சி முழுவதையும் ஒழித்துக் கட்ட முடியும்'' என்றவாறுநவசீனத்தந்தை மாவேசேதுங் தனது உரையொன்றில் கூறியமை, விடுதலைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்படுவதன் மகத்துவத்தைக் காட்டுகின்றது.

அவனியே அறிந்திராத அதிசயிக்கத்தக்க அரங்கேற்றுக்காதைகளை அர்த்தமுடையதாக்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் அமைதிக்கான ஏற்பாட்டுக் காலத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. சர்வதேச அரசியல் மாற்றங்களுக்கேற்ப, தனித்துவம் திகழத்தக்க முறையிலே எமது போராட்டம் இன்று இராச தந்திர

போர் நிறுத்தக் காலம் ''சமாதானக் காலம்'' என்ற ரீதியில் மிக நாசுக்காக பிரசாரப்படுத்தப் படுகின்றது. எமது எதிரியினதும்ஏனைய ஆதிக்க சக்திகளதும் ''போதையூட்டல்''பல்வேறு வழிவகைகளிலும் எம் மக்கள் மத்தியில் பரவ விடப்படுகின்றது. வணிக மைய ஊடகங்களின் பரம்பல், அலங்காரப் பேச்சுக்கள், அரிதாரத் தோற்றங்கள் என எண்ணற்ற வகைகளில் எமது விடுதலை ஓர்மத்தைக் குலைக்கவென அன்னிய சக்திகள் அங்கலாய்க்கின்றன. அகலக்கால்பரப்பி ஆழ ஊடுருவுகின்றன. அதிக விழுக்காடானோர் இந்த அவலச்சகதியுள் மாய்வதிலிருந்து மீட்கப்பட்டேயாக வேண்டும் வியாசன் விளக்கமளித்தவாறு ''சிரம் தாழ்த்தா வாழ்வே எமக்கான சிம்மாசனம்''என்பது அவர்களுக்குப் பதியச் செய்யப்படுதல் அவசியமா கின்றது.

''துன்பப்படும் மக்களுக்குச் சேவை புரிவதே அரசியல்''என்று வரையறை செய்த தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மக்கள் அரசியல் விழிப்புணர்வு உடையவர்களாக்கப்ப டுவதன் தேவைப்பாட்டைப் பின்வருமாறு கூறுவதில் காணுங்கள்.

''ஒரு விடுதலைப் போராட்டத்தில் சாவும் அழிவும், துன்பமும் துயரமும் தவிர்க்க முடியாதவை. பெரிய தியாகங்கள் அர்ப்பணிப்புக்கள் புரிந்துதான் நாம் எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். சுதந்திரம் பெற்ற மக்களின் வரலாறு இதுதான். எத்தனை துன்பங்களை எதிர்கொண்ட போதும் எமது மக்களின் மனவுறுதி தளர்ந்து விடக்கூடாது. நம்பிக்கையீனம் தோன்றி விடக்கூடாது. மக்களுக்கு உறுதியும் நம்பிக்கையும் ஊட்டும் வகையில் எமது பிரசாரங்கள் அமைய வேண்டும்''

''வெல்லும் வரை வேகம் குறைந்தால் செல்லும் வழி திசை மாறிவிடும்''என்ற உணர்வின் வரிகளை உள்வாங்குகையில் மக்கள் எழுச்சிகளின் தேவை மீள மீள மேல்எழுகின்றது. மக்கள் அவ்வப்போது ஹர்த்தால்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகத் தமது எழுச்சிகளைக் காட்டி வந்ததை மறுப்பதற்கில்லை. மக்கள் அலைஅலையாக முன்வந்து பிரமாண்டமாக வெளிப்படுத்தத் தக்க செயற்பாட்டு எழுற்சிகள் பயனளிக்கும். சிங்களப் படையினரின் போர் கெடுபிடி களுக்கும் நெருக்குவாரங்களுக்கும் மத்தியில் பெரும் உணர்வலைகளை அரசியல் அதிர்வலைகளை உண்டு பண்ணிய தேசந்தழுவிய ''பொங்கு தமிழ்'' எழுச்சிகள் மீளவும் பொங்கிப் பிரவாகிக்கட்டும். உளவியல் ரீதியிலே இது ஒரு வகையான ''ஆற்றுப்ப டுத்தல்'' ஆவதைக் கண்டுணருங்கள்.

துரைமேகநாதன்

பொத்திப் பொத்திவைத்த விடுதலைக்கான உட்கிடக்கைகளை, விடுதலை வேணவாவை, ஆக்கிரமிப்புப் படையினருக்கு எதிரான எதிர்ப்புக்குரலை மிக வலுவாக ஒலிக்கச் செய்ய இவை ஏதுவாவதே மேற்படிக் கருத்துக்குக் காரணம். மக்கள் எழுச்சிகள் இயல்பாக, தன்னார்வாக மேற்கிளம்புவதே பயனளிக்கும். ஈழத்தமிழரின் உணர்வை உலகிற்கு உணர்த்துவோம், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நாங்கள் எங்கட வீட்ட போக வேணும், நீங்கள் உங்கட வீட்ட போங்கோ போன்ற மிக நியாயமான குரல்களை விண்ணதிர ஒலிக்கச் செய்ய அரசியல் ரீதியான அணிதிரட்டல்கள் வழிவகுக்க வேண்டும். ''தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்''என்ற மிகப் பரந்த மனப்பான்மை உணர்வு. சேரவெளிக்கிளம்ப இவை தேவையாகின்றன.

சர்வதேச சமூகத்திற்கும், சிங்கள மக்களுக்கும், தார்மீக ரீதியான எமது தாயக விடுதலைப்போராட்டத்தின் தாற்பரியத்தை விளக்குகின்ற, விளக்க முற்படுகின்ற நாங்கள் எம்மிடையே மிகப் பரந்தளவிலான அரசியல் விழிப்புணர்வை வரலாற்றுத் தெளிவுடன் கொண்டிருப்பதே எமது பரப்புரைப்போரை மேலும் வீச்சுடைய தாக்கும். ''பொங்கு தமிழ் ''எழுச்சி ஏற்படுத்திய எமது பல்கலைக் கழகச் சமூகங்கள் இவ் விடையத்தில் காத்திரமான பணியாற்ற விளைய வேண்டும்.ஊர்கூடித் தேர் இழுக்க வேண்டும்.

மக்களை முன்னிலைப் படுத்திய குழுக்களின ஆக்கபூர்வமான தோற்றம் நன்மையளிக்கும் ஒரு வலுவான கட்டுமானம் ஆக ''தேசிய எழுச்சிப் பேரவை ''அண்மையில் தோற்றம் பெற்றுள்ளமை ஒரு நல்ல அடையாளம். ''தமிழீழத்தில்,தமிழ் பேசும் மக்களினதும் தேசிய ஆன்மாவை வெளிப்படுத்தும் மக்கள் அமைப்பாகத் தேசிய எழுச்சிப் பேரவை முகிழ்ந்துள்ளது. அம் மக்களின் அடிமன விருப்புக்களை ஆற்றுப்படுத்தி, அவர்களின் உரிமைவாழ்வு, விடுதலை வாழ்வு, சுதந்திர வாழ்வு, என்பனவற்றைக் குறியாகக் கொண்டு, தமிழ் பேசும் மக்களின் தாயகம்,தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றை வென்றெ டுக்கும் முனைப்புடன் தேசிய எழுச்சிப் பேரவை உருவாக்கம் பெற்றுள்ளது'' என்று இதன் விளக்கத்தை சு.அரசண்ணா அவர்கள் ''விடுதலைப்புலிகள்''(ஆடி-ஆவணி, 2003)ஏட்டில் எழுதியுள்ளதிலிருந்து அறியக்கிடைக்கிறது. மக்கள் மேன்பாட்டுக் குழுக்கள், மக்கள் பெருமன்றம் போன்ற நமது பிரதேச அமைப்புக்களும் இத்தகைய பணியை நல்கும்.

''போர் எழுச்சிக்குழு''எனும் மகுடத்தின் கீழ் 1999அளவில் வன்னிப் பகுதியில் மக்கள் ஒன்றிணைந்ததைத் போன்று மக்கள் எழுச்சி அமைப்புக்கள் எழுவது தற்போது காணமுடிகிறது. தேசத்தின் பல்துறை சார் மீள் கட்டியெழுப்பல்களுக்கு அரசியல் விழிப்புணர்வின் அவசியம்

போரியல் நோக்கில் மட்டுமன்றி மிகக் கனதியானது, பயனுறுதி வாய்ந்தது. பொருண்மியம், சமூக நோக்கிலும் இது பயனுடையது.

தேச விடுதலை அவாவி நிற்கும் அரசியல் விழிப்புணர்வை அடையாளம் கண்டு கொள்கின்ற நாம், இன்றைய அரசியல் கள நிலவரத்தில் வழங்கும் செய்திதான் என்ன? மேற்படி ஏட்டில் ''மௌனம் பேசும் மொழி'' எனுந்தலைப்பில் ''செந்தோழன்'' செப்பிய சில வரிகளையே நாமும் பின்வருமாறு உரத்துக் கூறுவோம்.

**"இப்போது**
**ஆற்றைக் கடப்பதற்கு**
**நாங்கள் படகு கேட்கிறோம்**
**கொடுக்கப் படுமானால்**
**பயணிப்போம்**
**மறுக்கப்படுமானால்**
**மறுபடியும் நீந்துவோம்**
**எங்களின் இலக்கு**
**எப்படியாயினும் எங்கள்**
**கரையடைதல்!"**

□□□

# சரியா! தப்பா!

## முஸ்லிம் தலைமைகள் சிந்திக்க வேண்டும்?

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான காய் நகர்த்தல்கள் நகர்த்தப்பட்டு வரும் சூழ் நிலையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தரப்பு அரசியல் வாதிகள் மேற் கொண்டு வரும் விசமப் பிரசாரங்கள் அரசியல் தீர்வு காண்பதற்கான சாத்தியப்பாடுக ளைத் திரைமூடி மறைந்து வருகின்றன.

1.அம்பாறை மாவட்டத்தில் தென்கிழக்கு அலகு கோரிக்கையை வலியுறுத்தல்.
2.வடக்கு கிழக்கு மாகாணத்தை இரு கூறுகளாகப் பிரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது.
3. சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை மேசைகளில் சம தரப்பாக தமது பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டும் என முஸ்லிம் கட்சிகள் வலியுறுத்துவது.
4. விடுதலைப்புலிகள் மீது முஸ்லிம் தரப்பு அரசியல் வாதிகள் சுமத்திவரும் வீணான குற்றச்சாட்டுக்கள் என்பன சமாதான முன்னெடுப்புக்களைப் பாதித்து வருகின்றன.

தமிழினத்தின் உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த போது பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் மாவீரர்களாகியுள்ளனர். இந்த மாவீரர்களின் குருதிச் சுவட்டில் நின்று சர்வதேச சமுகத்தின் ஆதங்கத்துடன்அரசியல் களத்தில் நிற்கும் விடுதலைப்புலிகளுடன் அரியாசனம் கேட்கும் முஸ்லிம் அரசியல் வாதிகளின் கூற்று ஏற்க முடியாத நியாயப்படுத்த முடியாத விடயம் ஆகும்.

கிழக்கு மாகாணம் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் வாழும் மாகாணம் மதம், கலாசாரங்கள் இங்கு வேறுபட்டு நின்றாலும் மொழியால் ஒன்றுபட்டு நிற்பவர்கள். இந் நிலையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பேச்சு வார்த்தைகள் மூலம் வென்றெடுக்கப்படுமாயின் அதில் முஸ்லிம் சமூகம் ஓரங்கட்டப்படமாட்டாது.

தமிழ் இனம் எவ்வாறான உரிமைகளுடன் சுதந்திரமாக வாழமுடியுமோ அதே உரிமைகள் முஸ்லிம் தரப்புக்கும் வழங்கப்படும் இந்த விடயத்தில் விடுதலைப்புலிகளின் தலைமை தொடக்கம் பிராந்தியத் தலைவர்கள் வரை உறுதியாக இருக்கின்றனர். சிறிலங்கா அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையையடுத்து தமிழீழத் தேசியத்தலைவருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் ஓர் உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இவ்வுடன் படிக்கை மூலம் முஸ்லிம் சமூகத்தின் சகல அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமையை சிதறடித்து சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு தீனி போடும் சில சத்திகள் விடுதலைப்புலிகள் மீது அபண்டமான பழி சுமத்தி வருகின்றனர்.

முஸ்லிம் மக்களை கடத்துதல், வாகனங்களை வழிப்பறித்தல்,வரிவசூலித்தல் போன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதிலிருந்து தாம் விடுதலைப்புலிகள் அமைப்பினால் கட்டுப்படுத்தப்படுவதாகத் தெரிவித்து சர்வதேச சமூகத்தின் பார்வையை தம்மீது திசை திருப்புவதே இத்தீய சக்திகளின் நோக்காகும். உண்மையில் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விளங்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் பேசித்தீர்க்க வேண்டிய பிரச்சினைஇனப் பிரச்சினை இதில் முஸ்லிம் சமூகமும் ஒரு தரப்பாக பங்கு பற்றுவது தமிழீழ விடுதலைப்புலிகளின் இருபது வருட போராட்ட வெற்றியின் பெறுமதியை நலிவடைய செய்யும் செயலாகும் என தமிழ் மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இதே சமயம் கடந்த போர்ச் சூழலில் தமிழ் இனம் சந்தித்தது போன்ற பாரிய இன்னல்களையும் துயரங்களையும் முஸ்லிம் சமூகம் சந்திக்கவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய விடயம்.

தற்போது போர் ஓய்வு நிலை புரிந்துணர்வுடன்படிக்கையின் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பணிகளை முன்னெடுத்து வரும் வேளை முஸ்லிம் மக்களுடனான இன ஐக்கியத்தை பலப்படுத்தும் முயற்சியில் கிழக்கு மாகாண விடுதலைப்புலிகளின் தளபதிகள், அரசியல் பொறுப்பாளர் கரிசனை காட்டி வருகின்றனர். இருந்த போதிலும் இன முரண்பாடுகளை வளர்க்கக் கூடிய இனவாத பிரசாரங்களும் அதே போன்ற கருத்து செறிவான துண்டுப் பிரசுரங்களும் முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து வெளியாவது வேதனைக்குரியது. கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி, ஏறாவூர் ,, கல்முனை, நிந்தவூர் போன்ற பிரதேசங்களில் புதிய புதிய முஸ்லிம் அமைப்புக்களின் பெயர்களுடன் வெளியாகும் இத் துண்டு பிரசுரங்கள் மற்றும் அறிக்கைகள் என்பன. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிரான கருத்துக்கள் கொண்டிருக்கின்றன. இவற்றின் பின்னணியில் பல அரசியல் வாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக தகவல்கள் கசியத்தொடங்கியுள்ளது.

முஸ்லிம் களிடையே ஒரு ஆயுதக் குழுவை பலப்படுத்துவதற் குரிய வகையில் இத்துண்டுப் பிரசுரங் தூண்டுவதாகவும் தெரிவிக்கப்ப டுகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்

**வேணிதன்**

நிலையில் கூட விடுதலைப்புலிகளோ அல்லது வேறு பொது அமைப்புக்களோ முஸ்லிம் மக்களை புண்படுத்தும் வகையிலான எந்தத் துண்டு பிரசுரங்களையோ அல்லது அறிக்கைகளையோ விடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த வர்த்தகப் பிரதிநிதிகளை மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் கரடியனாறு "தேனகத்தில்" சந்தித்து கலந்துரையாடினார். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்களில் முஸ்லிம்கள் எவ்வித தங்கு தடையுமின்றி தமது வியாபார



நடவடிக்கைகளை தொடர முடியும் என சிறப்புத்தளபதி ரமேஸ் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறினார். இதே வேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களது நெற் காணிகளை மீள அவர்களே செய்கை பண்ணுவது தொடர்பாகவும் பல சந்திப்புக்கள் இரு தரப்புப் பிரதிநிதிகளிடையே இடம் பெற்றுள்ளது.

இப் பேச்சுக்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு இன ஐக்கியம் வலிமையடைந்து வரும் நிலையில் சிங்கள,தமிழ் இனப்பிரச்சினை போன்று வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்களுக்கும் சிறு பான்மையாக வாழும் முஸ்லீம்களுக்கும் இடையில் மற்றொரு இனப்பிரச்சினை இருப்பது போல முஸ்லிம் அரசியல் வாதிகள் சோடனை செய்வதும் அதை சர்வதேசத்தின் கவனத்திற்கு ஈர்த்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடுவதும் வேதனைக்குரியது.

உண்மையில் உலகம் இன்று தமிழினம் சிங்கள இனத்தினால் அடக்கப்பட்டு,ஒடுக்கப்பட்டு அரசியல் உரிமைகள் மறுதலிக்கப்பட்ட நிலையில் இருப்பதை உணர்ந்துள்ளது.

அத்தகைய ஒரு சூழ்நிலை முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படவில்லை என்பது உண்மை எனவே அதாவுல்லா, ஹிஸ்புல்லா, பேரியல் அஷ்ரப், ரவூப்ஹக்கீம்...... போன்ற முஸ்லிம் அரசியல் வாதிகள் தமது சமூகத்தை தவறான ஒரு வழிக்கு இட்டுச் செல்லாது இந்தப் போர் ஓய்வு நிலையில் மேற்கொள்ளப்படும், முன்வைக்கப்படும் இடைக்கால நிர்வாக சபையோசனைகள், கோரிக்கைகள் என்பவற்றை வலுவூட்டும் சத்திகளாக தங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

மாறாக முஸ்லிம் தலைமைகளினால் தான் இந்த சமாதான நகர்வுகள் தடைப்பட்டு போனது என்ற பழிபாவங்கள் ஏற்படக்கூடாது என்பதே இக்கட்டுரையாளரின் நோக்கமாகும்.

□□□

## சொன்னாலும் குற்றம்



கத்தரிக்காய் கறியும், மரவெள்ளிச் சொதியும், பப்படப் பொரியலும், தயிரும் சோறும் பருமாறிய ஒரு இடத்தில போன கிழமை "கோழிப் புரியாணி சாப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

நம்மட மாவட்டத்து இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற திருமண விழாவின் போது இவ்வாறு இந்து கலாசாரத்திற்கு முரணான மாமிச உணவுகள் வழங்கப்பட்டது பலரின் கவனங்களையும் ஈர்த்துள்ளது.

பணம் செலுத்தி மண்டபத்தை பெற்றவர்கள் எப்படியான உணவு வகைகளையும் வழங்க முடியும் அதில் எந்தத் தப்பும் இல்லை ஆனால் காசிக்காக கலாசாரத்தை சீரழிக்கக் கூடாது இந்துசமய அமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அமைந்துள்ள இந்த மண்டபத்தில் இவ்வாறான மாமிச உணவுகளை உண்ணாமல் இருக்க பார்த்துக் கொள்ள வேண்டியது மண்டபத்தைக் கொடுப்பவர்களின் பொறுப்பு எனப் பலரும் கதைக்கின்றனர்.

மாமாங்கப் பிள்ளையார் கோயிலின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் சென்று இப்படியான இந்து கலாசார மனிதர்கள் பாடம் படிக்க வேண்டும் என்று சொல்வதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

காத்தான்குடிக்குப் பக்கத்து ஊர் என்பதற்காக நமது கலாசார மண்டபத்தில் மாமிசம் புசிக்க முடியுமா, என இந்துக்கள் புறுபுறுப்பதிலும் தவறில்லை தானே...

# இலங்கையின் பத்திரிகை வரலாற்றில் பின்னே நிற்கும் மட்டக்களப்பு

இலங்கையின் ஊடகத்துறை வளர்ச்சி சர்வதேச மட்டத்திற்கு உயரவில்லையாயினும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது எனலாம். 1802ம் ஆண்டிலிருந்து இலங்கையில் பத்திரிகைத்துறையின் வரலாறு ஆரம்பமாகிறது. 200வருடங்களைக்கொண்ட இலங்கையின் பத்திரிகைத்துறை அல்லது ஊடகத்துறை வரலாற்றில் மட்டக்களப்பு மாநிலம் எங்கே நிற்கிறது என்பதை இங்கு பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 1802ம் ஆண்டில் "சிலோன் கசற்" என்ற இலங்கை வர்த்தமானிப்பத்திரிகை வெளிவந்த போதிலும் 1841ம் ஆண்டு ஜனவரி 7ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த உதயதாரகை பத்திரிகையே முதலாவது தமிழ்ப் பத்திரிகை என கூறப்படுகிறது. இதனைத்தொடர்ந்து 1876ல் பாதுகாவலனும், 1889ல் இந்து சாதனமும் வெளிவந்தன. சமய பிரசார நோக்கில் இவை ஆரம்பிக்கப்பட்டாலும் பல்வேறு செய்திகளை, கலை இலக்கிய ஆக்கங்களைத் தாங்கி இவை வெளிவந்தன. யாழ்.குடாநாட்டின் கல்வி, பொருளாதார வளர்ச்சி காரணமாக வாசிப்புப் பழக்கம் இலங்கையில் எந்த பாகத்திலும் இல்லாத அளவிற்கு அங்கு வளர்ச்சி பெற்றதன் காரணமாக பத்திரிகை வெளியீடுகள் அதிகரித்தன. 1890ம் ஆண்டு வெளிவந்த மாணவன் தொடக்கம் இன்று வெளிவரும் தமிழ்அலை வரையான நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக்கொண்ட மட்டக்களப்புத் தமிழக பத்திரிகைத் துறை வளர்ச்சி பற்றி ஆராய முற்படும் ஒருவருக்கு மிகவும் வேதனை தரும் விடயம் இந்த பத்திரிகைகள் எவையுமே மட்டக்களப்பு மாநகர பொதுநூலகத்திலோ அல்லது வேறு எங்குமோ சேகரித்து பாதுகாக்கப்படவில்லை என்பதாகும். மட்டக்களப்பு பிரதேசப் பத்திரிகைத்துறை வளர்ச்சி அல்லது சஞ்சிகை வளர்ச்சி பற்றி ஏற்கனவே வெளிவந்த சில கட்டுரைகளில் (தேனகம், விடிவானம்) புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையினால் 1932ல் வெளியிடப்பட்ட கிழக்குத் தபால் என்ற பத்திரிகையே மட்டக்களப்பின் முதலாவது பத்திரிகை என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இது தவறான தகவலாகும். 1890ல் எம்.எஸ் பாவாவை ஆசிரியராகக்கொண்டு மாணவன் என்ற பத்திரிகை வெஸ்லியன் மிசனரிமாரால் மட்டக்களப்பிலிருந்து வெளியிடப்பட்டது. மட்டக்களப்பு தமிழகத்திலிருந்து வெளிவந்த முதலாவது பத்திரிகை இதுவாகும். மட்டக்களப்பு மாநிலத்தின் வளங்கள், வரலாறுகள், செய்திகளை தாங்கி இது வெளிவந்தது. கிறிஸ்தவ பிரசார பத்திரிகையாக இருந்த போதிலும் ஏனைய செய்திகளுக்கும் இதில் இடம் அளிக்கப்பட்டது. மாணவன் என்ற பத்திரிகை வெளிவந்து 40வருடங்களின் பின் 1932ல் கிழக்கு தபால் என்ற பத்திரிகையை புலவர்மணி ஏ.பெரியதம்பிபிள்ளை வெளியிட்டார். இதனைத்தொடர்ந்து வேதநாயகம் பாதிரியாரால் தீபம் என்ற பத்திரிகையும், எஸ்.டி.சிவநாயகம் உதயம் என்ற பத்திரிகையையும் 1942லும் வெளியிட்டனர். இதுதவிர என்.செபரத்தினம் 1950ல் பாரதி என்ற மாத இதழையும், 1960ல் நீலாவணன் பாடும்மீன் என்ற மாத இதழையும், 1969ல் பி.வி.கந்தையா கல்முனையிலிருந்து தலைவன் என்ற மாதஇதழையும் 1970ல் இரா.நாகலிங்கம் (அன்புமணி) மலர் என்ற மாத இதழையும் வெளியிட்டனர். 1970ல் அகமட் சாலி என்பவரால் திலகம் என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. இரா.நாகலிங்கத்தால் வெளியிடப்பட்ட மலர் சஞ்சிகை 10இதழ்கள் மட்டுமே வெளிவந்தாலும் பல இளம்எழுத்தாளர்களுக்கு களம் கொடுத்த பெருமை அதற்கு உண்டு.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் மிக நீண்டகாலம் தொடர்ச்சியாக வெளிவரும் சஞ்சிகை என்ற பெருமையை மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட நிலையத்தால் 1971ம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்டு வரும் தொண்டன் சஞ்சிகை பெற்றுக் கொள்கிறது. மட்டக்களப்பு திருமலை ஆயர் இல்லத்தினால் வெளியிடப்படுவதன் காரணமாக பொருளாதார ப்பிரச்சினைகள் இன்றி இது தொடர்ந்து வருகிறது . இதன்பின்னர் 1981ல் கண.மகேஸ்வரன் தாரகை என்ற சஞ்சிகையை வெளியிட்டார். 1984வரை 12இதழ்கள் வெளிவந்த தாரகை சிறுகதை, கவிதை, இலக்கிய கர்த்தாக்களின் பேட்டிகள், விமர்சனங்கள் என தரமான இலக்கிய சஞ்சிகையாக வெளிவந்தது. நகைச்சுவை எழுத்தாளர் ரி.பாக்கியநாயகத்தை ஆசிரியராகக் கொண்டு சுமைதாங்கி என்ற கிறிஸ்தவ சஞ்சிகை 1983ல் வெளிவந்தது. 1983 காலப்பகுதியில் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த இலக்கிய தரம்மிக்க சஞ்சிகைகளில் ஒன்று களம் ஆகும். வாரித்தம்பியை ஆசிரியராக கொண்டு வெளிவந்த இச்சஞ்சிகை 5இதழ்களுடன் நின்று போனாலும் பின்னர் 1996ல் அக்கரைப்பற்றிலிருந்து புதுப்பொலிவுடன் வெளிவந்தது. ஆனாலும் அதுவும் சில இதழ்களுடன் நின்றுவிட்டது. 1986ல் விபுலானந்தா பட்டப்படிப்புக்கள் நிறுவனத்தின் வெளியீடாக வயல் வெளிவந்தது. பின்னர் கவிஞர் சாருமதி வயலை தனியாக நடத்தினார். காலாண்டு சஞ்சிகையாக வெளிவந்த இது 1993வரை இடையிடையே வெளிவந்து கொண்டிருந்தது. கவிஞர் சாருமதியின் மறைவுடன் வயல் நின்றுவிட்டது. 1990ம் ஆண்டு ஏற்பட்ட சமாதான காலத்தில் மேமாதத்தில் கொண்டல் என்ற வாராந்த பத்திரிகை வெளிவந்தது. வீ.சு.கதிர்காமத்தம்பி, வர்ணகுலசிங்கம் ஆகியோரை ஆசிரியராக கொண்ட கொண்டல் முழுக்க முழுக்க செய்தி பத்திரிகையாகவே வெளிவந்தது. எட்டுப்பக்கங்களைக்கொண்ட இப்பத்திரிகை மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஐந்து இதழ்கள் மட்டும் வெளிவந்த நிலையில் ஜூன் 10ம் திகதிக்கு பின் யுத்தம் மூண்டதால் கொண்டலின் வருகையும் நின்றுவிட்டது. 1990க்குப்பின்னர் மட்டக்களப்பில் இலக்கிய மறுமலர்ச்சி ஒன்று ஏற்பட்டது. படி பூவரசு, வெட்டாப்பு, விடிவானம், அரங்கம், தேனி, மலரும் வாழ்வு, கிழக்கொளி, தென்றல் என பல சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் வெளிவந்த போதிலும் அவை நின்று நிலைக்க முடியாமல் போய்விட்டது. 1993ம் ஆண்டு காலப்பகுதியில் வெ.தவராசாவை பிரதம ஆசிரியராக கொண்டு படி சஞ்சிகையும், 1994ல் கவிஞர் வாசுதேவனை ஆசிரியராக கொண்டு பூவரசு சஞ்சிகையும் வெளிவந்தன. 1995ல் விடிவானம் செய்திப்பத்திரிகை வெளிவந்தது. மாதம் இருமுறை வெளிவந்த இப்பத்திரிகை 1997 டிசம்பர் வரை வெளிவந்தது. இப்பத்திரிகையின் ஆசிரியராக வீ.சு.கதிர்காமத்தம்பியும் பின்னர் இரா.துரைரத்தினமும் பணியாற்றினர். 1998 ஜனவரி முதலாம் திகதி இரா.துரைரத்தினத்தை ஆசிரியராக கொண்டு தினக்கதிர் வாரவெளியீடு வெளிவந்தது. இப்பத்திரிகை பின்னர் 2000 ஏப்ரல் 14ம் திகதியிலிருந்து எஸ்.எம்.கோபாலரத்தினத்தை பிரதம ஆசிரியராக கொண்டு தினசரிப்பத்திரிகையாக வெளிவந்தது. மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த முதலாவது தினசரி பத்திரிகை தினக்கதிர் ஆகும். மட்டக்களப்பு பத்திரிகைத்துறை வரலாற்றின் புதிய வரவுதான் இன்றைய தமிழ்அலை ஆகும். வாரப்பத்திரிகையாக வெளிவரும் தமிழ்அலையின் 25 இதழ்கள் இதுவரை வெளிவந்திருக்கிறது. தமிழர் தாயகத்தின் மற்றொரு பிரதேசமான யாழ்.குடாநாட்டில் பல பிராந்திய பத்திரிகைகள் உருவாகுவதற்கும், அவை நின்று நிலைப்பதற்கும் அங்கு வாசகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பே முக்கிய காரணமாகும். ஆனால் வாசிப்பு பழக்கம் குறைவே கிழக்கில் பத்திரிகைகளோ சஞ்சிகைகளோ நின்று நிலைக்க முடியாமல் போனமைக்கான பிரதான காரணம் என்ற கசப்பான உண்மையையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மாற்றுக்கொள்கைக்கான நிலையம் அண்மையில் நடத்திய கணிப்பீடு ஒன்றின் படி யாழ்.மாவட்டத்தில் 59.7வீதமான மக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 13.7 வீதமான மக்களும் பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளனர். ஆனால் தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம் எதிர்மறையாகவே உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 43.7வீதமானவர்களும், யாழ்.மாவட்டத்தில் 7 வீதமானவர்களும் தொலைக்காட்சி பார்க்கும் பழக்கத்தை கொண்டிருக்கின்றனர் என மாற்றுக்கொள்கைக்கான நிலையம் நடத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**இரா. துரைரத்தினம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5இலட்சத்திற்கு மேற்பட்ட சனத்தொகை காணப்படுகின்ற போதிலும் தினசரி 2ஆயிரத்திற்கு குறைவான பிரதிகளே விற்பனையாகிறது. இதேசனத்தொகையைக்கொண்ட யாழ்.மாவட்டத்தில் 34ஆயிரம் பிரதிகள் தினசரி விற்பனையாகின்றன. தனித்துவமான கலை கலாசார பாரம்பரியங்களைக்கொண்ட ஒரு சமூகத்தில் அல்லது பிரதேசத்தில் அதற்கென பிராந்தியப் பத்திரிகைகள் வெளிவரவேண்டியதன் அவசியம் உணரப்பட்ட நிலையில் தமிழ்அலையின் வரவு பற்றி பல எதிர்பார்ப்புக்கள் உண்டு. சுமார் 50 வருடங்களுக்கு முன்பே வடக்கில் பிராந்தியப்பத்திரிகை தோற்றம் பெற்றுவிட்டது. அங்கு ஐந்து பத்திரிகைகள் தினசரியாக வெளிவந்துகொண்டு இருக்கிறன. (யாழ்ப்பாணத்தில் உதயன், வலம்புரி, நமதுஈழநாடு, தினக்குரல், வன்னியில் ஈழநாதம்) கிழக்கில் இன்னமும் பிராந்திய தினசரிகள் ஏன் வேர் ஊன்றவில்லை என்பதற்கான காரணங்கள் ஆராயப்படவேண்டும். கிழக்கின் பிராந்திய பத்திரிகைக்கான தேவையை நிறைவு செய்யத் தமிழ்அலை தன்னை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களும் தயாராக வேண்டும். தமிழ்அலை மட்டுமல்ல இன்னும் பல பத்திரிகைகள் வெளிவரவேண்டும். அப்போதுதான் ஆரோக்கியமான சமூகம் ஒன்றை நாம் கட்டிஎழுப்ப முடியும்.

◻◻◻◻




## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

**கந்தர்:-** இண்டைக்கு தமிழ்அலையின் 25வது இதழ் விமர்சன ஆய்வரங்காம் போயப் பார்கல்லையா மச்சான்

**கலந்தர்:-** ஆறு மாத காலத்தில அமோக வளர்ச்சி எலுவா? தமிழ்அலைக்கு....

**கந்தர்:-** அதுக்காகத்தானே "கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்" இந்த நல்ல காரியத்த செய்யிது.

**கலந்தர்:-** ஆரு என்னத்த சொன்னாலும் தமிழ்அலை தனியிடத்தப் புடிச்சித்து...

**கந்தர்:-** உங்களப் போல வாசகர்களிட்ட ஆசீர்வாதம் இருக்கிறத்தால தான் நாளையண்டயில இருந்து தினசரியாக வரப்போகுது...

**கலந்தர்:-** தமிழ்பேசும் மக்களின் உணர்வலை"தினமும் வீசத்தான் வேணும்....

**கந்தர்:-** செல்லிப்போட்டு இரியாம வாங்கிப் படிக்கோணும் தெரியுமா,

**கலந்தர்:-** எல்லாரும் "தமிழ்அலை" படிக்கத்தான் போறம்.

## இந்தியாவும் ஈழத்தமிழரும்

"இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்தியாவிற்கும், ஸ்ரீலங்காவுக்கும் இடையிலான ஓர் இராணுவ ஒப்பந்தம். தமிழரின் சுதந்திர இயக்கத்தையும், - அதற்குத் தலைமைதாங்கும் முன்னணிப் படையான விடுதலைப் புலிகளையும் ஒழித்துக்கட்டுவதுதான், இந்த இராணுவ ஒப்பந்தத்தின் இலட்சியம்."

*- தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்*

# ஆயுதங்கள் அதிகாரச் சின்னமல்ல; அரசியல் இலக்கை அடையத் துணைசெய்கின்ற கருவிகளே

*- வே.பாலகுமார்*



இந்திய அமைதிகாக்கும் படைகள் தமிழீழத்தில் நிலைகொண்டிருந்த போது, ஈழத்தில் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருந்த ஒவ்வொரு தமிழ் அமைப்புக்களும் எப்படியான

**- நிராஜ் டேவிட்-**

நிலைப்பாடுகளை எடுத்திருந்தன என்பது பற்றி கடந்த சில வாரங்களாக இத் தொடரில் பார்த்து வருகின்றோம்.

விடுதலைப் புலிகள் இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருந்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, ஈ.என்.டீ.எல்.எப். போன்ற அமைப்புக்கள் முற்றுமுழுதாகவே இந்தியப்படைகளுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை எடுத்திருந்தன. 'புளொட்' அமைப்பினரோ ஸ்ரீலங்கா அரசுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, ஸ்ரீலங்காப் படைகளுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்திருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில், ஈழ மாணவர் புரட்சிகர அமைப்பான 'ஈரோஸ்' அமைப்பு எப்படியான நிலைப்பாட்டை எடுத்திருந்தது என்பது பற்றியும் ஆராய்வது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாகின்றது.

**'இந்து' நாளிதழுக்கு பாலகுமார் வழங்கிய செவ்வி:** இந்திய அமைதிகாக்கும் படை தொடர்பாகவும், இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாகவும், 'ஈரோஸ்' அமைப்பு கொண்டிருந்த நிலைப்பாட்டை, அந்த அமைப்பின் புரட்சிகர நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வி.பாலகுமார் அவர்கள், இந்தியாவின் பிரபல 'இந்து' ஆங்கில நாளிதழுக்கு வழங்கியிருந்த செவ்வி ஒன்றில், தெளிவுபடுத்தியிருந்தார். 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் வெளியான அந்தப் பத்திரிகைப் பேட்டியில் கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கான பாலகுமாரின் பதில்களும்:

**கேள்வி:** ஆயுத ஒப்படைப்பு பற்றி...

பதில்: முதலில் நான் 'இந்திய அமைதிகாக்கும் படை' இலங்கைக்குச் சென்றதைப் பாராட்டியாக வேண்டும். எங்கள் பகுதிகளில் அமைதியை நிலைநிறுத்த இந்தியப்படைக்கு உதவி புரியுமாறு எங்கள் தோழர்களுக்கு நாங்கள் ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளோம். அமைதியை நோக்கிய இந்தியப்படையின் முயற்சிகளுக்கு எங்கள் தோழர்கள் ஒருபோதும் தடங்கலாக இருக்கமாட்டார்கள் என்பதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க முடியும். இந்திய அமைதிகாக்கும் படையினரிடம் எங்கள் ஆயுதங்களை ஒப்படைப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்திய அரசு எமது கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொள்ளவேண்டும்.

**கேள்வி:** என்ன கஷ்டங்கள்?

பதில்: கடந்த பத்து வருடங்களாகப் போராடிவரும் எமது தோழர்களை, திடீரென்று ஆயுதங்களைக் கீழே போடுவதற்கு ஒப்புக்கொள்ளச் செய்வது அவ்வளவு சுலபமான வேலையல்ல. எங்கள் தோழர்கள் தங்கள் மனங்களிலும் ஆயுதங்களைத் தரித்திருக்கின்றார்கள். இந்தப் போராட்ட உணர்வே எங்கள் தோழர்களுக்கும், மக்களுக்கும் ஒரு பாதுகாப்புக் கேடயமாக விளங்குகின்றது. அதனால்தான் சாதகமான ஒரு சூழல் உருவாகாத இந்த நேரத்தில் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு எமது தோழர்களின் இசைவைப் பெறுவது எழிதான, சுலபமான வேலையல்ல என்று கூறினேன். எதுவாயினும் சரி, நான் இங்கு ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். நாம் ஆயுதங்களின் பின்னால் பித்துப்பிடித்துத் திரியவில்லை.

ஆயுதங்கள் என்பதற்காகவே அவற்றை நாம் ஏந்தியிருக்கவும் இல்லை. எங்களின் சக்தி ஆயுதங்களுக்குள் மாத்திரமே அடங்கியிருக்க வில்லை. அதாவது எங்களுக்கு ஆயுதங்கள் வெறும் அதிகாரச் சின்னமல்ல. உண்மையைச் சொல்வதானால், எங்களின் மகத்தான அரசியல் இலக்கை அடையத் துணைசெய்கின்ற கருவிகளே ஆயுதங்கள்.

**கேள்வி:** இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 25**

பதில்: ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை ஸ்ரீலங்காப் பாராளுமன்றம் அங்கீகரிக்கவேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. அதனால் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு உரிய கால அவகாசம் தேவை. ஒப்பந்தத்தை ஸ்ரீலங்காப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டதற்கான நம்பிக்கையை எங்கள் தோழர்களிடம் ஏற்படுத்திய பின்னரே, ஆயுதங்களைக் கைவிட இயலும். ஆனால், எது எப்படியாயினும், இந்திய அமைதிகாக்கும் படை சென்றிருக்கும் இச்சூழ்நிலை பற்றி எங்கள் தோழர்களோடு விவாதித்து வருகின்றோம். விரைவில் ஒரு முடிவைக் காண்போம் என்று நம்புகின்றோம்.

**கேள்வி:** இந்த ஒப்பந்தம் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றதா; அல்லது வேதனையைத் தருகின்றதா?

பதில்: நாங்கள் இந்த ஒப்பந்தத்தை வரவேற்கவில்லை. அதாவது இந்த ஒப்பந்தம் எங்களுக்கு மனநிறைவைத் தருவதாக இல்லை. ஆனால் நாங்கள் இந்த ஒப்பந்தத்தை முழுமூச்சாக எதிர்க்கவும் இல்லை. எனினும் இந்த ஒப்பந்தம் வெளிநாட்டுச் சக்திகளுக்கு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இழிந்த கைக்கூலிகளுக்கு, குறிப்பாக மனிதாபிமானத்தின் முதல் எதிரியும், எண்ணற்ற பலஸ்தீனப் போராளிகளைப் படுகொலை செய்ததுமான இஸ்ரேல் 'மொசாட்' இற்கு, இலங்கையை விட்டு வெளியேற வழி வகுத்திருக்கின்றது. மேலும் இந்த ஒப்பந்தம், இந்துமகா சமுத்திரத்தின் மீதான அமெரிக்காவின் நாசகாரச் செயல்முறைகளைத் தடுத்துள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதால் ஒப்பந்தத்தை இந்த நோக்கில் நாங்கள் வரவேற்கவே செய்கின்றோம்.

அதேவேளை, நாங்கள் இந்த ஒப்பந்தத்தை ஏன் முழுமனதுடன் வரவேற்கவில்லை என்பதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன. 1975 இல் நிறுவப்பட்ட ஈழப் புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) மலையகத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதையும் தனது அடிப்படைக் கொள்கைத் திட்டமாகக் கொண்டிருக்கின்றது. தமிழ் தேசிய இனத்தில் மலையக மக்களே ஜீவனான, இன்றியமையாத அங்கமாக விளங்கு கின்றார்கள். தமிழ்த்தேசிய இனப் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும், அல்லது எந்தவொரு ஒப்பந்தமும் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்த ஒப்பந்தம் அவ்வாறு இல்லை. ஆதலால் அரசியல் ரீதியிலான பலவகைப் போராட்டங்களில் தொடர்ந்து நாம் ஈடுபடுவதாகக் கூறியிருக்கின்றோம்.ஸ்ரீலங்கா அரசு எங்களைப் போராடவிடாமல் தடுத்தால் நிச்சயம் நாங்கள் வேறு பல போராட்ட வடிவங்களைக் கைக் கொள்ளுவோம்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் 'கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு' நடாத்தப்போவதாய்க் கூறியிருப்பதை நாங்கள் எதிர்க்கவே வேண்டியிருக்கின்றது. இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு முறையை எண்ணி நாங்கள் வருந்தவில்லை. மாறாக கடந்த 40 வருடங்களாகக் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளதை எண்ணியே பெரிதும் வருந்துகின்றோம். 1986 டிசம்பர் 19இல் அறிவிக்கப்பட்ட புதுத் தீர்மானங்கள் விவாதத்திற்குரிய பல கேள்விகளை எழுப்பின. அந்தத் தீர்மானத்தின் ஒரு கூறு, கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறைத் தேர்தல் தொகுதியை விலக்கி வைத்ததாக அறிவித்தது. ஆனால் இன்றோ அவர்கள் அம்பாறையைக் கிழக்கு மாகாணத்துடன் இணைக்கப் போகின்றார்களாம்.

இந்த நேரத்தில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு முறை குறித்து எங்களது கவலை, அவர்கள் சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்டு இந்த மாகாணங்களின் கூட்டிணைவிற்கு எதிராக வாக்களிக்கச் செய்துவிடுவார்கள் என்பதே. கிழக்கு மாகாணத்தில் இனவாத ஸ்ரீலங்கா அரசின் உதவியோடு, நிகழ்ந்த சிங்களக் குடியேற்றத்தை இந்தக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு முறை, சட்டப் பொருத்தமுடைய செய்கையாக மாற்றிவிடுமோ என்று அஞ்சுகின்றோம். ஆகவே இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்துமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

இந்தியாவிற்கு முடிந்த அளவு நாங்கள் துணை புரிய முயற்சிப்போம். இவ்வாறு, 'ஈரோஸ்' அமைப்பின் தலைவர் பாலகுமார், 'இந்து' ஆங்கில நாளிதழுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்திருந்தார்.

**'ஈரோஸ்' நடாத்திய ஹர்த்தால்:** இலங்கை இந்திய ஒப்பந்த விடயத்தில் ஈரோஸ் எடுத்திருந்த நிலைப்பாடானது, புலிகளுக்குச் சார்பான ஒரு நிலைப்பாடாகவே ஸ்ரீலங்கா அரசிற்குத் தோன்றியது. அத்தோடு, மலையகத் தமிழர்கள் தொடர்பாக 'ஈரோஸ்' கொண்டிருந்த நிலைப்பாடும், ஸ்ரீலங்காவில் மத்திய மாகாணத்தில் மற்றொரு பிரச்சினையை உருவாக்கிவிடுமோ என்ற அச்சத்தையும் சிங்கள அரசுக்கு ஏற்படுத்தியிருந்தது. இதனால் 'ஈரோஸ்' அமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு தனது படையினரை ஏவிவிட்டது.

ஒரு நாள் திடீரென்று சில 'ஈரோஸ்' உறுப்பினர்கள் காணாமல் போயிருந்தார்கள். ஸ்ரீலங்காப் படைகளே தமது அமைப்பின் உறுப்பினரைக் கடத்திக் கொலை செய்துவிட்டதாக 'ஈரோஸ்' குற்றம் சுமத்தியது. இந்தச் சம்பவத்தைக் கண்டித்து 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி, பூரண ஹர்த்தால் ஒன்றிற்கான அழைப்பையும் அந்த அமைப்பு விடுத்திருந்தது.

இந்தச் சம்பவம் பற்றி, 'ஈரோஸ்' அமைப்பின் தலைவர் பாலகுமார் அவர்கள், சென்னையில் இருந்து 'ஈழ நண்பர் கழகத்தினால்' வெளியிடப்பட்ட 'நட்புறவுப் பாலம்' சஞ்சிகைக்கு வழங்கியிருந்த செவ்வியில், "போர் நிறுத்தம் அமுலில் இருந்துவரும் வேளையிலும் ஸ்ரீலங்காப் படைகள் எமது தோழர்கள் மீது தாக்குதல் நடாத்திவருவது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இதுபோன்ற செய்கைகளின் மூலம், இன்னமும் ஆயுதம் தாங்கிக்கொண்டு முகாமிற்கு வெளியே திரிந்து, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாமல் திட்டமிட்டுச் சீர்குலைக்க ஸ்ரீலங்கா



இராணுவத்தின் தீய சக்திகள் முயற்சி செய்கின்றன. ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடூரத் தன்மை மாறாதிருப்பதும் இச்சம்பவத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

கொடூரமாகக் கொல்லப்பட்ட எமது போராளிகளின் உடல்களை அழித்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு ஒன்றுமே நடக்கவில்லை என்று கூறும் ஸ்ரீலங்கா அரசின் நாடகம், அதன் சுயரூபத்தை அம்பலப்படுத்துவதாகவே உள்ளது. ஸ்ரீலங்கா இராணுவம் முற்றாக எமது பகுதிகளில் இருந்து வெளியேறாதவரை எமக்குப் பூரண அமைதி கிட்டாது என்பதை இச்சம்பவம் துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றது." என்று பாலகுமார் தெரிவித்திருந்தார்.

*துரோகம் தொடரும்....*

# மட்டக்களப்பை அறிந்து கொள்வோம்



மீன் பாடும் தேனாடு என அழைக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டமானது ஆரம்பத்தில் புராதன குடிகளாக வேடர்கள் வாழ்ந்துள்ளனர். காலத்திற்குக் காலம் இங்கு பல சமூகங்கள் குடியேறினர். இதன் பின் மட்டக்களப்பிற்கான சமூக அமைப்பு உருவானது.

இந்தச் சமூக அமைப்பு மட்டக்களப்பு அரசு என அழைக்கப்பட்டுத் தென்னிந்திய அரச ஆதிக்கத்தின் கீழும் சிங்கள அரசின் ஆதிக்கத்தின் கீழும் இருந்து வந்துள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. ஆதியில் மட்டக்களப்பு அரசின் நிருவாகம் படுவான்கரைப் பகுதியில் தான் இருந்துள்ளது. குறிப்பாகப் படுவான்கரைப் பகுதி பழமையான ஊரான அம்பிளாந்துறைக் கிராமத்தில் நிர்வாகம் மன்னராட்சிக்காலத்தில் இடம் பெற்றமைக்கான தடயப் பொருட்கள் இன்றும் உள்ளன.

போர்த்துக் கேயரின் வருகைக்குப் பின் 1622ம் ஆண்டு தொடக்கம் 1639ம் ஆண்டு வரை போத்துக்கேயரின் ஆதிக்கமும், 1939ம்ஆண்டிற்குப் பின் ஒல்லாந்தரின் ஆதிக்கமும் மட்டக்களப்பில் இருந்தது.

ஆங்கிலேயரின் முழு ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டபோதுஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கண்டி மன்னன் பிடிபட்ட பின் 1815ம்ஆண்டு பங்குனி மாதம் 2ம்திகதி செய்யப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரகடனத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கையொப்பம் இட்டவர் அம்பிளாந்துறைக் கிராமத்தைச் சேர்ந்த கடுக்காமுனைப்போடி என்பவராவார். இவரின் கையொப்பம் மட்டுமே தமிழில் இருந்ததாகவும், எனையவரின் கையொப்பம் ஆங்கிலத்தில் இருந்தாகவும் அறிய முடிகிறது. மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தில் ஒரு பகுதியாக திருகோணமலை மாவட்டத்தைத் தலைநகராகக் கொண்டு அமைக்கப்பட்டது

காலத்திற்குக் காலம் அன்னியரின் ஆக்கிரமிப்புக்கள் மட்டக்களப்பு மண்ணில் தலை தூக்கிய போதெல்லாம் மட்டக்களப்புச் சமூகம் தமது எதிர்பைத் தெரிவித்து வந்துள்ளனர்.

நீர்வளமும் நிலவளமும் கொண்ட தேனாட்டில் மொத்தப் பரப்பளவு 2633.1 சதுரகிலோ மீற்றராகவும், நீர்ப்பரப்பளவு 168.3 சதுரகிலோ மீற்றராகவும் இருக்கின்றது.

வடக்கு வெருகலாறு திருகோணமலை மாவட்டமாகவும், வடமேற்கின் ஒரு பகுதி பொலனறுவை மாவட்டமாகவும், தென் மேற்கின் ஒரு பகுதி அம்பாறை மாவட்டமாகவும், கிழக்கு வங்காள விரிகுடாவாகவும் காட்சியளிக்கும். இம்மாவட்டத்தில் குறுக்காக 106.2. கிலோ மீற்றர் தூரம் உடைய வாவி ஊடறுத்துச் செல்வது தனிச் சிறப்பாகும்.

இவ்வாய்மை மையமாக வைத்தே கிழக்குத் திசையில் வங்காள விரிகுடா கடற்பகுதியை அண்டிய பிரதேசங்கள் எழுவான்கரைப் பிரதேசம் எனவும்,வாவிக்கு மேற்குப் புறமுள்ள பகுதியினைப் படுவான்கரைப்பகுதி எனவும் அழைப்பதுண்டு. ஊடறுத்துச் செல்லும் இவ்வாவியினை பட்டிப்பளை ஆறு என அழைக்கப்படும்.

**பாத்திரன்**

தற்போது 12 நிர்வாக அலகுகளாக வகுக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில்

| | |
|---|---|
| 1.கோறளைப்பற்று வடக்கு | 550 சது.கி.மீ |
| 2.கோறளைப்பற்று மேற்கு | 176 சது.கி.மீ |
| 3.கோறளைப்பற்று | 484.50.சது.கி.மீ |
| 4.ஏறாவூர்ப்பற்று | 634.16சது.கி.மீ. |
| 5.ஏறாவூர் நகரம் | 3.74 சது.கி.மீ |
| 6.மண்முனை வடக்கு | 75.09. சது.கி.மீ |
| 7.காத்தான்குடி | 3.89 சது.கி.மீ |
| 8.மண்முனைப்பற்று | 31.72 சது.கி.மீ |
| 9.மண்முனை தெற்கு எருவில்ப்பற்று | 52.50சது.கி.மீ |
| 10.போரதீவுப்பற்று | 167.20 சது.கி.மீ |
| 11.மண்முனைதென்மேற்கு | 161.60. சது.கி.மீ |
| 12.மண்முனை மேற்கு | 292.70 சது.கி.மீ |

மட்டக்களப்பு மாவட்டத்தின் 347 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்றது.

இலங்கையின் காலநிலைப் பிரிவுகளின் அடிப்படையில் வரட்சி வலையமாக உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடாந்த மழை வீழ்ச்சி 844 மில்லிமீற்றர் தொடக்கம் 3081 மில்லி மீற்றர்
வருடாந்த வெப்ப நிலை 25°c-34.4°c
காற்றின் சராசரி வேகம் மணிக்கு 5.8-15.8. கி.மீற்றர்.

மட்டக்களப்பு கிழக்கு மாகாணத் தலைநகராக 1870ம் ஆண்டு வகுக்கப்பட்டு முதலாவது அரச அதிபராக ஆர்.டபிள்யு. ரி.மொறிஸ் என்பவர் நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பில் இருந்து அம்பாறை மாவட்டம் 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி பிரிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் சராசரியாக நெற்சாகுபடி 58376 கெக்டயர் நிலப்பரப்பில் செய்யப்பட்ட போதும் பாரிய நீர்ப்பாசன முறையின் கீழ் 18703 கெக்டயரும், சிறிய நீர்பாசன முறையின் கீழ் 8759 கெக்டயரும் மழை நீரினால் 35658 கெக்டயரும் பயிர்ச் செய்கை நடைபெறுவதை அறியலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 311 பாடசாலைகள் உள்ளன. இம்மாவட்டத்தில் தற்போது 38 உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்குவதுடன், சுமார் 10 சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் இயங்குவதாக அண்மைக்காலப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

| | |
|---|---|
| அடர்ந்த காடுகள் | 30.130 கெக்டயர் |
| திறந்த காடுகள் | 31.535 கெக்டயர் |
| சதுப்பு நிலக்காடுகள் | 1390 கெக்டயர் |
| நடுகைக்காடுகள் | 6910 கெக்டயர் |

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ளன. குளங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு 22 பாரிய குளங்களும், மட்டக்களப்பின் ஊடாகப்பாயும் 14 ஆறுகளும் உள்ளன.

**பாரிய குளங்கள்**

01. உன்னிச்சைக்குளம்
02. றூகம் குளம்
03. வாகனேரிக்குளம்
04. வெலிக்காகண்டியாக்குளம்
05. கித்துள்வெலக்குளம்
06. வடமுனைக்குளம்
07. ஆனைசுட்டகாட்டுக் குளம்
08. மதுரல் கேணிக்குளம்
09. கட்டுமுறிவுக் குளம்
10. கிரிமிச்சை ஓடைக்குளம்
11. தரவைக்குளம்
12. புனானைக்குளம்
13. நவகிரிக்குளம்
14. தும்பன் கேணிக்குளம்
15. புளுகண்ணாவக் குளம்
16. கடுக்காமுனைக்குளம்
17. அடைச்சகல்குளம்
18. பெரிய போரதீவுக்குளம்
19. பளுகாமம் பெரியகுளம்
20. மகிழூர் பெரிய குளம்
21. சேவகப்பத்துக் குளம்
22. மகிழடித்தீவுக்குளம்

இவைகளை ஆங்காங்கே மட்டக்களப்பில் பல பகுதிகளில் சிறிய குளங்கள் நூற்றுக்கணக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டமூடாக பாயும் ஆறுகள்

01. மக்ரைச்சேனை ஆறு
02. மண்டன் ஆறு
03. பொதிகொட ஆறு
04. கிரிமிச்சை ஓடை ஆறு
05. மதுறு ஓயா ஆறு
06. மியாங்கல் எல்ல ஆறு
07. முறுத்தனை ஆறு
08. மகிழவெட்டுவான் ஆறு
09. புளியன்பொட்ட ஆறு
10. வெட்டி ஆறு
11. மன்னன்பிட்டிய ஆறு
12. தும்பன்கேணி ஆறு
13. மணல்காடு ஆறு
14. அம்டளி ஆறு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 347 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் 29173 வாக்காளர்களும், 517878 மக்களும் இதில் 251797 ஆண்களும் 266081 பெண்களும் உள்ளனர். இதன் அடிப்படையில் 14284பெண்கள் கூடுதலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளமை புலனாகிறது.

கடந்த இரு சகாப்தங்களாக எம் மண்ணில் இடம்பெற்ற இனப்போர் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேசங்களை விட தமிழர்களின் பூர்வீக இடங்களே பலத்த பாதிப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்ததை எவராலும் மறுக்க முடியாத ஒன்று. அதிலும் மிகவும் மோசமான பாதிப்புக்களும், பொருளாதாரத்திலும் பின்னடைவுகளாலும் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட பிரதேசமாகப் படுவான்கரைப் பகுதி, வாகரைப்பகுதி, கரடியனாறுப் பகுதி விளங்குகின்றது.

தற்போது 18 மாதங்களாக யுத்தம் இன்றி சமாதானத்தின் எதிர் பார்ப்புகளுடன் வாழும் நாம் அபிவிருத்தி என்று வரும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தின் மீது அனைவரினதும் பார்வை செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

## மட்டக்களப்பு மாவட்டத்தின் இன வாரியாக விபரம் (2001 உத்தேச மதிப்பீட்டின் படி)

| பிரதேச செயலாளர் பிரிவு | தமிழர் | இஸ்லாமியர் | சிங்களவர் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 01. மண்முனை வடக்கு | 72119 | 4011 | 184 | 2199 |
| 02. காத்தான்குடி | - | 36398 | - | - |
| 03. மண்முனைப்பற்று | 21116 | 5504 | 3 | 4 |
| 04. மண்முனைதென் எருவில் | 54498 | - | 68 | - |
| 05. போரதீவுப் பற்று | 44909 | - | 2 | - |
| 06. மண்முனை தென்மேற்குப் பிரிவு | 23949 | - | - | - |
| 07. மண்முனை மேற்கு | 27436 | - | 16 | - |
| 08. ஏறாவூர் நகரம் | - | 32201 | - | - |
| 09. ஏறாவூர்ப்பற்று | 64306 | 2087 | 150 | - |
| 10. கோறளைப்பற்று | - | 56131 | 175 | 117 |
| 11. கோறளைப்பற்று மேற்கு | 1161 | 47972 | 62 | 76 |
| 12. கோறளைப்பற்று வடக்கு | 19595 | 1045 | 28 | 02 |
| **மொத்தம் மட்டக்களப்பு மாவட்டம்** | **385216** | **129363** | **813** | **2486** |

**பகிரங்கமடல்**

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.

## ஜப்பானின் விசேட தூதுவர் யசூசிஅகாசிக்கு!



## எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.

ஈழத்தமிழர் விடுதலைப்போராட்ட வரலாற்றில் நன்கு பரிச்சையமான நாடுகள் இந்தியா,பூட்டான், நோர்வே, அமெரிக்கா, இப்போது யப்பான் பிரபல்யமாகிக் கொண்டிருக்கிறது. யப்பான் என்றால் தமிழ் மக்களுக்கு அவ்வளவு பிரபல்லியம் இல்லை. ஹிட்லரின் நாஜிப் படைகள் ''ஹிரோசிமா'' நகர்மீது போட்ட அணுகுண்டுதான் ஞாபகத்திற்கு வரும். அதன் பிறகு கைத்தொழில் துறையில் முன்னேறி வளர்ச்சியடைந்த பிற்பாடு எங்கள் நாடுகளில் உங்கள் பொருட்கள்......

''நஷனல் பெனசோனிக்'' வானொலி தொலைக்காட்சி உபகரணங்கள் போட்டி போட்டு எங்கள் தமிழ் மக்களும் உங்கள் பொருட்களை வாங்கிக்கொண்டார்கள்..

எங்கள் உறவுகள் சிங்களப் படைகளினால் கொலை செய்யப்பட்டபோது வீதிகளில் தமிழ் மக்களின் குருதி ஆறாய்ப் பாய்ந்தோடிய போது விமானக் குண்டு வீச்சினால் வீடு வாசல்களை விட்டு அகதிகளாய் அலைந்த போது இந்த யப்பான் என்ன செய்தது. தமிழ் மக்களை அரவணைத்ததா ஆறுதல் கூறியதா? உங்கள் நாட்டுப் பொருட்களை விற்பதில்தான் அக்கறை இருந்தது இப்போது தமிழ் மக்கள் இப்படிக் கேட்கிறார்கள்.

நானும் நியாயம் என நினைக்கின்றேன் ஏனெனில் யப்பான் பௌத்த மதம் தழுவிய ஒரு நாடு என்பதாலோ என்னவோ அப்போது நீங்களும் சிங்களப் பேரினவாத அரசுகளின் பொய்ப் பரப்புரையை நம்பி இருப்பீர்கள் எனக்கருதுகிறேன்.

இப்போது யப்பான் நாட்டுக்கு எம்மினத்தின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறை.

யசூசிஅகாசி அவர்களே! இரு தடவைகள் சிறிலங்காவிற்கு வந்து விட்டீர்கள். வடக்குக் கிழக்கிற்கும் நீங்கள் விஜயம் செய்திருப்பீர்கள். அங்கே தமிழீழத்தின் மீது சிங்கள இன வெறியர்களினால் நடத்தப்பட்ட போர் அழிவுகளின் எச்சங்களைக் கண்டிருப்பீர்கள்.

இவற்றைப் புனரமைப்பதென்றால் சிங்கள அரசால் முடியாது. அவர்களது திட்டங்களும் ஆலோசனைகளும் எங்கள் தமிழ் பிரதேசத்தைப் புனரமைக்காது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விளங்கும் விடுதலைப் புலிகள் ஊடாகவே அவை நிவர்த்திக்கப்பட வேண்டும்.

அதற்காகத்தான் விடுதலைப்புலிகள் தற்போது இடைக்கால நிர்வாக சபையை வலியுறுத்தி நிற்கின்றனர். ''எலிவளையானாலும் தனிவளை வேண்டும்'' என்றால் போல் விடுதலைப் புலிகளுக்கு அதிகாரப் பலமிக்க ஒரு நிருவாகக் கட்டமைப்புத் தேவை. அது கிடைக்காத பட்சத்தில் நீங்கள் அழைக்கும் கூட்டங்களில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றுவதால் யாதொரு பிரயோசனமும் இல்லை மாறாக சிறிலங்கா அரசுதான் பயன்பெற்று விடும்.

உங்கள் நாட்டு ''நெஷனல் பெனசோனிக்'' பொருட்களை எங்களுக்கு விற்பது போல எங்கள் பிரச்சினையைக் கருதி விடாதீர்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் உங்களின் அக்கறையின் நோக்கம் தவறானது. என்ற உணர்வு தமிழ் இனத்தின் பால் பதிந்து விடும் என ஞாபகமூட்ட விருப்புகிறேன்.

*இங்கனம்*
*அலைமகன்*

# தமிழ் ஊடகவியலாளர்களைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட நகர்வுகள்

**தமிழ்** ஊடகங்களின் வாயை அடைப்பதற்கான முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன போன்றுதான் தெரிகின்றது.

அண்மைக்காலமாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிகரித்து வருகின்ற அடாவடித்தனங்கள், மிரட்டல்கள் என்பனவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் பொழுது, தமிழ் ஊடகவியலாளர்களின் கைகளைக் கட்டிப் போடுவதற்கு ஒரு தரப்பினர் அதீத முயற்சி மேற்கொண்டு வருவது தெளிவாகத் தெரிகின்றது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீதான அழித்தொழிப்பு யுத்தம் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வந்த காலப்பகுதிகளில், அந்த இன அழிப்பு யுத்தத்தை பேனா கொண்டு எதிர்த்து நின்ற பல தமிழ் ஊடகவியலாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. யாழ் பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார். மட்டக்களப்பு ஊடகவியலாளர் நடேசன் வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. யசீகரன், என்பவர் வீதியில் வைத்துத் தாக்கப்பட்டார். மாணிக்கவாசகர், ஸ்ரீகஜன் போன்றவர்கள் சிறையில் அடைக்கப் பட்டார்கள். துரைரெத்தினம், சீவகன், சிவராம், ஜெயானந்தமூர்த்தி போன்றவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இன்னும் எத்தனையோ சம்பவங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.



தமிழ் மக்களுக்கு எதிரான உரிமை மீறல்களை ஊடகத்துறையில் முன் நிலைப்படுத்திய முன்னணி தமிழ் ஊடகவியலாளர்கள், துரத்தித்துரத்தி தாக்கப்பட்டார்கள். பழிவாங்கப்பட்டார்கள்.

> **"துரைரெத்தினத்தைத் தினகரனை விட்டு உடனடியாகவே துரத்துங்கள், புலிகளால் ஏதாவதுபிரச்சினை வந்தால் நான் பார்த்துக்கொள்கிறேன்"**

விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் யுத்தநிறுத்தம் ஏற்பட்டு, சமாதானம் நிலவ ஆரம்பித்ததைத் தொடர்ந்து, தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் சிறிது காலம் ஓரளவு தனிந்திருந்தன. சரித்திரத்திலேயே முதற் தடவையாக, பிராந்திய தமிழ் ஊடகவியலாளர்கள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அடையாள அட்டையை அணிவதற்கு உரித்துடையவர்களானார்கள். இதுபோன்ற சில மாற்றங்களைக் கண்ணுற்ற பலரும், இதுவரை தமிழ் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த அரச பயங்கரவாதம் இனிமேல் தனிந்துவிடும் என்றே எண்ணினார்கள்.

ஆனாலும், தமிழ் ஊடகவியலாளர்களின் மகிழ்ச்சி அதிக காலம் நீடிக்கவில்லை. தமிழ் ஊடகவியலாளர்களைக் குறிவைத்த வேட்டை இந்தச் சமாதான காலத்திலும் தொடரவே செய்தன. தமிழ் ஊடகவியலாளருக்கு எதிரான கொலை அச்சுறுத்தல்கள், வன்முறைகள் இந்தச் சமாதான காலத்தில் முன்னெப் போதையும் விட அதிகமாகத் தொடர ஆரம்பித்துள்ளன என்றும் குறிப்பிடலாம்.

'அழிந்துபோன தமிழ்க் கிராமங்கள்' என்ற தலைப்பில் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த, வரலாற்று முக்கியத்துவம் மிக்க கிராமங்கள் பற்றி வீரகேசரிப் பத்திரிகையில் ஒரு தொடரை எழுதிவரும் ஊடகவியலாளர் ஜெயானந்த மூர்த்திக்கு எதிராக கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. வாழைச்சேனையிலுள்ள அவரது வீட்டின் மீது இரண்டு தடவைகள் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு சில முஸ்லிம் ஆயுதக்குழுக்களே இந்தக் காரியத்தைச் செய்துவருவதாகப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றார்கள்.

இதேபோன்று ஒருநாள் இரவு தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இரா. துரைரெத்தினம், ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு, பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டார். ஸ்ரீலங்கா தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைக் காண்பித்து, தன்னை ஒரு பத்திரிகையாளனாக அடையாளம் காண்பித்ததைத் தொடர்ந்தே, அவர் மீதான படையினரின் நெருக்குதல்கள் அதிகரித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று, கடந்த 17.08.2003 அன்று, மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெற்ற கால்பந்தாட்ட நிகழ்வொன்றில் விருந்தினராக அழைப்பைப்பெற்றுச் சென்ற ஊடகவியலாளர் தா.வேதநாயம், தன்னை பத்திரிகையாளர் என்று அடையாளம் காண்பித்ததைத் தொடர்ந்து, அவரது அடையாள அட்டை பறிக்கப்பட்ட நிலையில் பல மணி நேரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

7.05.2003 அன்று வவுனியா பத்திரிகையாளர் மாணிக்கவாசகர் கொலை அச்சுறுத்தலுக்கு இலக்கானார். சில காலம் கொழும்பில் தலைமறைவாக வாழவேண்டிய அளவிற்கு அவருக்கு எதிரான கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

இதேபோன்று, கடந்த ஆகஸ்ட் 3ம் திகதி காத்தான்குடியில் மேற்கொள்ளப்பட்ட 'தனி முஸ்லிம் தேசப் பிரகடனம்' பற்றிய செய்தியை சரியாக ஊடகங்களுக்கு வழங்கவில்லை என்று கூறி, காத்தான்குடி செய்தியாளர் பலுதுல்லா மீதும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. துப்பாக்கிகளுடன் வந்த சில முஸ்லிம் இளைஞர்கள் இந்த அச்சுறுத்தலை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று கடந்த ஆகஸ்ட் 18ம் திகதி சம்மாந்துறையில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றிய செய்தியைப் பிரசுரித்த தினக்குரல் நிருபர் சந்திரப்பிரகாசிற்கு எதிராகவும் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

தமிழ் ஊடகவியலாளர்கள் வெளியிடும் செய்திகளால் பாதிக்கப்படும் அரசியல் வாதிகள், அந்த ஊடகவியலாளர்களையே இல்லாதொழிக்கும் எந்த நடவடிக் கைகளையும் மேற்கொள்ளத் தயங்க மாட்டார்கள் என்பதற்கு, அண்மையில் இடம்பெற்ற ஒரு சம்பவம் சிறந்த உதாரணம். கடந்த மாதம் 18ம், 19ம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கொலை, மற்றும் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போனது போன்ற சம்பவங்கள் தொடர்பான சமாதானக் கூட்டம் ஒன்று கரடியனாறு தேனகம் விருந்தினர் விடுதியில் 25.08.2003 அன்று நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் பிரசன்னமாகியிருந்த அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பிரதம மந்திரியின் ஆலோசகர் அலிசாகிர் மௌலானா, அம்பாறைச் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று கருத்து வெளியிட்டிருந்தார். அவரது இந்த உரை ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. அவரது இந்த உரை மறுநாள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன. மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான இரா.துரைரெத்தினம் அவர்களே இந்தச் செய்தியைச் சேகரித்து தினகரன் பத்திரிகையில் வெளியிட்டும் இருந்தார்.

இந்தச் செய்தி வெளியிடப்பட்ட மறு தினம், தினகரன் பத்திரிகை, செய்தியாளர் துரைரெத்தினத்தை ஓரம்கட்டும் வகையில் அவரது செய்திகளை வெளியிட மறுத்ததுடன், அவரை ஊடகவியலாளர் பொறுப்பிலிருந்து இடைநிறுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. இதுபற்றி அவர் பத்திரிகை உயர்பீடத்தை தொடர்புகொண்டு கேட்ட பொழுது, அலிசாகீர் மௌலானா தரப்பிலிருந்து வழங்கப்பட்ட அழுத்தமே காரணம் என்று பதில் கிடைத்தது. மௌலானா தேனகத்தில் தெரிவித்த கருத்து தினகரனில் வெளிவந்ததைத் தொடர்ந்து அவரது சமுகத்தின் மத்தியில் அவருக்குப் பலவித அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் அவர் அந்தச் செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர் மீது கோபம் கொண்டுள்ளதாகவும், அவரது கோபம் தணியும் வரை பத்திரிகையாளரின் செய்திகளைப் பிரசுரிப்பதில்லை என்று ஆசிரியர் பீடம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ''துரைரெத்தினத்தை தினகரனை விட்டு உடனடியாகவே துரத்துங்கள், புலிகளால் ஏதாவதுபிரச்சினை வந்தால் நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று அவர் தினகரன் ஆசிரியர் பீடத்திடம் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.



தேனகத்தில் அன்று அவ்வாறு புலிகள் பற்றி தான் எதுவுமே சாதகமாகக் கூறவில்லை என்று 28ம் திகதி தினகரனில் மௌலானா மறுப்பு வெளியிட்டிருந்தார். 29ம் திகதி தினகரன் செய்தியை வழங்கியிருந்த ஊடகவியலாளரைச் சாடி, ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டது. தினகரனில் வெளியான செய்தியே பொய் என்பது போலவும், செய்தியாளரே வேண்டும் என்று அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தார். என்பது போலவும், சோடிக்கப்பட்டது. இத்தனைக்கு மௌலானாவின் தேனகப் பேச்சு ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதுடன், மௌலானா அவ்வாறு கூறியதைச் சாட்சி பகர பலரும் தயாராக இருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

> **காத்தான்குடியில் மேற்கொள்ளப்பட்ட 'தனி முஸ்லிம் தேசப் பிரகடணம்' பற்றிய செய்தியை சரியாக ஊடகங்களுக்கு வழங்கவில்லை என்று கூறி, காத்தான்குடி செய்தியாளர் பலுதுல்லா மீதும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.**

நாட்டில் இடம்பெற்றுவரும் அர்சியல் போக்கை நோக்கும்போது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான இது போன்ற அச்சுறுத்தல்கள் தொடரும் என்றே நம்பப்படுகின்றது.

தமிழ் ஊடகவியலாளர்களைக் குறிவைத்து பலவேறு தரப்புக்கள் நகர்வுகளை மேற்கொண்டு வருவது பற்றி, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும், கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கமும் ஆழ்ந்த அக்கறை கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளது. ஊடகவியலாளாகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்களுடனான சந்திப்பில் ஊடகவியலாளர் ஒன்றியம் தமது கவலையை வெளியிட்டிருந்தது.

தமிழ் சமுகத்தின் காவல் அரண்களான தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடாவடித்தனங்களைத் தட்டிக் கேட்கவேண்டும் என்பதுடன், தமிழ் ,ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு விடுதலைப்புலிகள் அமைப்பு ஒன்றினால் மட்டுமே முடியும் என்பதுதான் தமிழ் ஊடகவியலாளர்கள் பலரது அசைக்க முடியாத நம்பிக்கையும் கூட.

தமிழ் ஊடகவியலா ளர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதானது, தமிழ் மக்களுக்கு எதிரான மற்றொரு வன்முறையை ஆரம்பிப் பதற்கான முன்னேற் பாடா என்கின்ற சந்தேகம் ஏற்படுவதையும் தவிர்க்கமுடியாமல் இருக்கின்றது.

- சாத்வீகன் -

# "மட்டக்களப்புத் தமிழகத்தில் புனைகதை இலக்கிய முயற்சி"

உரைநடைசார்ந்த ஆக்க இலக்கியங்களான நாவலும் (Novel ) சிறுகதையும் (Short story - ) புனைகதை (Fiction ) என்னும் வடிவத்துள் அடங்குவன இவ் வடிவம் ஆங்கிலத்தினூடாகத் தமிழுக்கு அறிமுகமானது. தமிழின் முதன் நாவலாக மயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய, ''பிரதாப முதலியாார் சரித்திரம், (1879) கருதப்படுகின்றது அதேவேளை, வ.வே.சு. ஐயர் எழுதிய ''மங்கையர்க்கரசியின் காதல்'' (1930) தமிழன் முதற் சிறுகதைத் தொகுப் பாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஈழத்தில் அறிஞர் சித்தி லெவ்வை (அஸன்பே கதை 1885) எஸ். இன்னாசித்தம்பி ( ஊசோன் பாலந்தை கதை 1891) தி.த. சரவணமுத்துப்பிள்ளை (மோகனாங்கி 1895) முதலியோர் நாவல் இலக்கியத்திலும் இலங்கையர் கோன் , சோ.சிவபாதசுந்தரம், சி. வைத்திலிங்கம் ஆகியோர் சிறுகதை இலக்கியத்திலும் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர்

இக்குறிப்புக்களை அறிமுகமாகக் கொண்டு மட்டக்களப்புத் தமிழகத்தில் (தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றிய கருத்துரையின் வசதி கருதி வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே பாணமை வரையிலான பகுதியே இங்கு மட்டக்களப்புத் தழிழகம் என்ற பதத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ளது, என்பதைக் கருத்திற்கொள்க) இவ்விரு இலக்கியங்களினதும் தோற்றம், வளர்ச்சி, முக்கியத்துவம் என்பன குறித்துச் சுருக்கமாக நோக்கு வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நாவல்:

மட்டக்களப்பில் எழுந்த முதன் நாவலாக 'அரங்கநாயகி' (1934) அடையாளங்காணப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் மட்டக்களப்பு தாமரைக்கேணியில் வசித்த வே. ஏரம்பமுதலி ஆவார். இந் நாவல் , சேர் உவால்டர் ஸ்கொட் (Sir Walter Scot ) என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ''கெனில் வேர்த்'' (Kenil worth ) என்னும் கதையின் தழுவலாக அமைந்தது. சன்மார்க்க வழி நடந்தோர் நல்வாழ்வையும் , துன்மார்க்க வழி நடந்தோர் அழிவையும் பெறுவர் என்பதே இன் நாவலின் கருப்பொருளாகும்.

இதைத் தொடர்ந்து மட்டக்களப்புத் தமிழகத்தில் முக்கியம் பெறும் காலகட்டம் எழுபதுகளாகும்.

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

இக்காலத்தில் பிரதேசப் பண்புகளை உள்ளடக்கிய நாவல்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. எஸ். ஸ்ரீ. ஜோன்ராஜன் எழுதிய 'போடியார் மாப்பிள்ளை' (1976), மற்றும் வை.அஹ்மத் எழுதிய 'புதிய தலைமுறைகள்' ஆகியன முக்கியமானவை 'போடியார் மாப்பிள்ளை' கன்னங்குடாவைக் களமாகக் கொண்டது. படுவான் கரைப்பிரதேசத்தின் நிலவுடைமையாளர்களான போடியார்களதும் அவர்களின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் முல்லைக்காரரதும் வாழ்க்கை முறைகளை இந்நாவல் சித்தரிக்கின்றது. 'புதிய தலைமுறைகள்' முக்கியத்துவம் பெறுகின்றது. மட்டக்களப்பு நகரையும் நகரை அண்டியுள்ள சில கிராமங்களையும் இந்நாவல் களமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

மட்டக்களப்பின் பாரம்பரிய மரபுகள் சிலவற்றை நாவலினூடாக இக்காலகட்டத்தில் வெளிக்கொணர்ந்ததில் 'ஒரு தந்தையின் கதை' (1989) என்னும் நாவலுக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. இந் நாவலின் ஆசிரியர் 'அன்புமணி' (இரா. நாகலிங்கம்) ஆவார். நாட்டுக்கூத்து முறைமைகள் பாரம்பரிய விளையாட்டுக்கள் , வாழ்க்கை முறைமைகள் என்பவற்றோடு தமிழ் முஸ்லிம் அன்னியோன்னிய உறவும் இந்நாவலில் கூறப்பட்டுள்ளது.

உள்ளூர் அரசியல் தொடர்பாக முதிய தலைமுறையினருக்கும் இளைய தலைமுறையினருக்கும் ஏற்படுகின்ற போட்டியைக் கருவாகக் கொண்டது. மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டமும் இதனூடே விளக்கப்படுகின்றது.

மட்டக்களப்புத் தமிழ கத்தின் மரபுகளையும் நடப்பியல்புகளையும் இப்பிரதேசத்திற் கேயுரியதனித்துவமான பேச்சு வழக்கோடு உயிர்ப்புடன் வெளிப் படுத்தும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுள் செ.குணரெத்தினம் முதன்மையானவர். இவரது முதன் நாவலான 'தெய்வதரிசனம்' (1988) வத்தைத் தொழில் நடாத்தி வாழ்ந்த ஒருகாலகட்டத்து மட்டக்களப்புக் கரையோர மீனவர்களது (அமிர்தகழி - முகத்துவாரம்) வாழ்க்கை அனுபவங்களைக் கூறுவது . முற்காலத்தில் இங்கு மேற் கொள்ளப்பட்ட பாரம்பரியத் தொழிலொன்றை மையமாக வைத்து எழுதப்பட்ட வகையிலும் இந்நாவல் கவனத்திற்குரியதாகின்றது. இதனைப் போலவே இக்காலத்தில் (எண்பதுகளில்) வெளிவந்த நாவல்களுள் ''மஞ்சு நீ மழைமுகில் அல்ல'' (முதற்பாகம் 1988, இரண்டாம் பாகம் 1991) என்னும் திமிலைத் துமிலனின் (எஸ். கிருஸ்ணபிள்ளை ) நாவலும் சமூக நாவலாக இருப்பினும் ஈழத் தமிழினம் எதிர் கொண்ட பிரச்சினைகள் சிலவற்றைக் குறிப்பாக 1960 களில் ஏற்பட்ட நிலமைகளையும், மட்டக்களப்பில் இக்குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களையும் கதையினூடாக வெளிக் கொணர்ந்துள்ள வகையில் இக்காலத்தில் வெளிவந்த ரவிப்பிரியனின் (ஏ.மு ரவீந்திரன்) ஒரு வானவில் றோஜாவாகிறது (1989) என்னும் நாவல் கூட்டுறவுச் சங்கம் பற்றிய விபரங்களை உள்ளடக்கமாகக் கொண்ட சமூக நாவலாகும்.

இங்கு வாழும் முஸ்லிம் மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு நாவல் எழுதியோருள் ஜுனைதாஷெரீப் (கே.எம்.எம் ஷெரீப்), அ.ஸ. அப்துஸ்ஸமது ஆகியோர் முக்கியமானவர்கள் ''சாணைக்கூறை'' (1985) அவளுக்கும் ஓர் இதயம் (1985) ''காட்டில் எறித்த நிலா'' மூன்றாம் முறை (1986) ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது (1995) ஒவ்வாமுனைக் காந்தங்கள் என்பன ஜுனைதா ஷெரீப் எழுதிய சமூக நாவல்களாகும். ''பெட்டிசம்'' என்ற இவரது நாவல் சிங்கள நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். அ.ஸ. அப்துஸ்ஸமதின் ''பனிமலர், கனவுப்பூக்கள்'' (1983) ஆகிய நாவல்கள் இஸ்லாமிய வாழ்வியலை அடிப் படையாகக் கொண்டவை ''பனிமலர்'' என்னும் நாவல் நிலப்பிரபுத்துவ மனப்பாங்குக்கும் கல்வியறிவு வளர்ச்சியால் ஏற்பட்ட மனப்பாங்குக்கும் இடையில் நிகழும் போராட்டச் சித்திரிப்பாக அமைகின்றது. இவர் எழுதிய இன்னுமொரு நாவலான தர்மங்களாகும் தவறுகள் (1997) சிங்கள- தமிழ் சமூகச் சூழலின் பின்னணியில் இன ஒற்றுமையை வலியுறுத் துவதாக அமைவது ஓலுவில் அமுதன் (ஆ.அலாவுதீன்) ''கரையைத் தொடாத அலைகள்'' (2002), ''நாம் ஒன்று நினைக்க'' 2000) ஆகிய நாவல்களை எழுதியுள்ளார்.

**ஈழத்தில் அறிஞர் சித்தி லெவ்வை (அஸன்பே கதை 1885) எஸ். இன்னாசித்தம்பி (ஊசோன் பாலந்தை கதை 1891) தி.த. சரவணமுத்துப்பிள்ளை (மோகனாங்கி 1895) முதலியோர் நாவல் இலக் கியத்திலும் இலங்கையர் கோன் , சோ. சிவபாதசுந்தரம், சி. வைத் திலிங்கம் ஆகியோர் சிறுகதை இலக்கியத்திலும் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர்**

திமிலை மகாலிங்கம் ஓ. கே.குணநாதன், ஆகியோர் தொண்ணூறுகளில் நாவல் முயற்சியில் இறங்கியோராவர். திமிலை மகாலிங்கம் எழுதிய ''அவனுக்குத்தான் தெரியும்'' (1995) என்னும் நாவல் சுயநலமற்ற - தூய்மையான நட்புக்கொண்ட நண்பர்களின் கதையைக் கூறுவது. இவரால் ''ஊஞ்சல், நிலவுக்கு ஒரு நாள் ஒய்வு உண்டு'' ஆகியனவும் எழுதப்பட்டன. இவைமுறையே மித்திரனிலும், வீரகேசரியிலும் தொடர்கதைகளாக வெளிவந்தவை ஓ.கே குணநாதன், ''ஊமை நெஞ்சின் சொந்தங்கள்'' (1992), ''விடியலின் ஓசைகள், ஒருதுளி'' (1999) ஆகிய நாவல்களை எழுதியுள்ளார். இவற்றுள் ''ஊமை நெஞ்சின் சொந்தங்கள்'' மட்டக்களப்பு கரையோர மீனவர்களின் (அமிர்தகழி- முகத்துவாரம்) வாழ்க்கையையும் ''ஒருதுளி'' மலையக மக்களின் வாழ்க்கையும் பின்னணிகளாகக் கொண்டவை .

செ.குணரெத்தினத்தின் மேலும் இரு நாவல்கள் அண்மையில் வெளிவந்துள்ளன ''துன்ப அலைகள்'' ஒரு கிராமம் தலை நிமிர்கிறது. (2002) என்பனவே அவை. இவற்றுள்பின்னையது சாதி அடக்கு முறையாலும், வர்க்க பேதத்தாலும் முன்னேற்றமின்றி வாழ்ந்த ஒரு கிராமம் தனது முன்னேற்றத்திற்கான சிறந்த வழி கல்வியறிவை வளர்த்தலே என்பதைத் தெரிந்து கொண்டு சண்டை சச்சரவுகளை ஒழித்து குடிவெறியைத் துறந்து முன்னேற்றம் பெற்றமையைக் கருப்பொருளாகக் கொண்டது.

ஆனந்தா ஏ.ஜீ இராஜேந்திரம் எழுதிய ''மாலையில் ஓர் விடியல்'' (2002) என்னும் நாவல், காதல் வாழ்வில் ஏற்படும் தடைகளும் பிழையான புரிந்துணர்வும். வாழ்க்கையை பாதிப்பதைக் கருப்பொருளாகக் கொண்டது .

மட்டக்களப்புத் தமிழகத்தில் துப்பறியும் நாவல்களை எழுதும் முயற்சியிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சிலர் ஈடுபட்டனர். இந்த அடிப்படையில் அருள் செல்வநாயகம் எழுதிய ''மர்ம மாளிகை'' (1973) நவம் (ஆறுமுகம்) எழுதிய 'நிழல் மனிதன்'', ஜீனைதா ஷெரீப் எழுதிய அவன் ஒன்று நினைக்க ஆகியன குறிப்பிடத்தக்கன.

பெண் நாவலாசிரியைகளுள் மண்டூர் அசோகா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோர் முக்கியமானவர்கள். இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை நிகழ்ச்சிகளாக்கி மட்டக்களப்பைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல், மண்டூர் அசோகாவின் ''பாதைமாறிய பயணங்கள்'' (1992) ஆகும். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் புகலிட இலக்கிய கர்த்தாக்களுள் சிறப்பிடம் பெறுபவர். 'ஒரு கோடை விடுமுறை' (1982) 'உலகமெல்லாம் வியாபாரிகள்' (1987 ) 'தில்லை ஆற்றங் கரையில்' (1987) 'தேம்ஸ் நதிக் கரையில்' (1992) 'பனிபெய்யும் இரவுகள்' (1994) 'வசந்தம் வந்து போய்விட்டது', அவனும் சில வருடங்களும்' (2000) ஆகிய நாவல்களை இவர் எழுதியுள்ளார். 'Kiss of Cobra" (1992) என்னும் ஆங்கில நாவலையும் இவரெழு தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. புகலிட அனுபவங்களையும், இனப்பிரச்சனையால் அல்லலுறும் தமிழ் மக்களின் அவலங்களையும், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை களையும் இவரது நாவல்கள் பதிவுகளாக்கியுள்ளன.

சங்கரி (ச.பங்கேஸ்வரி) போரதீவுப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டு முன்னர் எழுதிய 'ஒரு காவியத்தின் நாயகி' என்னும் நாவல் 1998ல் நூலுருப் பெற்றுள்ளது.

குறுநாவல் முயற்சியிலும் சிலர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் பின்வரும் முயற்சிகளைக் கூறலாம். மருதூர் வாணன் - 'பெருநாள் பரிசு' செ.குணரெத்தினம் - 'சொந்தம் எப்போதும் தொடர் கதைதான்' (1990)' சுமதி அற்புதராஜா - 'புதிய பாதை' (1990) 'திமிலை மகாலிங்கம் - 'பொன்குஞ்சுகள்' , 'பாதை மாறுகிறது' (1991)


சிறுவர்களுக்கான குறுநாவல்களையும் சிலர் எழுதியுள்ளனர். அவர்களுள் சிறப்பிடம் பெறுபவர்கள் மாஸ்டர் சிவலிங்கம், ஓ.கே.குணநாதன் ஆகியோர். மாஸ்டர் சிவலிங்கம் 'பயங்கர இரவு, என்னும் கதையினை எழுதி யுள்ளார். ஓ.கே.குணநாதன், 'சுதந்திம்' (1995) 'வீரஆனந்தன்' (1995), 'மாயக்கிழவி' , 'நரியின் தந்திரம்' , 'தர்மத்தின் வெற்றி' (2002) ஆகியனவற்றை எழுதியுள்ளார்.

(தொடரும்)

# மட்டக்களப்பின் தொன்மையை உறுதி செய்யும்

# பழந்தமிழ்ச் சொற்கள்

"காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்து ஏரியும் மல்கி இரத்தினத் திலகமெனஆரியர் போற்றும் அணிசார் இலங்கையிலே சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர் புகழும் ஏராலியன்ற செந்நெல்லின் சுவை தீங்கன்னவொடு தேங்கிள நீரும் தீம்பலாவின் அள்ளமிர்தும் எங்கும் குறையா இயலுடைய நன்னாடு மட்டக்களப்பென்னும் மாநாடு எனச் சுவாமி விபுலானந்தர் போற்றிப் புகழ்ந்த மண் மட்டக்களப்பு. வடக்கே மகாவலிகங்கையின் ஒரு கிளையான வெருகல் போறாறு தொடங்கி தெற்கே குமுக்கன் ஆறுவரை பரந்து விரிந்து நீண்டு வற்றர்த வளமும் குன்றாத குறையாத செழுமையும் கொண்டது இந்நாடு. அன்று சுமார் நூற்றுமுப்பது மைல் நீண்டு கிழக்கு மேற்காய் முறையே நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சியும் அணி செய்ய அழகாக அமைந்த இந்நாட்டின் வற்றாத பௌதிக



வளங்களையும் குன்றாத குறையாத செழுமையையும் கண்டு களித்த விபுலானந்தப் புலவரின் உள மகிழ்வின் வெளிப்பாடே மேலே தந்த பாடலாகும். முன்னொரு காலத்தில் பொலநறுவை - அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகள் கூட கிழக்கு மாகாணத்தோடு இணைந்திருந்தன. அன்றைய மட்டக்களப்பு தென்கிழக்குப் பகுதியாகும். என மட்டக்களப்பு மாண்மியம் கூறுகின்றது.

இன்றைய மட்டக்களப்பு பின் தோன்றிய தேயாகும். இசை வேந்தன் இராவணனின் கோட்டை பொத்துவில்லுக்கு அப்பால் கடலில் தெரிவதாக இன்றும் பலர் கூறுகின்றார்கள் என்றால் இப்பகுதியினர் தொன்மைக்கு வேறு சான்று தேவையில்லை.

ஒரு நாட்டின் வரலாற்றின் தொன்மையை பழமையின் தெளிவை தெரிந்து கொள்ள அந்நாட்டிலுள்ள பழம் பெரும் கிராமங்களில் மக்கள் பாவிக்கும் சொற்களைக் கொண்டு தீர்மானிக்கலாம் என்று மொழி அறிஞர் பரோ கூறுகிறார். அவர் கூற்றுப்படி பார்த்தால் மட்டக்களப்பு மக்கள் நீண்ட நெடிய காலமாக ஒரு தனித் தன்மையோடு வாழ்ந்து வருகிறார்கள். இதனால் அன்னியரின் காலாசாரங்களின் தாக்கங்கள் அவர்களைப் பெருமளவில் பாதிக்கவில்லை வடக்கில் ஆரியர் தொடர்பால் ஏற்பட்ட தீபாவளிப்பண்டிகை மட்டக்களப்பு மக்கள் மத்தியில் இடம் பெறவில்லை. அது மட்டுமின்றி சைவத்தின் பிரணவ வார்த்தையான "ஓம்" மட்டக்களப்பு மக்களின் அன்றாட வாழ்க்கையில் அழியாத இடத்தைப் பிடித்துள்ளது. இவை இரண்டையும் வைத்தே மட்டக்களப்பு மக்கள் இலங்கையின் ஏன் குமரி கண்டத்துத் தொல் குடியினர் வழிவந்தவர்கள் என்பதை உறுதிசெய்துவிடலாம். மட்டக்களப்பு வடக்குத் தெற்காக நீண்டு கிடக்கும் வற்றாத ஜீவநதியாம் மட்டக்களப்பு வாவியால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சூரியன் உதிக்கும் கிழக்கு எழுவான் கரையென்றும், மறையும் மேற்கு படுவான் கரையென்றும் அழகிய அர்த்தமுள்ள தனித் தமிழ்ச் சொற்களால் அழைக்கப்படுகின்றன.

பண்டைக்கால மக்களின் வாழ்க்கை முறை பண்பாடுகள் மறைந்தொழியா வண்ணம் இன்றும் படுவான்கரை வாழ்மக்கள் பாதுகாத்து வருகிறார்கள். ஆனால் படுவான்கரை மக்கள் பாதுகாத்துப் பாவித்துவரும் பழம் தமிழ்ச் சொற்களைச் சில பட்டணவாசிகள் பகிடி பண்ணுவதைக் காண்கிறோம். காரணம் அவர்கள் பழம் பெரும் தமிழ்ச் சொற்களை மறந்ததால் ஏற்பட்ட நிலைதான் அவை. பட்டண வாசிகள் அம்மா அப்பா என்று கூறுவதைப் படுவான்கரை மக்கள் அம்மை அப்பன் என்று அழைக்கிறார்கள். அது எப்படி இழிமொழி யாகும். இவை பழம் தமிழ் சொற்கள். அப்பர்



சுவாமிகள் "அப்பன் நீ அம்மை நீ ஐயன் நீ " என்று பாடியுள்ளார். எனவே படுவான்கரை மக்கள் வழக் கொழிந்து போகாது பாதுகாத்து வரும் தமிழ்ச் சொற்கள் அவையாகும்.எழுவான்கரை வாசிகள் நவ நாகரிக மோகத்தில் மறந்து அயர்ந்து விட்ட தமிழ்ச் சொற்கள் அவை.

மிகப் பழைய விழிப்பெயர்களும் அசைச் சொற்களும் மட்டக்களப்பு மக்களால் என்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மட்டக்களப்புக்கே தனித் தன்மை காட்டும் அசைச்சொல் "கா" இந்தக் "கா" வைக்கூட கொச்சைத் தமிழ் என கொச்சைப் படுத்துவார்கள் இன்று முண்டு.ஆனால் மட்டக்களப்பு மக்களிடையே இது பிரபல்யமான சொல்லாகும். "புள்ளலெக்கா புள்ளலெக்கா - உன்ர புருஷனெங்க போனது கா"

இவை போன்ற பல்லாயிரக்கணக்கான நாட்டுப்பாடல்கள் "கா"வை இறுதி அசைச் சொல்லாகக் கொண்டு நிறைவு பெறுகின்றன. இதை நன்குணர்ந்த ஒரு கவிஞன் "ஆடவர் தொழிலும் கா அரிவையர் நாவிலும் கா" எனப் பாடினான். தொல்காப்பியத்தில் 279ம் பாடலிலும் "கா" என்பது அசைச்சொல் வரிசையில் அடக்கப்பட்டுள்ளது. "அறநிழலெனக் கொண்டாய் குடையக்குடையப் புறநிழற் கீழ்ப்பட்டாளோ கண்டிகா" என்னும் கலித்தொகைப்பாடலில் கா என்னும் அசைச்சொல் காணப்பட்டுள்ளது. எனவே "கா" என்பது மொழிக்கு இசைவான அசைச் சொல்லாகும்.

மட்டக்களப்பு மக்களிடையே நாளாந்தப் பாவனையில் அதிகமாகப் பாவிக்கப்படும் இன்னுமொரு சொல் "பையப்பைய" இதுமெல்ல என்னும் அர்த்தத்தில் பயன்படும் சொல்லாகும். அதாவது உயரத்திலிருந்து கீழே இறங்கும் போதும் அல்லது உயரத்திலிருந்து பாரமான பொதிகளைச் சுமந்து இறங்கிவரும் போதும் பையப்பையப் பார்த்து வரவும் என்று கூறுவார்கள். இச்சொல் இதே கருத்தில் ஐங்குறுநூற்றில் - தலைவி தன்தலைவனுடன் மெல்ல நடந்தாள் என்பதைக் கூற "களையோடு பையவியலிப் பாவையன்ன வென்னாய் தொடிம்நதை" என்றும் "பையச் சென்றால் வையம் தாங்கும்" என்று ஔவையாரும், "பையவே சென்று பாண்டியவர்க்காகவே" என்று ஞானசம்மந்தரும். கையாண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஏலா, ஒண்ணா என்ற சொற்களை மட்டக்களப்பு கிராமிய மக்கள் பாவித்து வருகிறார்கள். அதாவது ஒரு வேலையைச் செய்ய முடியாது என்பதை வெளிப்படுத்த ஏலா - ஒண்ணா என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். செய்ய முடியும் என்பதை உறுதி செய்ய ஏலும் ஒண்ணும் என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்கள்.

"இட்ட இடத்தில் எதிர்த்து வந்தெய்தி ஓட்டுங்காவையொழிக்கவு மொண்ணா - என்று சிலப்பதிகாரத்திலும். "தேடித் தேடிடொண்ணா தேவனை என்னுள்ளே தேடிக்கண்டு கொண்டேன்." என்று தேவாரமும். "தெருவால போகவொண்ணா" தேன் போல மணக்குகிறது என்ற கிராமியப் பாடல்களில் ஒண்ணா என்னும் சொல் வருவதைக் காணலாம். "தாசியே கேளும் சதார மெண்ணும் ஓர் தையலிலிருக்கிறாளாம் - அவளைக் கொண்டு வர உன்னால் ஏலுமானால் இந்தக் குட்டையை எடுத்தேகு வாதிட்டவனை வெல்லவே ஏலா வகை மோசம் வந்து விடும்.

என்றும் சாதாரண ஊஞ்சல் பாடலில் ஏலா - ஏலும் என்னும் சொற்கள் பாவிக்கப்பட்டுள்ளன.

இன்றும் மட்டக்களப்பு கிராம மக்களிடையே மிகமிகச் சாதாரணமாகவும் சரளமாகவும் "எலுவா" என்ற சொல் பரவலாகப் பாவிக்கப்படுறது. இச்சொல் அல்லவா என்பதின் மரூஉவாக இருக்கலாம். இந்தச் சொல் "எலுசிறாஅர்" எனக் குறுந்தொகையிலும், "யாரை எலுவ" என்று நற்றுணையிலும் வருகிறது.

இதுபோல மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாகப் படுவான்கரைப் பிரதேசத்தில் பாவிக்கப்படும் பல பழந்தமிழ் சொற்களை எடுத்துக் காட்டலாம். உதாரணத்திற்காகச் சிலதை எடுத்து விளங்கினேன். இவை போன்ற பல பழந்தமிழ் சொற்கள் இன்றும் பாவனையிலுண்டு.

இவற்றைக் கொண்டு ஆய்வு செய்யும் போது - மட்டக்களப்பு மக்களின் தொன்மை பழமை - குமரிக்கண்டத்தோடு இணையாக இருக்கிறது. ஏனையமாவட்டத் தமிழைவிட மட்டக்களப்புத் தமிழிலே ஒரு தனித் தன்மையும் பழமையையும் காணக்கூடியதாக இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கையின் முக்கிய இனங்களான தமிழர் சிங்களவர் முஸ்லீம்கள் இணைந்து வாழ்கிறார்கள். அதனால் சிற்சில அரேபியச்

**- பூ.ம.செல்லத்துரை -**

சொற்களும் சில சிங்களச் சொற்களும் தமிழில் ஊடுருவி இருந்தாலும் - அவை தமிழின் தனித்தன்மையைப் பாதிக்கவில்லை. ஏராளமான மட்டக்களப்புக்கே சொந்தமான தமிழ்ச் சொற்கள் இன்றும் பாவனையில் உண்டு அவற்றைத் தொகுத்தால் தனி அகராதியாகிவிடும். எனவே காலம் வரும் வரை காத்திருப்போம்.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேச கல்வி கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியம்

இலங்கையில் மாவட்ட நிலையில் கல்வி நிருவாகம் இருந்த போது ஒரு விதமாகவும் இன்று வலய நிலையில் கல்வி நிருவாகம் இருக்கும்போது இன்னொரு விதமாகவும் நிலமை இருக்கிறது. புதிய நிருவாக அமைப்பைக் கொண்டு வரவேண்டும். இவ்வமைப்பினூடாகக் கல்வி முகாமைத்துவம், மேற்பார்வை போன்றவை பரவலாக்கப்பட வேண்டும், என்பதில் காட்டப்படும் அக்கறை அந்த நிருவாகத்தை நடாத்தக் கூடிய ஆளணியையும் வழங்க வேண்டும் என்பதில் காட்டப்படுவதில்லை என்பது கசப்பான உண்மை.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்று கல்வி வலயங்களிலும் இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்தவர்களுக்கான வெற்றிடங்கள் நிறைய உண்டு. இவ்வலயங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் வலயக் கல்விப்பணிப்பாளர்கள், இவர்கள் மேற்பார்வை செய்யும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பதில் கடமை பார்க்கும் அதிகாரிகளாகவே இருக்கின்றனர். இதே போன்று ஏனைய வெற்றிடங்களை நிரப்பாமல் அதிபர், ஆசிரியர் தரங்களை உடையவர்களைக் கொண்டு அக் கடமைகள் பார்க்கப்படுகின்றன. இதனால் அதிபர், ஆசிரியர்கள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான நிலை தோற்றுவிக்கப்படுகின்றது. இதை நிவர்த்தி செய்ய விசேட பரீட்சையின் மூலம் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளை தேர்ந்தெடுத்தல் அல்லது தற்போது பதில் கடமையில் ஈடுபட்டுள்ளோர்களைக் கல்வி நிருவாக சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்து அக்கடமைகளை அவர்கள் செய்ய வழி செய்யப்படல் வேண்டும். இவ்வாறு செய்யாமல் விடுவது அவர்கள் தங்கள் கடமைகளைச் சுதந்திரமாகச் செய்வதில் தடைகளை உண்டு பண்ணும், காரணம் தமது பதவி தற்காலிகமானது - வேறு ஒருவர் நியமிக்கப்பட்டால் பழைய பதவிக்குத் திரும்பிச்செல்லல் வேண்டும் என்ற மனநிலையை உருவாக்கும். இத்தகைய மாற்றங்கள் செய்யப்படும் போது கல்வியை வளர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் இயல்பாகவே மேற்கொள்ளப்பட வாய்ப்புண்டு.

நமது பிரதேசம் என்ற உணர்வு நம் எல்லோருக்கும் வர வேண்டும் பாடசாலை மட்டத்தில் வேலை செய்யும் சிற்றூழியர் தொடக்கம் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரி வரை இவ்வுணர்வு இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் பொறுப்புண்டு. இந்தப் பொறுப்பிலிருந்து விட்டுவிலகி காலங்கடத்தும் கதையாகி அங்கு நின்று இங்கு நின்று கல்வி அப்படி இருக்கிறது. கல்வி இப்படி இருக்கிறது என்று கதைப்பது மாத்திரம் கல்வி வளர்ச்சியாக நினைக்காமல் கல்வி வளர்ச்சிக்கு நான் என்ன செய்தேன் என்று தன்னைத்தானே கேட்கும் காலம் வருமாயின் கல்வி தாமாகவே வளரும். விசேட செயல் திட்டங்கள் தேவையில்லை. சமயத்தை வாழ்க்கை நெறியாகக் கற்பிக்காமல் பாடமாகக் கற்பிப்பதால் தான் அறநெறிப் பாடசாலைகள் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே நமது பொறுப்புக்களை நாம் உணர்ந்து அதற்கமையச் செயற்பட வேண்டும்.

எனது பொறுப்பையும் நான் உணர்ந்து செயற்பட்டதால் மட்டக்களப்பில் 350 மில்லியன் ரூபாவில் பல பயிற்சி நெறிகளையும் கொண்ட முழுமையான கல்வியற் கல்லூரி கம்பீரமாக நிற்கிறது. .இக்கல்லூரி மட்டக்களப்பில் நிறுவப்படுவதில் ஏற்பட்ட கஸ்டங்களையும், தடைகளையும் அக்கால கட்டத்திலுள்ள மாகாண, மாவட்டக் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நன்கு அறிவர். இது எனது மட்டத்து நிலை , இவ்வாறு ஒவ்வொரு மட்டமும் உணர்ந்தால் கல்வி வளர்ச்சி பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை விருத்தியடைச் செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டவை ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள், அவற்றை மூடிவிட்டு அதற்குப் பதிலாக கல்வியற் கல்லூரிகள் உருவாக்கப்படும் நிலை மத்திய கல்வியமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கமைய எமது மாவட்டத்தில் பல பாடநெறிகளைக் கொண்ட கல்வியற் கல்லூரி அமைந்ததினால் தரமான ஆசிரியர்களை, கூடிய எண்ணிக்கையில் உருவாக்குவது மட்டுமல்ல, அவர்களில் பெரும்பாலானோர் எமது மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கற்பித்தலில் ஈடுபடுத்த முடியும். இது இம்மாவட்ட கல்வி வளர்ச்சிக்கு வழிகோலுகிறது.



மட்டக்களப்பு பிரதேசத்தில் படுவான்கரைப் பகுதியில் கல்வி நிலை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அண்மைக் கால அனர்த்தங்கள் படுவான்கரைப் பிரதேசத்தை பெரிதும் பாதிக்கின்றன. ஆசிரியர் பற்றாக்குறை , பௌதீக வளப்பற்றாக் குறை முதலியன பிரதேச கல்வியை வளர விடாமல் தடுக்கும் காரணிகள் என்பதை உணர்ந்து அங்கிருப்பவர்களும் மக்களே என்ற நிலையில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும். வறிய குடும்பங்கள் இனங்காணப்பட்டு உரிய வசதிகள் செய்யப்பட வேண்டும். வயிற்றில் பசி, கையில் புத்தகம் பள்ளியில் படி இவற்றில் எது? எது? இந்நிலமை உணரப்படாத வரைக்கும் நமது பிரதேசக் கல்வி வளர்ச்சி பூரணமாகாத ஒன்றாகவே இருக்கும். படுவான்கரைப் பிரதேச ஆசிரியர்கள் நகர்ப்புற பாடசாலைகளுக்கு வரமுயலுகின்றமை, நகர்புற ஆசிரியர்கள் படுவான்கரைப் பிரதேசத்திற்குச் செல்ல விருப்பமின்றி இருக்கின்றமை போன்ற காரணங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**எஸ்.எம்.மனோகரன்**
**ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்**

தற்போது ஓரளவு ஆசிரியர் பற்றாக் குறை நிவர்த்தி செய்யப்பட்டுவரப்படுவதாக அறிகிறேன். இவ்வாறு பௌதீக வளப் பற்றாக் குறையும் நிவர்த்தி செய்யப் படுமாயின் மேலும் சிறப்பாக இருக்கும். இதற்கு படுவான்கரைப் பிரதேசத்திற்கு என்று தனியான கல்வி வலயம் அமைக் கப்படுமாயின் அது யாவற்றிலும் பொருந்தக் கூடியதாக இருக்கும். அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இல்லையாயின் இக்குறைபாடு தொடரும்.

எந்த மட்டத்தில் என்ன முடிவுகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஆசிரியர்களின் கையில்தான் மாணவரின் எதிர்காலம் உள்ளது. எனவே ஆசிரியர்கள் தம் பாட அறிவை மேம்படுத்துவதிலும், கற்பித்தல் நுட்பங்களை மேம்படுத்துவதிலும் அக்கறை காட்ட வேண்டியது அவசியம். புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் தம்பாட அறிவை மேம்படுத்துவதற்கு இம் மாவட்டத்திலே தேசிய கல்வி நிறுவன கற்றல் நிலையமும், கல்வி வள நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளது. இதே வேளையில் கல்வி திணைக்களம் ஆசிரியர்களின் தேவைகள், நலன்களிலும் அக்கறை காட்ட வேண்டும்.

* ஒழுங்கான ஆசிரிய இடமாற்றத் திட்டம்

* சம்பள உயர்ச்சி உரிய காலத்தல் வழங்கப்படல்

* உரிய காலத்தில் உரிய பயிற்சிகள் வழங்கப்படல் புலமை பரிசில் வழங்குதல்.

* கடன்வசதி செய்து கொடுத்தல் போன்றவை.

தற்போதய வடகிழக்கு கல்வியமைச்சின் நிருவாக அமைப்பில் சிரேஸ்ட அதிகாரிகளின் பதவி வலுவற்ற நிலையில் காணப்படுகிறது, உதாரணமாக மாவட்ட ரீதியில் நியமிக்கப்பட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர். மாகாண கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதியாக மாவட்ட மட்டத்தில் கடமையாற்ற வேண்டும். இவர் வலயக்கல்விப் பணிப்பாளர்களை விட கல்விச் சமூகத்தால் வேண்டப்படும் ஒருவராக, அதிகாரம் கூடியவராக இருக்க வேண்டும். ஆனால் நிலைமை அவ்வாறில்லை, சிரேஸ்ட அதிகாரியின் திறமை வீணடிக்கப்படுகிறது எனவே இப்பதவி வலுவுற்றதாக்கப் படல் வேண்டும் அல்லது ஒழிக்கப்பட வேண்டும்.

மாகாணத் திணைக்கள அதிகாரிகளும் மாவட்டக்கல்வி அபிவிருத்தியை கருத்தில் கொண்டு துரிதமாகச் செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்படாத காரணத்தால் 2001ஆம் ஆண்டில் மட் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மட்- கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்- ஆரப்பற்றை மகா வித்தியாலயம், மட்- மீராவோடை அல்ஹிதாயா வித்தியாலயம். மட்- ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்குக் கல்வி அமைச்சர் சுசில்பிரேம்ஜயந்த அவர்களிடம் இருந்து பெறப்பட்ட நிதியை பயன்படுத்திக் கட்டடங்களை அமைத்துக் கொடுத்திருக்கலாம். மத்திய அமைச்சு ஓதுக்கீடு செய்தாலும் மாகாண மட்ட அதிகாரிகள் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமல் போனால் கிடைத்த ஓதுக்கீடும் பிரயோசனமற்றதாகி விடும்.

போர் காரணமாக மாணவர்கள் கல்வியை இழந்து நிற்கிறார்கள். இதுவும் மாணவரது கல்வி வளச்சியைப் பாதிக்கும் ஒரு காரணியாகும். இவர்களுக்கு கல்வியை வழங்க கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் யூனிசெப் நிறுவனம் ஒரு செயல் திட்டத்தை அமுல் நடத்த இருப்பதாக அறிகிறேன். அது வரவேற்புக்குரியது

தற்போது வெவ்வேறு செயற்றிட்டங்கள் மூலம் இழந்த கல்வியைப் பெறுவதற்குரிய செற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது மகிழ்ச்சியைத் தருகிறது. இவை வெற்றியளிக்க மேல்மட்ட அதிகாரிகள் மட்டுமின்றி அடுத்தடுத்த மட்டக் கல்வி அதிகாரிகள் , அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் யாவரும் தோள் கொடுத்து உதவ வேண்டும். எமது மாவட்டத்தில் முன்பள்ளி நிலையங்கள் தனிநபராலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நகர்ப்புறங்களில் நீண்டகால மாக நடைபெற்றுவருகின்றன. இவை சில வருடங்களாக கிராமப் புறங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளில் எந்த வித வேதனமும் இன்றி தொண்டர்களாக பலர் கடமையாற்றுகின்றனர். இவர்களுக்கு எந்த விதப் பயிற்சியோ வழிகாட்டலோ சரியாகக் கொடுக்கப்படவில்லை. அரசியல் சாசனத்தின் 13வது திருத்தத்திற்கமைய முன்பள்ளி விடயம் மாகாண நிருவாகத் திற்குக் கையளிக்கப்பட்டுள்ளது. மாகாண க்கல்வி அமைச்சு இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்று இவ்வாசிரியர்களுக்கு நியமனம் வழங்கி பயிற்சிகளும் கொடுத்து மேற்பார்வை செய்யப்படும் பொழுது முன் பள்ளிக்கற்றல் கற்பித்தல் நிகழ்வு வலுவடைகிறது. இதனால் கல்வியில் ஸ்திரமான அத்திவாரம் முன்பள்ளி நிலையங்களினூடாக மாணவர்களுக்கு இடக்கூடிய வாய்ப்புண்டு

மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் பாடநூல் உரிய காலத்தில் அவர்களுக்கு கிடைப்பதில்லை. மேலும் தமிழ் மொழி மூல பாடநூல்களில் பல பிழைகள் காணப்படுவதாக விமர்ச்சிக்கப்படுகிறது. இந் நடவடிக் கையைத் துரிதப்படுத்தவும், சீராக்கவும் தமிழ் மொழிமூலப் பாடப்புத் தகங்களை மாகாண கல்வியமைச்சு பொறுப்பேற்க வேண்டும். இதற்குரிய வளங்கள் எமது மாகாணத்தில் உண்டு.

இதுபோன்ற ஆக்க பூர்வமாக செயற்பாடுகளை வார்த்தையளவில் நிறுததாமல் வடிவாக திட்டமிட்டுச் செயலளவில் இறங்கினால் கல்வியில் மேலும் வளர்ச்சியடைய வாய்ப்புண்டு.

## துயரந்ந புன்னகை

சிலிர்த்தெழும் ராப்பொழுதுகளில்
வலித்த மனதுடன்
வாழ்வைத் திரும்பிப்பார்க்கிறேன்

வெட்கித்த வேளைகளின்
வேதனை முட்கள் இன்னும்
உடலெங்கும் ஊர்வதாய்......

முகம் அசிங்கமானதாக
தொடர்பறுத்துப் போன
நண்பர்கள்
முடிவற்ற இருளுக்கப்பாலிருந்து
முறைத்துப் பார்ப்பதாய்.....

நிலவோடு பேசிய கடைசிநாளும்
நினைவற்றுப் போனது,
யாருக்காகவும், எப்போதேனும்
உதிர்த்த

துயரற்ற புன்னகையொன்று
என் பழைய புகைப்படத்தில்
எங்கேனும் இருத்தல் கூடும்
கறையான் அரிக்காமல்
காப்பாற்றி வைத்திருப்பவர்கள்
தந்து விடுங்கள்
மரணத்தின் முன்னென்
இருளற்ற முகத்தை
தரிசித்த மகிழ்வோடு
மரணித்துப் போகின்றேன்.

திருக்கோவில் கவியுவன்

# சிறுவர் சிகரம்



## புத்தியுள்ள நாரை



நரியொன்று பசியால் காட்டில் அலைந்து திரிந்தது. பின்னர் ஒரு ஆற்றங்கரைக்கு வந்தது. அங்கே ஆற்றின் நடுவில் ஓர் நாரை நிற்பதைக் கண்டது. நாரையைக் கண்டதும் தனக்கு உணவு கிடைத்து விட்டது என நரி சந்தோசப்பட்டது. ஆனால் நாரைக்கு அருகில் எப்படிப் போவது என யோசித்தது. அந்தக் வேளையில் அருகில் இருந்த கோரைப் புற்கள் அதன் கண்ணில் பட்டன.

நரி அந்தக் கோரைப் புற்களை வாரிக் கற்றையாகக் கட்டி ஆற்றில் விட்டது. அந்தப் புற்கற்றை ஆற்றில் மிதந்து நாரையின் காலில் பட்டது. உடனே நாரை பயந்து திடுக்கிட்டது. ஆனால் அது புற் கற்றை எனக் கண்டதும் அதன் பயம் தெளிந்தது. நரி இவ்வாறு இரண்டு, மூன்று தடவை செய்தது. நான்காம் முறை நரி இவ்வாறு செய்வதை நாரை கவனித்து விட்டது. ஆனாலும் அது அங்கிருந்து பறந்து விடாது என்ன நடக்கப் போகிறது எனப் பார்த்துக் கொண்டு நின்றது. இந்தத் தடவை அந்தக் கோரைப் புற் கற்றையோடு நரியும் சேர்ந்து வருவதைக் கண்ட நாரை நரி தன்னை அண்மித்ததும் பறந்து சென்றது. நரியோ தன் தந்திரம் பலிக்கவில்லை என வெட்கித் தலை குனிந்தது.

க.சூட்டி
தரம்-12,பதுளை வீதி
செங்கலடி.

## விஞ்ஞான விளக்கங்கள்

01. மூடி திறந்திருக்க வெப்பமாக்கப்படும் கேத்தலிலும் பார்க்க மூடப்பட்டிருக்க வெப்பமாக்கப்படும் கேத்தலின் நீர் விரைவாகக் கொதிக்கும்.

* **மூடி திறக்கப்பட்டுள்ள நீர் ஆவியாதல். ஆவியாதலுக்கான வெப்பம் / சக்தி நீரிலிருந்து உறிஞ்சப்படுகிறது. இதனால் நீர் கொதிப்பதற்கான வெப்பநிலை அடைவதற்கு அதிக நேரம் வெப்பமாக்க வேண்டும்.**

02. விறகு குற்றியாக எரிவதிலும் பார்க்க அக்குற்றி துண்டுகளாக வெட்டப்பட்டிருக்கும்போது எளிதாக எரியும்.

* **விறகுக் குற்றியை விட விறகுத் துண்டுகளின் மேற்பரப்பளவு அதிகம் அப்போது $O_2$ (தகனத் துணையி / வளி) உடன் மோதும் மேற்பரப்பளவு அதிகமாகின்றது. சிறிய விறகுத் துண்டுகள் எரிபற்று நிலை அடைதல் விரைவாக நிகழும் இதனால் விறகுத் துண்டுகள் விரைவாக எரிகின்றன.**

03. மின் வடங்களின் கடத்தும் கம்பிகளுக்காகச் செப்பு பயன்படுத்தப் படுகிற போதிலும் மின் குமிழில் இழைக்காகத் தங்கிதைகள் பயன்படுத்தப்படுகிறது,

* **உயர் கடத்து திறன் உள்ளதால் மின் வடங்களில் செப்புக் கம்பி பயன்படுத்தப்படுகிறது. மின் குமிழில் உள்ள இழை உயர் வெப்பநிலைக்கு உள்ளாவதால் உருகுநிலை கூடிய தங்கிதன் உலோகம் இதற்குப் பொருத்தமானது. தங்கிதன் உயர் தடைத்திறன் கொண்டுள்ளதால் நன்கு சூடாகக் கூடியது.**

04. பலாக்காய், ஈரப்பலாக்காய், பாகற்காய் போன்ற உணவுப் பொருட்கள் பழுதடையாமல் நெடுங்காலம் பேணி வைப்பதற்கு உலர்த்தப்படுகின்றன.

* **உணவுப் பொருட்கள் நுண்ணங்கிகள் தொழிற்பாட்டினால் பழுதடைகிறது. ஈரப்பற்றுள்ள போது நுண்ணங்கிகள் தொழிற்பாடு அதிகரிக்கிறது. உணவுப் பொருட்கள் உலர்த்தப்படும் போது ஈரப் பற்று அகற்றப்படுவதால் நுண்ணங்கித் தொழிற்பாடு தடைப்படுகிறது.**

வீ. ஆர்த்தி
தரம் - 11, மட் / தம்பலவத்தை ம.வி

## தேடல்

| ச | மா | தா | ன | ம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

01. நாள் தோறும் எண்ணும் பொருளைத் தருவது..? -(1-3)
02. மக்களைக் குறிக்கும் சொல்...? -(1,4,5)
03. முக்கனி மரங்களுள் ஒன்றினையும், 'பெரிய' 'குதிரை' போன்ற பல பொருட்களையும் தரும் பதம்..? -(2)
04. 'முன்னறி தெய்வங்களுள்' ஒருவர்...? -(2,3)
05. 'மாதம்' என்பது பேச்சு வழக்கில் இப்படியும் வரும்...? -(2,1,5)
06. உயிரினும் மேலாய் காக்கப்பட வேண்டிய ஒன்று..? -(2,4,5)
07. தரச் சொல்லிக் கேட்பது...? -(3)
08. 'அடிமை' என்ற பொருள் தரும் பதம்..? -(3,1,5)
09. 'நாம்' என்னும் தன்கூற்று பிறர் கூற்றாய் வரும்போது..? -(3,5)
10. பாவவினை போக்குவதற்காகச் செய்யப்படுவது கொடை என்ற பொருளிலும் வரும் அது என்ன...? -(3,4,5)

**விடைகள்**

1. சதா — 6. மானம்
2. சனம் — 7. 'தா'
3. 'மா' — 8. தாசம்
4. மாதா — 9. தாம்
5. மாசம் — 10. தானம்

*வெல்லபதியான்.*
*எருவில்.*

## பழமொழிகள்

01. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
02. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி.
03. இளங்கன்று பயமறியாது.
04. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
05. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?
06. இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து.
07. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
08. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
09. குற்றம் பார்க்கில் சுற்றமில்லை.
10. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
11. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
12. புத்திமான் பலவான்.

க.துஸ்யந்தன்.
மட் / கன்னன்குடா ம.வி.

## தெரிந்து கொள்ளுங்கள்

01. இலங்கை எப்போது குடியேற்ற நாடாகியது?
**1802ம் ஆண்டு**
02. துப்பாக்கிக் குண்டின் வேகம் எவ்வளவு?
**2000 அடி**
03. 4ம் சிலுவைப் போர் எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
**கி.பி. 1202ல்**
04. சிறுவர் சிலுவைப் போர் எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
**கி.பி.1221ல் நடந்தது.**
05. உலகில் முதன் முதலில் வெடிமருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?
**அல்பேர்ட் நோபால** *(ALBERT NOBEL)*
06. கொள்கை வீரர் சொல்லின் செல்வர் யார்?
**கு.யா திராவிடக்கழல்**
07. நைல்நதிப் போர் எப்போது ஏற்பட்டது?
**கி.பி 1798 இல்**

### கடிகாரம் எனும் சொல் எப்படி வந்தது.

**கடிகை என்பது தமிழில் நாழிகை என்ற கால அளவைக் குறிக்கும் இதிலிருந்தே காலத்தை அறிய உதவும் கருவிக்கு கடிகாரம் என்ற பெயர் வந்தது.**

மூர்த்தி கவிதா
நாவற் குடா.

## பொது அறிவு

01. உலகில் மிக உயரத்தில் உள்ள ஏரி எது?
**டிடிக்கா ஏரி**
02. உலகில் முகடாகக் கருதப்படும் மேட்டு நிலமெது?
**திபெத் மேட்டு நிலம்.**
03. உலகில் மிகப் பெரிய தீவு எது?
**கிறீன்லாந்து**
4. உலகில் மிக உயரத்தில் உள்ள நீர் வீழ்ச்சி எது?
**நயகரா நீர்வீழ்ச்சி**
05. அண்மையில் பூகம்பம் இடம் பெற்ற நாடு எது?
**துருக்கி**
06. உலகில் அதிக மொழி பேசும் நாடு எது?
**பாலுத் தீவு**
07. கறுப்பினத் தலைவர் யார்?
**கொபியனாம்**
08. கொடுங்கோல் ஆட்சி செய்து அண்மையில் உயிர் நீத்தவர் யார்?
**இடியாமீன்**
09. சீனா நாட்டின் தேசிய மலர் எது?
**திராட்சை மலர்**
10. உலகில் மிகப் பெரிய நாடு எது?
**ரஸ்சா**

*சா.நித்துளா*
*தரம்-11*
*மட் / மண்டூர் ம.வி*

## கல்வி கரையில்லாதது

கல்விக் கடலில் குதித்து
நல்லறிவு முகத்தைத் தேடு
கற்கும் கல்விக்குக் கரையில்லை
கற்றால்உனக்குக் கவலையில்லை
செல்வம் என்பது நிலையில்
கற்ற கல்வியே என்றும் உற்ற
துணை
கல்வியை நன்றே கற்றிட வேண்டும்
என்றும் நலமே பெற்றிட வேண்டும்.

A.N.M ஜிப்ரி
காத்தான்குடி ~ 04.

## பணத்தின் மதிப்பு

பணத்தால் மெத்தையை வாங்க முடியும், தூக்கத்தை வாங்க முடியாது.

புத்தகங்களை வாங்க முடியும், அறிவை வாங்க முடியாது.

அழகு சாதனங்களை வாங்க முடியும், அழகை வாங்க முடியாது.

ஆடம்பரப் பொருட்களைவாங்க முடியும், கலாச்சாரத்தை வாங்க முடியாது.

களியாட்டங்களை வாங்க முடியும், சந்தோசத்தை வாங்க முடியாது.

**க.நிதிகரன்.**
**திருப்பழுகாமம் - 01**

## விடுகதைகளும் விடைகளும்

**01. தீயில் இருந்து உண்டாகும் எமக்கு எரிச்சலை உண்டாக்கும் அது என்ன?**
புகை

**02. இரு புறமும் பாதை இடையே தூண் அது என்ன?**
மூக்கு

**03. நீரிலே வாழும் மீனல்ல கொம்புண்டு மாடல்ல அது என்ன?**
நத்தை

**04. மாளிகையுள்ள முத்து சிப்பிகள் அது என்ன?**
பற்கள்.

**05. ஈரேழாம் பதினாலாஞ் சோலை இருபுறம் தச்சருடைய வேலை அது என்ன?**
புல்லாங்குழல்

எம்.ஜே.முஷர்ரப்
காத்தான்குடி



ஆக்கம்
தி.வண்ணன்
அரசடித்தீவு தெற்கு

# பொட்டும், பூவும் பெண்ணுக்கு தாய் வீட்டு அணிகலன்கள்



நம் நாட்டில் கணவனை இழந்த பெண்ணுக்குச் சீர் கெட்ட சமுதாயம் வைத்துள்ள பெயர் விதவை என்னும் பட்டம். இந்தப் பட்டத்தினால் பல பெண்கள் நம் மத்தியில் கண்ணீரும் கவலையுமாக ஏக்கம் பாதி தாக்கம் பாதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சட்டத்திலோ அரசாங்கத்திலோ கணவனை இழந்த பெண் பொட்டு வைத்து பூச்சூடி பட்டுச் சேலை உடுத்திக் கொள்ள கூடாது என்று எழுதி வைக்கப்படவில்லை. பொட்டு, பூ என்பது ஒரு பெண் தன்தாய் வீட்டில் இருந்து கொண்டு வந்த அழிக்க முடியாத அணிகலன் என்று சொல்லலாம். பெண் குழந்தையாக இருந்து பருவமடைந்து திருமணமாகிப் புகுந்த வீட்டிற்குச் செல்லும் போது கூட பொட்டு பூ அழிக்கப்படுவதில்லை. கரம்பிடித்த கண்வன் இறந்து விட்டால் மட்டும் ஏன் பொட்டையும் பூவையும் இழந்து வெள்ளைப் புடவையுடன் காட்சி கொடுக்க வேண்டும். ஒரு ஆண் பெண்ணுக்கு வைத்த பொட்டா அல்லது அவர்கள் சூடிய பூவா? தாய் வீட்டில் இருக்கும் போதே தாய் என்பவள் தன் மகளுக்குப் பொட்டு வைத்து, பூச்சூடி ஆசை ஆசையாகப் பட்டுடுத்தி அழகு பார்த்து மகிழ்கிறாள். தாய் பார்த்து ரசித்ததை இடையில் வரும் துணைவன் சொந்தத்திற்காக ஏன் அழிக்க வேண்டும்.

உயிரிலும் மேலான கணவனாலும் அன்பின் ஆழ்கடலாக இருந்தாலும் பொட்டையும் பூவையும் ஒரு ஆணுக்காக அழிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. தாய் அழிக்கச் சொன்னால் அழிப்பதில் தப்பில்லை. ஏன் என்றால் அன்னையின் கரங்களினால்தான் குழந்தைப் பருவத்தில் நாம் இருக் கும் போது அவள் வைத்த பொட்டும் பூவும் சிட்டுப் போல் நாம் சுதந்திரமாகப் பறந்துதிரிய காரணமே " அன்பின் கடல் அம்மாவே" ஒரு வருடத்தில் திருமணமாகி கணவனை இழந்த பெண்ணைப் பார்க்கும் போது அவளின் கண்ணீருக்கு அழவேயில்லை. பட்டுடுத்தி சிட்டாய் பறக்கும் பருவத்தில் முட்டாள் சமுதாயம் சிறகுடைத்து விதவைப் பட்டம் சூட்டியுள்ளது.

நம்மிடையே மாமியார், மாமனார் பெற்றோர்கள் உறவினர் அயல் வீட்டில் இருப்போர் எல்லோரும் கணவனை இழந்த பெண் வீதியில் பொட்டு வைத்துப் பூச்சூடி சென்றால் அவர்கள் வாயில் வரும் வார்த்தைக்கே அழவில்லை. கணவனை இழந்ததும் பொட்டு வைத்து கொஞ்சம் கூட துக்கமின்றி செல்கிறாளே என்று தீய வார்த்தைகளால் பேசுவார்கள்.

விதவைப் பெண்கள் வெளியில் செல்ல வழியில்லை. பல்விழுந்த தாத்தாமார் கூட சகுனம் பார்த்து திட்டித் தீர்ப்பார்கள். இதனால் பல பெண்கள் தங்கள் மீது தங்களுக்கே வெறுப்பு வந்து உயிரை விட்டு இருப்பது கவலைதான். சில பெண்களைப் பெற்றோர்கள், மாமியார், மாமனார் நீ கணவனை இழந்தவள் உனக்கு இனி எந்தச் சுதந்திரமும் இல்லையென வீட்டிற்குள் பூட்டி வைத்து வெளியில் வரவிடாமல் வட்டத்திற்குள் வாழ வைக்கும் புத்தியில்லாத சமுதாயம். தாய்வீட்டிலிருந்து கொண்டு வந்த அழிக்க முடியாத சீதனமாகிய பொட்டையும் பூவையும் தாயைத் தவிர எந்தத் தீய சக்திக்கும் உரி மையில்லை. சமூதாயம் செய்த குற்றமும் கணவன் இழந்த பெண்கள் நல்ல விடயத்திற்கு முன்னுக்கு சகுனி மாதிரி வரவேண்டாம் என்பது வழக்கமாகி வருகிறது. சகோதரிகளே பெண்களாகிய நாம்தான் சீர்கெட்ட சமூதாயம் பெண்களை விதவை என்னும் சிறைக்குள் அடைத்து வைத்திருப்பதை வெளியில் கொண்டு வந்து சிறகடித்துச் சிட்டு போல் பறக்கச் செய்ய வேண்டும். என்ன சகோதரிகளே இப்போதே விதவை என்னும் பட்டத்தை அழிக்க தயாராகி இருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

**சிவலிங்கம் சுமதி**
**ஏறாவூர் ~ 04**

# அரிவையர் அலை



# மருத்துவக் குறிப்புக்கள்

## கண்பார்வை சரியாக

கண்பார்வை காரணமில்லாமல் மங்கலாகக் குறைந்து வந்தால், கொத்துமல்லிக் கீரையை வாங்கி வந்து சுத்தம் செய்து வெறும் வாயில் போட்டு மென்று சாப்பிடுங்கள். பார்வைக் குறைவு சரியாகி விடும்.

## காலில் வெடிப்பா?

காலில் வெடிப்பு ஏற்பட்டு விட்டால் சிரமமாய்த்தான் இருக்கும். கடுக்காய், எள், மஞ்சள், உப்பு, இவைகளை சம அளவு எடுத்து இடித்துப் பொடி செய்து வெள்ளாட்டின் சிறுநீரில் இந்தப் பொடியைக் கரைத்து இரவு படுக்கப் போகுமுன் வெடிப்புக்களில் இதைத் தடவி காலையில் சுத்தம் செய்து விடுங்கள். சில நாட்களில் வெடிப்பு மறைந்து விடும்.

## பசியுமில்லை ருசியுமில்லை

பசியும் ருசியும் இல்லையா? புதினாக் கீரை வாங்கி வந்து சுத்தம் செய்து இலேசாக வதக்கித் துவையல் செய்து சுடச்சுட சாதத்தில் போட்டுச் சாப்பிடுங்கள் சரியாகி விடும்.

# சருமத்தைப் பாதுகாக்க சில வழிமுறைகள்

* நம்மில் பலர் சருமத்தை நன்றாகக் கழுவி சுத்தம் செய்வர், சருமம் வறண்டு விடும் அதன் ஈரப்பதத்தை எடுத்து விடும் என்று தவறாகப் புரிந்து கொள்கிறோம். ஆனால் சருமத்தின் இறந்து போன செல்களைக் கழுவி வெளியேற்றி அழுக்குகளை அகற்றினால் தான் சருமம் இளமையில் பொலிவுடன் விளங்கும்.

* முகம் சுத்தம் செய்யும் போது சுடுநீரினால் கழுவுவதைத் தவிர்க்க வேண்டும்.

* சொரசொரப்பான பொருட்களை உபயோகித்து முகத்தைத் தேய்க்கக் கூடாது.

* பஞ்சு போன்ற பொருட்களைக் கொண்டு முகத்தைச் சுத்தம் செய்யவேண்டும்.

* உங்கள் சருமம் வரண்டிருந்தால் ஏதாவதொரு எண்ணெய்ப் பசையைச் சருமத்தில் நன்றாகத் தடவி சில நிமிடங்கள் கழித்து மிதமான சுடுநீரில் அலம்ப வேண்டும்.

# பெண்கள் பற்றி அறிஞர்கள்

- பெண்ணின் பண்பு தடியைப் போன்றது. **வெட்டவெட்ட** முன்னிலும் அதிகமாய் வளரும் **(கன்பூஷியஸ்)**
- அன்பற்ற பெண் வாசமற்ற மலரைப் போன்றவள். **(ரூஸோ)**
- பெண்களின் கண் ஓர் அன்பு ஒளியைப் பாய்ச்சும் மறுகண் யுக்தியால் எடைபோடும். **(சார்ல்ஸ்)**
- அடக்கமே பெண்களைத் தெய்வமாக உணர்த்துகின்றது. **(ஷேக்ஸ்பியர்)**
- ஆண்களை விடப் பெண்களுக்கு இதயமும் அதிகம் கற்பனையும் அதிகம். **(லாமர்டைன்)**
- பெண்ணுக்குப் பெருமை தருவது அவளின் தூய்மையான இதயம். **(கிளாடியஸ்)**
- பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள். **(வேட்லி)**

**தே.மதன்ராஜ்.**
**மாமாங்கம், மட்டக்களப்பு.**

# ஆரோக்கிய குறிப்புகள்

*** தினமும் 8 டம்ளர் நீர் அருந்தவும்**

*** குறிப்பிட்ட நேரத்தில் உணவு சாப்பிட விளையாட வேலைக்குப் போக, உறங்க என்று ஒரு நேரசூசியைப் போட்டுக் கொண்டு அதன் படி தின மும் செயற்படுங்கள். அது உங்கள் ஆரோக்கியத்திற்கு நிச்சயம் நல்லது.**

*** சாப்பிடும் போது எதையும் அளவுக்குச் சாப்பிடுங்கள் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்று ஒரு பழமொழியே இருக்கின்றது. எனவே தான் அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால் பல நோய்கள் வரலாம்.**

*** சாப்பிடும் போது எந்தக் கவலையும் மனதில் இருத்திக் கொள்ளாதீர்கள்.**

*** குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு தரமாவது தியானம் செய்ய உங்களை நீங்கள் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.**

*** எந்த நாளும் "உர்ர்ர்" என்று முகத்தை வைத்துக் கொண்டு இராமல் இனிமையாக, சிரித்துப் பேசுவது இருதயத்திற்கு நல்லது.**

***கீரை வகைகளையும், பழங்களையும் உணவில் சேர்த்துக் கொள்ளுவ தற்கு மறவாதீர்கள்.**

**எஸ்.ஜீவா**
**மகிழடித்தீவு**

# கல்லானாலும் கணவன்

1. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்.
2. வீட்டின் குலவிளக்கு பெண். அக்குலவிளக்கிற்கு எண்ணெய் அவசியம் அவ்வெண்ணெய் அவள் புருஷனே.
3. ரோஜாவுக்குத் தன் தண்டு எவ்வளவு அவசியமோ அதேபோன்றுதான் மனைவிக்கு அவள் புருஷன் அவசியம்.
4. வீட்டில் புருஷனை இழந்தவள் இருக்கலாம். புருஷனை விட்டவள் இருக்கக் கூடாது. இருந்தால் அவ்வீட்டிற்கு மதிப்பில்லை.
5. பெண்ணுக்கு உலகத்தில் எது இல்லாவிட்டாலும் புருஷன் வேண்டும்.

S.ஷரிதா.


## வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி கம்பனியில் பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| **பதவி** | :-- வெளிக்கள உத்தியோகத்தர் |
| **மாவட்டம்** | :-- மட்டக்களப்பு, அம்பாறை |
| **தகைமை** | :-- O/Lஇல் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்அதில் கணிதம் உட்பட 3 பாடங்களில் திறமைச்சித்தி அடைந்திருக்க வேண்டும். A/Lஇல் இரு பாடமேனும் சித்தியடைந்து இருத்தல் நன்று. |
| **முடிவுத்திகதி** | :-- 10-10-2003 |
| **தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி** | :-- வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி கம்பனி, பய னியர் வீதி, மட்டக்களப்பு. (தேவநாயகம் மண்டபத்திற்குமேல்) |

*** வரையறுக்கப்பட்ட கூட்டுறவுக்காப்புறுதி கம்பனி மட்டக்களப்புக் கிளையில் வெளிக்கள உத்தியோகத்தராக கடைமையாற்ற தகுதியும் விருப்பமும் உடையவர்கள் மேற்படி முகவரியில் நேரடியாக தொடர்பு கொண்டு ரூபாய் 50 /-ஐ செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து கொடுப்பதன் மூலம் நேர்முகப்பரீட்சைக்கு தோற்ற அனுமதியைப்பெற முடியும்.**

**தங்களால் செலுத்தப்படும் பணம் மீளளிக்கப்படாத கட்டணமாக கருதிக்கொள்ளப்படும்.**

**முகாமையாளர்,**
**வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதிக்கம்பனி,**
**மட்டக்களப்பு.**

# ஒன்று எங்கள் சாதியே

விடியலின் மலர்வு சேவல்களின் சங்கீதப் பொலிவில் மூழ்கியவாறு மகேசன் விழிகளைத் திறக் கிறான். அவன் விழிகள் எதிரே அரையும், குறையுமாக வெளிறிக் கிடக்கிறது கிழக்கு!

அருகே படுத்திருந்த அப்பு மீது பார்வையைப் படர விடுகிறான். அவர் இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கிறார். இப்படி அவர் நெடுநேரம் தூங்கிக் கொண்டிருப்பது அவனுக்கு விரோதமாகவே பட்டது. குளிரின் ஆட்சிதான் அவரை இப்படி அடித்துப் போட்டிருக்கிறது என ஊகித்துக் கொண்டான் மகேசன்.

மீண்டும் அவன் கண்களை மூடிச் சற்று நேரத்திற்கெல்லாம் பலா மரத்தில் துயில் கொண்டிருந்த காகங்கள் கரைந்து சிறகடித்துப் பறக்கத் தொடங்கின.

இந்தச் சலசலப்பில் கண் விழித்த நாகப்பர், 'பொழுது புலர்ந்துவிட்டதே என எண்ணியவாறு எழுந்து பாயைச் சுருட்டி மூலையில் வைத்துவிட்டு நிமிர்ந்த போது உச்சில் அம்மன் கோயில் மணியோசை கணீரென்று காற்றில் மிதந்துவந்தது. 'அம்மாளே' என்று வாய்விட்டுக் கூறியபடி கீழ்த்திசை நோக்கித் துதித்தார் நாகப்பர்.

கைகளை உயர்த்தி உரத்துக் கொட்டாவி விட்டுவிட்டு இடுப்பில் செருகி வைத்திருந்த புகையிலையை எடுத்து சுருட்டிப் பற்றவைத்துக் கொண்டார். பின்னர் மனைவியைப் பார்த்தார்.

கடைக்குட்டி புவனத்தை அணைத்தப்படியே பனிக் குளிரில் முடங்கிக் கிடந்தாள் பொன்னாத்தை.

'எணை எழும்பணை.. விடிஞ்சு போச்செல்லே? இண்டைக்குப் போடியாரின்ர வயலிலை அருவிவெட்டெல்லே. மகேசனையும் எழுப்பு' நாகப்பர் மனைவியின் உடலில் மெதுவாகத் தட்டினார்.

''அதுக்கிடையிலை விடிஞ்சு போச்சே?'' தேகத்தைப் போர்த்தியிருந்த கந்தலை விலக்கியபடி எழுந்த அவளது குரலில் ஆச்சரியம் தெரிந்தது.

எழுந்து குப்பி விளக்கைப் பற்ற வைத்துக் கொண்டு அடுப்படிக்குச் சென்றாள் பொன்னாத்தை. உயிரைப் பிடித்துக் கொண்டு எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கின் மங்கலான ஒளியில், அடுப்பிலிருந்த சாம்பலைத் தோண்டி அள்ளி வெளியே கொண்டு போய்க் கொட்டினாள்.

''விடிஞ்சு எவ்வளவு நேரமாச்சு.. எழும்புங்கோடி'' என்று தனது பெண்களைத் தட்டி எழுப்பினாள். மூத்தவள் மீனாட்சி சோம்பலை முறித்துக்கொண்டு எழுந்து, ஆழ்ந்து உறங்கும் தங்கை இலட்சுமியைத் தட்டி எழுப்பினாள்.

அடுத்தடுத்துப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் இரண்டு குமர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஆழ்ந்த பெருமூச்செறிவாள். மீனாட்சியின்ர வயதிலை நான் இரண்டைப் பெத்துப் போட்டன். அந்த நாளையில சீதனம், வீடுவாசல் எண்டெல்லாம் கேட்கிறதில்லை. ம்.... இப்ப தான் இந்த அநியாயம் எல்லாம்...? எனப் பெருமூச்சு விட்டாள் பொன்னாத்தை.

குத்தகைக் காணியில் குடியிருந்து கொண்டு, அடுத்த நேரச் சாப்பாட்டிற்கே வழி தெரியாமல் திண்டாடும் அவர்களிடம் சீதனத்திற்கு ஏது பணம்?

ம்... முற்பிறப்பிலை செய்த கர்மம்... என்ர வயித்தில வந்து பிறந்திருக்குதுகள். மூத்தவள் பெரிசாகி ஐந்து வருடமாகிட்டுது... இந்த மனிசன் .பொறுப்பில்லாமல் குடிச்சுக் கொண்டு திரியுது. பொடியன் கூட்டம், கமிட்டி எண்டு திரியுறான். சலித்தபடியே உமிக் கரியை வாயில் போட்டுப் பல் துலக்கத் தொடங்கினாள் பொன்னாத்தை.

ஓலைத்தட்டியால் மூடி மறைக்கப் பட்டிருந்த அந்தக் குடிசையின் வாசலைத் திறந்து கொண்டு வெளியே வந்தார் நாகப்பர்.

இரட்டை மாட்டு வண்டிலில் கிடுகு ஏற்றிக் கொண்டு ஒழுங்கையில் வந்து கொண்டிருந்த சாமித்தம்பி இவரைக் கண்டதும், மூக்கணாங் கயிற்றை இழுத்து வண்டியை நிறுத்தினார். ''என்ன நாகப்பு... இண்டைக்குப் போடியாரின்ர வயலுக்கு அருவி வெட்டுக்குப் போறதோ?'' என்று கேட்டார்.

நாகப்பர் சுருட்டுப் புகையை உறிஞ்சி வெளியே விட்டுவிட்டு, ''என்னவோ பொடி யங்கள் எல்லாம் ஒருத்தரும் போகக் கூடாது எண்டு நிக்கிறாங்கள். கேட்ட நாட் கூலிக்குப் போடியார் சம்மதிச்சாத்தான் போறதாம்..'' என்ற நாகப்பரை இடைமறித்தார் சாமித் தம்பி.

''பொடியளின்ர விழல் கதையளை விடுங்கோ.. போடியாரைப் பகைச்சுப் போட்டு ஒன்றும் செய்யேலாது. அடுத்த ஊர்க் காரரைக் கொண்டு வந்தால் எங்கட பாடெல்லே தொப்பி...''

''நானும் சொல்லிப் பார்த்திட்டன் பொடியள் பிடிவாதமாக நிக்கிறாங்கள். என்ன செய்யுறதெண்டு தெரியேல்லை...'' நாகப்பர் தயங்கியபடி பதிலளித்தார்.

''உங்கட மகன் தான் பிடிவாதம் பிடிக்கிறான். இன்னும் கொஞ்சம் சொல்லிப் பாருங்கோ... அவசரப்பட்டுப் போடியாரைப் பகைச்சுப் போட்டு பிறகு ஊரிலை இருக்கேலுமே? அவரின்ர காணியில தானே குடியிருக்கிறம். இக்கணம் குடியெழும்பச் சொல்லிப் போட்டால்.. கரைச்சல், ஏன் வீண் வில்லங்கத்தை?'' சாமித்தம்பி சொல்லிக் கொண்டு வண்டிலைக் கிளப்பினார்.

என்ன செய்வது என்று யோசித்தப்படியே காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார் நாகப்பர். சுடச்சுட பொன்னாத்தை கொடுத்த தேநீரைப் பருகிய நாகப்பர் மூக்குப் பேணியைக் கொடுக்கும் போது, ''உவன் மகேசன் இன்னும் எழும்பேல்லையே?... அருவி வெட்டுக்குப் போறதில்லையாமே?'' என்று கேட்டார்.

''இஞ்சாருங்கோ... அவர்கள் கேட்ட கூலிக்குப் போடியார் சம்மதிக்காட்டில் போகமாட்டம் எண்டு ஒற்றைக்காலில் நிற்கிறாங்கள்... போடியாரையும் பகைச்சுப் போட்டு பிறகு கஸ்ரப்பட வேணும்.... விடலைப் பருவம் சொன்னால் விளங்குதில்லை. சீறிப்பாயுறான்... நீங்கள் தான் எடுத்துச் சொல்லுங்கோ.'' மகன் எழுந்து வெளியே போய் விட்டான் என்பதையறிந்த பொன்னாத்தை கணவனிடம் கூறினாள்.

அம்மாவும் அப்பாவும் கதைப்பதைக் கேட்டுக்கொண்டு வந்த மகேசனுக்குச் சிரிப்பு வந்தது. தாய் சொன்னதைக் கேட்டு மனதில் சிரித்துக் கொண்டான்.

காலம் காலமாகப் போடியாருக்கு அடிமைக் குடியாக இருந்து வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் அவர்கள் பயப்படுவது இயல்புதான். உழைப்பவனுக்கே நிலம் என்ற பொதுவுடமைச் சித்தாந்தத்தை, கார்த்திகேச மாஸ்ரர் கூறியது, இன்னும் அவன் மனதில் ஆழப் பதிந்திருக்கிறது. ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் நிலவுடமை ஒரு சிலரின் கைகளில் இருப் பதால் தான் தொழிலாளர்களும் உழைக்கும் விவசாயிகளும் தமது வயிற்றுப் பாட்டிற்குப் பிறரை எதிர்பார்த்திருக்க வேண்டியுள்ளது.

இந்த நிலைமை மாற தொழிலாளர்களும் விவசாயிகளும் ஓரணியில் சேர்ந்து போராட வேண்டும் என்பதை மகேசனும் உணர்ந் திருக்கிறான். ''நாம் உழைக்காவிட் டால் முதலாளிகளால் உயரமுடியாது. எனவே எமது உழைப்புக்கு நியாயமான கூலி கேட்பது நியாயம் தானே?'' என்று கூறினான் மகேசன்.

''அப்ப நீ அருவி வெட்டுக்குப் போகயில்லையே... கொப்பர் சத்தம் போடப் போறார்...'' என்று மீண்டும் அவனிடம் அம்மா கூறினாள்.

அவன் தாயார் மீது சீறிப் பாய் ந்தான் ''இண்டைக்குப் போடியார்ர வயலுக்கு வேலை க்குப் போறதில்லை... ஒருத்தரும் போறதி ல்லை என்று தானே முடிவு செய்தது... பிறகேன் உவர் நிண்டு கொக்கரிக்கிறார்.... உவரையும் போக வேண்டாம் என்று சொல்லு...''

''இல்லை மகன்.. நாங்கள் அருவி வெட்டுக்குப் போகாட்டில் நாளைக்குப் போடியார்ர பகையைச் சம்பாதிக்க வேணும். பிறகு இதிலை குடியிருக்கவும் ஏலாது. ஏதோ அந்தப் பெரிய வரின்ர புண்ணியத்தில தானே ஒங்கட வாழ்க்கை ஓடுது...'' அம்மா அன்பாக எடுத்துரைத் தாள்.

''உங்கட அடிமைப் புத்தி எண்டைக்குப் போகுதோ, அண்டைக்குத் தான் எங்களுக்கு விடிவு...'' நாங்கள் கேட் கிறது. எங்கட உரிமை, பிச்சையில்லை. செய்யுற தொழிலுக்கு ஏற்ற கூலி. இவ்வளவுலாபம் எடுக்கிற போடியார் ஊர் உலகத்தில நடக்கிற சம்பளத்தைத் தராமல் ஏய்க்கிறார்... இண்டைக்குத் தொழிலாளருக்கு எவ்வளவு மவுசு தெரியுமோணை?''

''...................''

''மற்ற ஊருகளிலை இவர் தாற சம்பளத்தைப் போல இரண்டு மடங்கு கிடைக்குது... இண்டைக்கு சவூதிக்குப் போனாலும் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்க முடியும்... என்ர சிநேகிதர் ரசீக், கமால்,டீன் எல்லாம் சவூதியிலையிருந்து ஆயிரக் கணக்கில அனுப்புறாங்கள்.''

தாயிடம் மகேசன் வாதிட்டுக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த நாகப்பருக்கு மகனின் கூற்றிலிருந்த நியாயம் புரிந்தது. எனினும் போடியாரைப் பகைக்கவும் பயமாக இருந்தது.

இதற்கிடையில் தொழிலாளர்கள் யாரும் வேலைக்குப் போகாதமையினால் சீற்றம் கொண்ட போடியார் நாகப்பரைத் தேடி வந்துவிட்டார்.

''என்ன நாகன்... வேலைக்கு ஒருத்தரும் வரயில்லை... கெதியிலை வரச் சொல்லு....''

''இல்லை ஐயா... வரமாட்டார்கள்... நாட் சம்பளம் அயலூர்காரங்கள் மாதிரித் தந்தால் தான் வருவாங்களாம்...'' நாகப்பர் உறுதியாகக் கூறினார்.

''நன்றி கெட்ட நாயள்.... என்ர சோத்திலை வளர்ந்த எளியதுகள், எனக்கு வால் காட்டுதுகள்...வராட்டிக் கிடவுங்கோடா.... நான் அயலூர் காரர்களைக் கூட்டி வந்து வெட்டிச் சூடு வைக்கிறன்...'' என்று கறுவிக் கொண்டு புறப்பட்டார் போடியார்.

''போடியார் நாக்கை அடக்கிப் பேசுங்கோ....''' என்று அட்டகாசமாக ஆரம்பித்த மகேசனை நாகப்பர் அடக்கினார்... ''நீ போ உள்ள....''

மறுநாள்.....

போடியாரின் வயலில் அருவி வெட்ட அயலூர்க் காரர்கள் வந்திருந்தார்கள். நாட் கூலி அதுவும் கூடுதல் கூலி கொடுத்து வீம்புக்காக அழைத்து வந்திருந்தார் போடியார்.

மகேசனும் சக தொழிலாளர்களும் வயல்வெளிக்கு வந்த போது வேலை ஆரம்பிக்கும் தறுவாயில் இருந்தார்கள். நிசாம், றகூப், ஆப்டீன், அகமத் என அவர்களுக்கு அறிமுகமான அயலூர்க் காரர்களைக் கண்டதும் மகேசன் அவர்களிடம் வந்து அனைத்தையும் விளக்கமாகக் கூறினான்.

''நிசாம்... நான் சொல்லுறதைக் கேள்.. நாங்கள் ஒரு நியாயமான கோரிக்கையை வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறம். நீங்கள் இதிலை எங்களுக்கு எதிராக வரக் கூடாது. நாங்களும் தொழிலாளர் நீங்களும் தொழிலாளர் ஒரே வர்க்கம்... முதலாளி வர்க்கம் எங்களை நசுக்கப்பார்க்கிறது... அண்ணன் தம்பிகளாக அடுத்தடுத்த ஊரில அன்போட வாழ்ந்து கொண்டிருக்கிற நாங்கள் முதலாளி வர்க்கத்தினுடைய கதிக்குப் பலியாகிவிடக் கூடாது''

மகேசனின் கூற்றிலுள்ள நியாயத்தைப் புரிந்து கொண்ட நிசாமும் நண்பர்களும் போடியாரை நோக்கினார்கள்.

''நாங்கள் போயிட்டு வாறம்...'' அவர்கள் போவதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் போடியார்.



## தமிழ் அலையின் இவ்வார சிறுகதை

ச.முருகானந்தன்

# மட்டக்களப்புச் சஞ்சிகைகள் ஒரு கண்ணோட்டம்

**1. அறிமுகம்:-**

மட்டக்களப்பில் அவ்வப்போது சில சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன. - மலர்களைப் போல! மலர்கள் மலர்ந்து மணம் வீசி வாடி விடுகின்றன. அவ்வாறே இலக்கிய சஞ்சிகைகளும் சிறிது காலம் நிலைத்து நின்று பின் மறைந்து விடுகின்றன. இந்த நியதி மட்டக்களப்பு சஞ்சிகைகளுக்கு மட்டுமல்லாது ஏனைய பிரதேசங்களுக்கும் உரியதாகின்றது.

தமிழகத்தில் தீபம் (நா.பா) ஞானரதம் (ஜெயகாந்தன்) கங்கை (பகீரதன்) சுபமங்களா (கோமல் சுவாமிநாதன்) தென்றல் (கண்ணதாசன்) இன்னும் பல இவ்வாறு தோன்றி மறைந்துள்ளன.

ஈழத்தில் மரகதம் (இளங்கீரன்) அஞ்சலி (செல்வராசா) தமிழமுது, கற்பகம், அமுதம் முதலிய நூற்றுக்குமேற்பட்ட சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன.

எனவே சஞ்சிகைகளின் மறைவைப் பற்றி ஏளனமாக நோக்காது அவை வெளிவந்த காலத்தில் எவ்வாறு மணம் பரப்பின என்பதை நோக்குவதே விவேகமானது.

அவ்வாறு மட்டக்களப்பில் தோன்றி மணம் பரப்பிய பரப்புகின்ற சில சஞ்சிகைகள் பற்றிப் பார்ப்போம். இரண்டொரு இதழ்களுடன் நின்றுவிட்ட சஞ்சிகைகளும் பாடசாலைச் சஞ்சிகைகளும் இவற்றுள் சேர்க்கப்பட வில்லை.

**2. முன்னோடி இதழ்கள்:-**

மட்டக்களப்பில் இலக்கிய இதழ்களாக கிழக்குத் தபால், உதயம், தலைவன், தீபம், பாரதி, மலர், சாளரம், தாரகை, தொண்டன், சுமைதாங்கி, வயல், படி, பூவரசு, வெட்டாப்பு, விடிவானம், அரங்கம், பாடுமீன், சுவைத்திரன் முதலிய வார, மாத இதழ்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் சில அற்பாயுளில் மடிந்தன. ஒரு சில இதழ்கள் மட்டும் ஒரு வருடத்திற்கு மேல் நீடித்தன. எவ்வாறாயினும் அவை இலக்கிய உலகில் ஆழத்தடம் பதித்தன என்பதை மறுக்க முடியாது.

மட்டக்களப்பில் முன்னோடிப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்ற வகையில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

விபரங்கள் :-

1. கிழக்குத் தபால், புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை - 1940
2. உதயம் எஸ்.டி. சிவநாயகம் 1942
3. தீபம் - வேதநாயகம் பாதிரியார்?
4. பாரதி (மாத இதழ்) - என். செபரெத்தினம் - 1950
5. பாடுமீன் (மாத இதழ்) - கவிஞர் நீலாவணன் - 1960
6. மலர் (மாதஇதழ்) - அன்புமணி 1970
7. தொண்டன் - இராஜேந்திரம் 1969

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டம், கல்முனை, அக்கரைப்பற்று, அம்பாறைப் பிரதேசங்களையும் உள்ளடக்கியிருந்தன. அந்த வகையில் பின்வரும் இதழ்களையும் இவற்றுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

8. கவிஞன் (கவிதை இதழ்) எம்.ஏ. நு.்.மான்-கல்முனை
9. பாவை அ.ஸ.அப்துஸ்ஸமது-அக்கரைப்பற்று
10. காலரதம் - உமாவரதராஜன் - கல்முனை
11. முனைப்பு - மருதூர்பாரி - கல்முனை
12. சமாதானம் - மருதூர்வாணன் - கல்முனை

**சில சஞ்சிகைகளின் விபரங்களைப் பார்ப்போம்.**

3. பாரதி:-

தேசிய மாத வெளியீடு, அளவு கிறவுண் 1/4 பக்கங்கள்:12. (சிறப்பிதழ் 26 பக்கங்கள்) விலை சதம் 30/= ஆசிரியர் என். செபரெத்தினம், வெளியீட்டாளர்: ம.நாகலிங்கம், அச்சகம் சுதந்திரன் அச்சகம், கொழும்பு (சில இதழ்கள் வேறு அச்சகத்திலும் வெளியிடப்பட்டுள்ளன) முகவரி-பாரதி காரியாலயம், மண்டூர், ஆரம்பம் - 1947

இச்சஞ்சிகையின் 8,9,10ம் இதழ்கள் பார்வைக்குக் கிடைத்தன. 8வது இதழ் பாரதி நினைவு மலராக அதிக பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. (ஏப்ரல் 1950)

அழகான வடிவமைப்புடன் கிறவுண் 1/4 அளவில் மண்டூர் என்னும் ஒரு சிறு கிராமத்தில் இருந்து 1940 களில் இத்தகைய ஒரு சஞ்சிகை வெளிவந்தது பாராட்டுக்குரியது. கலாநிதி சு.வித்தியானந்தன் நாவற்குழியூர் நடராசன், அருள். செல்வநாயகம் பண்டிதர் வி.சீ. கந்தையா, கே.கோணேசபிள்ளை முதலியோருடைய ஆக்கங்கள் இச்சஞ்சிகையில் வெளிவந்துள்ளன.

ஆசிரியத்தலையங்கம், உபதலையங்கங்கள் என்பன தமிழகப் பத்திரிகைகளின் போக்கில் திறப்பட எழுதப்பட்டுள்ளன. காத்திரமான அரசியல் விமர்சனக் கட்டுரைகள் இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

அந்தக் காலத்திலேயே சிறுகதைப் போட்டி ஒன்றை நடாத்தி போட்டிக்கு வந்த கதைகளையும் இச்சஞ்சிகை பிரசுரித்துள்ளது. பல கவிதைகளும் சிறு சிறு துணுக்குகளும் கூட இதில் பிரசுரமாகியுள்ளன.

தமிழக சஞ்சிகைகளுடன் போட்டி போடும் அளவுக்கு இச்சஞ்சிகையை வெளியிட்ட இளைஞர்களை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.



**4. மலர்:-**

இலக்கிய மாசிகை. அளவு கிறவுண் 1/4 பக்கம் 48 (பின்னர் 1/8 பக்கம் 64) விலை சதம் 50/= ஆசிரியர் - இரா. நாகலிங்கம் (அன்புமணி) வெளியீடு மலர்: இலக்கியக்குழு, 21 மத்திய வீதி மட்டக்களப்பு. அச்சகம் கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு. ஆரம்பம் ஜனவரி 1970.

பாரதி வெளிவந்த 20 வருடங்களுக்குப் பின் அழகிய வடிவமைப்பில் மட்டக்களப்பிலேயே அச்சாகி வெளிவந்த ''மலர்'' இருவர்ண ஆர்ட்பேப்பர் அட்டையுடன் உள்ளே கதைகளுக்கான படங்களுடன், அரசியல் கலப்பின்றி, அமைந்து ஈழத்து இலக்கிய உலகில் தனியான ஒருஇடத்தைப் பிடித்தது.

பிரதேச வேறுபாடு இன்றி, எழுத்தாளர் பலரது ஆக்கங்கள் இச்சஞ்சிகையில் வெளிவந்தன. பிரபல எழுத்தாளர்களுடன், இளம் எழுத்தாளர்களுக்கும் இச்சஞ்சிகை இடம் அளித்தது. பிற்காலத்தில் பிரபலம் பெற்ற எழுத்தாளர்களான, அருள்.சுப்பிரமணியம், கவிதா, வேதாந்தி, மு.ஹ.சேகு இஸ்ஸதீன்-தற்போது பாராளுமன்ற உறுப்பினர், அன்று மலரில் அறிமுகமாகினார்.

அரசியல் கலப்பில்லாமலும், கோஷ்டி வட்டத்துக்குள் சிக்காமலும், நடுநிலை நின்று சத்தியமான இலக்கியத் தேடலுடன் வெளி வந்ததால் ''மலர்'' ஈழத்து சஞ்சிகை உலகில் பலரும் குறிப்பிட்டுப் பேசும் அளவு சிறப்பான இடத்தைப் பிடித்தது. ஈழத்து ரத்தினங்கள், என்னைக் கவர்ந்த பாத்திரம், ஓர் அனுபவம், ரீங்காரம், வீசும் தென்றல், மாதாந்த விமர்சனம் முதலிய வாசகருக்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றன.

ஜனவரி 1970 முதல் டிசம்பர் 1971 வரை 10 இதழ்கள் வெளிவந்தன. முதல் இதழுக்கு மட்டக்களப்பிலும் . இரண்டாம் இதழுக்கு யாழ்ப்பாணத்திலும் வெளியீட்டு விழா இடம் பெற்றன.

**5. தாரகை:-**

கலை இலக்கிய மாத இதழ். அளவு கிறவுண் 1/4 பக்கங்கள் 24 விலை ரூபா 25/= ஆசிரியர் கண. மகேஸ்வரன் வெளியீடு தாரகை கலை இலக்கிய வட்டம், 12/4 பாத்திமாகிரி லேன் மட்டக்களப்பு அச்சகம், கத்தோலிக்க அச்சகம் ஆரம்பம் ஆகஸ்ட் 1981.

''மலர்'' சஞ்சிகை வெளிவந்து 10 வருடங்களுக்குப் பின் இச் சஞ்சிகை வெளிவந்தது. அப்போது மட்டக்களப்பு தொழில் திணைக்களத்தில் கடமையாற்றிய சங்கரப்பிள்ளை, கண. மகேஸ்வரன், ஆகியோர் ஆரம்பித்த இச்சஞ்சிகை 2வது இதழிலிருந்து கண. மகேஸ்வரனின் முழுப் பொறுப்பில் வெளிவந்தது. 1981 ஆகஸ்ட் முதல் 1984 செப்டம்பர் வரை மொத்தம் 12 இதழ்கள் வெளிவந்தன.

ஆரம்பத்தில் மாத இதழாக இருந்த ''தாரகை'' காலப் போக்கில் ஏனைய சஞ்சிகைகளைப் போலவே இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒன்றாக வெளிவந்தது. பாரதி சிறப்பிதழ், கவிதைச் சிறப்பிதழ், முதலிய சிறப்பிதழ்கள் அதிக பக்கங்களுடன் காத்திரமான ஆக்கங்களுடன் வெளி வந்தன. சிறுகதைப் போட்டி ஒன்றும் நடாத்தப்பட்டது. பிற்கால இதழ்களில் க.கைலாசபதி,எஸ்பொ.டானியல் முதலிய பிரபல எழுத்தாளர்களின் படங்கள் 'தாரகை' யின் அட்டையில் இடம் பெற்றன.

இச்சஞ்சிகையும் மலர் போலவே கோஷ்டி வட்டத்துக்குள் சிக்காது நடுநிலை வகுத்து பிரதேச வேறுபாடு இன்றிப் பல முதிய, இளம் எழுத்தாளர்களுக்கும் இடம் அளித்தது. பலரது பாராட்டுக்களையும் பெற்றது.

**6. சுமைதாங்கி:-**

கிறிஸ்தவ இலக்கிய மாத இதழ். அளவு கிறவுண் 1/4 பக்கம் :- 24 விலை 3/50 சதம் ஆசிரியர் பாக்கிய நாயகம். வெளியீடு: குறிப்பிடவில்லை முகவரி: 82 திருமலை வீதி, மட்டக்களப்பு. அச்சகம்-கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு. ஆரம்பம் 1983. ஏப்ரல்

பிரபல எழுத்தாளரும் கிறிஸ்தவ அன்பருமான ரீ.பாக்கியநாயகத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த சுமைதாங்கி 1983 ஏப்ரல் முதல் 1985 மே வரை மொத்தம் 18 இதழ்கள் வெளிவந்தன. எழுத்துத்துறையிலும் பத்திரிகைத் துறையிலும் நல்ல அனுபவம் பெற்றிருந்த ரீ.பாக்கியநாயகம் இவ்விதழைச் சிறந்த முறையில் வெளியிட்டார். கிறிஸ்தவ சஞ்சிகையாக இருந்தாலும் இலக்கிய விடயங்களும் கணிசமாக இதில் இடம் பெற்றன. தனிமனிதனாக, மனைவி மக்கள் உதவியுடன் மாதந்தோறும் ஈ.பா. இச்சஞ்சிகையை விநியோகித்தார்.

வாசகர்கள் கலந்து கொள்ளும் பகுதிகளாக ''வெண்பாப்போட்டி'', வானவில், வேதஅறிவுப்போட்டி, சிறு கட்டுரைப் போட்டி, முதலியனவும் இச்சஞ்சிகையில் இடம் பெற்றன.

மட்டக்களப்பில் வெளிவந்த மலர், தாரகை, சுமைதாங்கி, ஆகிய மூன்ற இதழ்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. இவற்றின் ஆசிரியர்கள் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். அதனால் 'மலரி'ல் பயன்படுத்தப்பட்ட சில ''புளொக்குகள்'' மற்ற இரு சஞ்சிகைகளிலும் வெளிவந்தன.

இச்சஞ்சிகைகள் சிறப்பாக வடிவமைப்பதில் கத்தோலிக்க அச்சக அச்சுக்கோப்பாளர் எஸ். சிங்கராசா சிறந்த பங்களிப்புச் செய்தார்.

**7. சுவைத்திரன்:-**

சஞ்சிகைகளின் மறைவைப் பற்றி ஏளனமாக நோக்காது அவை வெளிவந்த காலத்தில் எவ்வாறு மணம் பரப்பின என்பதை நோக்குவதே விவேகமானது.

நகைச்சுவை மாத இதழ். அளவுடிமை 1/4 பக்கம்:- 24 ஆரம்பம் ஓகஸ்ட் 1993 ஆசிரியர்: திக்கவயல் தர்ம குலசிங்கம் விலை ரூபா 10/= முகவரி திருமலை வீதி மட்டக்களப்பு அச்சகம்: புனித செபஸ்தியார் அச்சகம் மட்டக்களப்பு.

முன்னர் கொழும்பிலிருந்தும், இனக்கலவரத்துக்குப் பின் யாழ்ப்பாணத்திலிருந்தும் வெளிவந்த சிரித்திரன் பாணியில் அதன் ஆசிரியர் சிவஞானசுந்தரத்தின் பரமரசிகரான திக்கவயல் தர்மகுலசிங்கம் இச்சஞ்சிகையை ஆரம்பித்தார். 'சிரித்திரன்' ஆசிரியரை மகிமைப்படுத்தும் வகையிலும் 'சிரித்திரனை' மட்டக்களப்பில் வேரூன்றச் செய்யும் வகையிலும் இச்சஞ்சிகை அமைந்தது.

இதன் முதல் இதழான ஆகஸ்ட் செப்டம்பர் 93 இதழுக்கு அன்புமணி குழுவினர் ஆனைப்பந்தி இ.கி.மி மகளிர் கல்லூரியில் வெளியீட்டு விழா நடத்தினர்.

1993முதல் 2000வரை 18 இதழ்கள் வெளிவந்தன. அதன்பின் நாடிதளர்ந்தது. ஒரு தனிமனிதனாக திக்கவயல் தர்மகுலசிங்கம் இச்சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடுவதில் பகீரத முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவர் மட் கச்சேரியில் விலைத்தட்டுப்பாட்டு

**- அன்புமணி -**

அதிகாரியாக கடமையாற்றினார். 'சரித்திரன்' பாணியிலேயே 'சுவைத்திரன்' சஞ்சிகையை வெளியிடுவதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். சித்திரனில் வெளிவந்த சில படங்களும், கட்டுரைகளின் நறுக்குகளும் 'சுவைத்திரன்' சஞ்சிகையில் வெளிவந்தன. இச்சஞ்சிகையின் பதிப்பாசிரியர் செ.குணரெத்தினம் என்றும் ஓவியர் ஸ்ரீகோவிந்தர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**8. தொண்டன்:-**

கிறிஸ்தவ இலக்கிய மாத இதழ். ஆரம்பம்:1969 அளவு கிறவுண்1/4 பக்கம் 24 விலை ரூபா 12/= ஆசிரியர் J.A.G ரட்ணகுமார் (தற்போது) இணை ஆசிரியர்: மலர்வேந்தன் வெளியீடு: சமூகத் தொடர்பு நிலையம் முகவரி: அஞ்சல் பெட்டி- 4 மட்டக்களப்பு. அச்சகம்: ஜோசப் கத்தோலிக்க அச்சகம்.

சஞ்சிகை தொடரும்.........

பண்டைக்கால தமிழர் வாழ்வியலில் ''ஏர்க்கலையினையும் விட மேலான கலையாகப் பேணப்பட்டு போற்றப்பட்டு வந்த கலையாக விளங்குவது போர்க்கலையாகும்''. மாற்றார் வியக்கும் வண்ணம் புகழ் சேர்த்த இப்போர்க்கலை எனும் விருட்சத்திற்கு

விட மிகுதியாக விளங்குவதினைக் காணலாம். இதில் அன்றைய அன்னையர் சிறந்த வீரமிக்க மறவர்களினை எப்படி உருவாக்கினார்கள் என்பதினைச் சங்க காலத்து நல்லிசைப் புலமை

கோள்வாண் மறவர் தலை துமிப்ப
என் மகன்
வாள்வாய் முயங்கப்
பெறின்''

அதாவது

''போர்க்களம் செல்க---'' என்று கூறுவதினைக் கொண்டு அக்காலத்து தாய்மார்களின் மனத்திடத்தினை என்ன என்னவென்பது!

அடுத்து வீரமக்களைப் பெறுவதில் பெருமை எய்திய சங்கத்துத் தாய்மார்கள் தன் மகன் போருக்குப போய்ச் சிறிது மனத் தாழ்வான செயலைச் செய்தான் எனத் தெரியவரும் போது அவ்வீர அன்னையர் எவ்வாறு சினம் கொள்வார் என்பதினை ''வாதுவல் வயிறே-----'' எனத் தொடங்கும் பாடலில் இத் தன்மையினை உணர்ந்து கொள்ளலாம். அதாவது பகையரசர்கள் போரில் வென்று தானும் இறந்து போகாமல் யானை மீது வேலினைப் பாய்ச்சி அவ் வேலினை நீ மீளாமல் திரும்பு வீரானால் எமது முன்னோர் செய்யாத பெரும் பழியை விளைவித்தவனாகி விடுவாய். உன்னைப் பெற்ற வயிற்றினை அறுத்து எறிவேன் எனக் கூறும் பாங்கினூடு அப் போர்க்களத்தே சிறிது மானம் போக வந்தாலும் அக்கால தாயார் எத்தகையதோர் உணர்வினைப் பெறுவார்கள் என்பதினைக் காணக் கூடியனவாய் உள்ளது.

# சங்ககாலத்து வீர அன்னையரும் நாட்டுப்புற வாழ்வியலும்



வித்துகளாய் விளங்கியவர்கள் அன்றைய வீர அன்னையரே. வீரத்திற்கும் காதலுக்கும் களை கட்டித் திகழ்ந்த சங்க காலத்திலேயே காதலினையும் விட மானம் பெரிது எனும் ஆன்றோர் வாக்குக்குக் களம் கொடுத்து வீரம் எனும் அரும் சொல்லுக்கு அர்த்தம் கற்பித்தவர்களும் இச் சங்கம் வளர்த்து விட்ட வீரஅன்னையர்களையே சாரும். இச் சங்ககாலத்தின் முதுகெலும்புகள் என்று கூறத்தக்க இவ் அன்னையர் குழாத்தினர் மட்டும் அங்கு இல்லாமல் போயிருக்குமானால் அன்று வீரம் எனும் சொல்லுக்கு நாம் இன்று அர்த்தம் காணாதவர்களாய் வாழ்ந்திருப்போம். ''தொடர்ந்து அந்த வாழ்வியல் தொடர் அலையின்



சிறந்த சிற்பிகள் போன்ற வீரவேங்கைகளினை சிருஷ்டித்த பெருமையோடும் புகழோடும் ஆண்டாண்டு காலம் போற்றத்தக்கவர்கள் அன்றைய வீரத் தாய்மார்களே'' அவர்களது வீரம் நிறைந்த விழுமியங்களை அக்காலத்து தோன்றிய நூல்களான எட்டுத் தொகை பத்துப் பாட்டினூடும் காணக்கூடியதாய் உள்ளது.

தமிழ் மொழியிலுள்ள பழைய நூலாகிய ''புறநானூறு'' எனும் நூலில் அன்றையச் சங்ககால வீரச் சுவையே ஏனைய சுவைகளினையும்

வாய்ந்த பெண் புலவரான ''பொன்முடியார்'' எனும் புலவரானவர் தாய், தந்தை, அரசன், மகன் முதலியவர்க்குரிய கடமை என்ன என்பதினை பின்வரும் பாடலினூடு வெளிக் கொணர்வதினைக் காணலாம்.

''ஈன்று புறந்தருதல் என்றலைக்
கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக்
கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிருவாள் அருந்சம முலுக்கிக்
களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக்
கடனே''

இப்பாடலினூடு அக்காலத்து வீர அன்னையரின் மனவெழுச்சிக் கோலங்களின் தன்மையினை இவ் வீர வரிகள் வெளிக்காட்டி நிற்பதினைக் கண்டு கொள்ளலாம்.

மற்றுமோர் பாடலில் ''தகடூர் யாத்திரை'' என்பவரால் ''தர்மம் என்பதன் பொருள் வீர மரணமே'' என்று கூறுமளவிற்குத் தம் பாடல் வரிகளினைத் தர்மத்திற்கு அர்த்தம் கற்பிக்க நகர்த்திச் செல்லும் பாங்கினைக் காணக்கூடியதாய் உள்ளது.''தருமமும் ஈதேயாந்
தானமும் ஈதாம்
கருமமும் காணுங்கால் ஈதாம் -
செருமுனையிற்

இப்பாட்டின் கருத்தானது ''தன்மகன் யுத்தகளத்தே சாகப் பெற்றால்
அதுவே தர்மமும் தானமும்
கர்மமுமாகும்'' என ஓர்பெண் கூறி நிற்பதினூடு எவ்வளவு உயர்வும் பெருமையும் கொண்ட வீர சிந்தை என்பதினை உணர்ந்து கொள்ள முடிகிறது.

வீரத்திற்குப் புகழ் சேர்க்கும் புறநானூறு நூலிலே வீரத்தாயைப் பற்றிக் கூறுவது பெண்புலவரான ''பூங்கணுந்திரை'' எனும் புலவர் ''கொக்கின் இறகுபோல் நரைத்த கூந்தலையுடைய முதியவளான பெண் ஒருத்தி தனது மகன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் மடிந்தான் என்னும் செய்தி கேட்டு அவனைப் பெற்றபோது தானடைந்த மகிழ்ச்சியிலும் பார்க்க அதிக மகிழ்ச்சி அடைந்தாள்'' என்பதின் மூலம் அக்கால வீர அன்னையர்கள் வீரம் மிக்கவர்கள் என்பதினையும் எதையும் தாங்கும் மனதிடம் கொண்டவர்கள் என்பதனையும் அறியலாம். ஒரு புதல்வரைப் பெற்று நாளைவரும் மக்கள் இவன் ஒரு தறுதலை நாட்டிற்கு என்னசெய்தான் எனும் எளிய வார்த்தைக்குத் தன் மகன் அர்த்தம் கற்பிக்கக் கூடாது என்பதற்காகவே அவ் வீர அன்னையர் தம் பிள்ளைகளை வீரர்களாக்க முற்பட்டார்கள்.

இன்னும் ஓர் பாடலில் ஒரு வீரப் பெண் ஒருத்தி தன் ஒரு மகனையே போருக்கு விடுகின்ற காட்சியினைப் பற்றி ''ஒக்கூர் மாசாத்தியார்'' என்பவரால்
''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதிற் பெண்டி ராதல் தகுமே -----''
என்று தொடங்கும் பாடலில் ஒரு தாயானவள் முன்பு அவள் தமையன் யுத்த களத்திலே யானையைக் கொன்று இறந்து போனான். பின் சமீபத்தில் நடந்த போரில் தன் அன்பு மிகு கணவன் எதிரிகளைக் கொன்று தானும் மடிந்து போயினான். பின் இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் தற்போது எதிரியின் யுத்தப்பறை ஒலிப்பதைக் கேட்டு மகிழ்ச்சி கொண்டு தன் இளைய ஒரே மகனையும் கட்டித்தழுவி ஆடைஅணிந்து அவன் குடுமியில் எண்ணெயிட்டுச் சீவிமுடித்து சிறிதும் மனங்கலங்காமல்

இதேபோல் ஒரு கெட்ட வழியின் மூலம் தன் மக்களுக்கு வருகின்ற இழிவை அக்கால வீரஅன்னையர் அனுமதிக்கவில்லை. அப்படிப்பட்ட தம் மக்கள் இருப்பதிலும் விட இறந்து விட்டார்கள் என்று கூறுமளவிற்குத் தமது மனோநிலையினை வளர்த்திருந்தனர்.

ஆகவே அன்றையச் சங்கத்தின் புகழ் வானளாவ வாழ்த்தி உலகளாவ வியந்து நிற்பதற்குக் காரண கர்த்தாக்களாகவும், சிருஷ்டி கர்த்தாக்களாகவும் அமையப் பெற்றவர்கள் அன்றைய வீர

**~ இ.வரதராஜன் ~**

அன்னையர்களே. அதே போன்றே இன்று எம் தமிழீழ மண்ணிலே அன்று காணப்பெற்ற வீர அன்னையர்கள் போல் இன்றும் இம் மண்ணில் கூடியளவு உருவாகவில்லை. தானும் தன்னுடைய பாடும் என நினைக்கும் அன்னையர்களும், தன்னுடைய மகனுக்கு எவ்வளவு சீதனம் வாங்கலாம் என நினைக்கும் தாய்மார்களும் தனது மூத்தமகனைஎந்த நாட்டுக்கு அனுப்பலாம். அடுத்த மகனை எந்த நாட்டுக்கு அனுப்பலாம் என தமது சொந்த லாபம் தேடும் அன்னையர் குழாமும்தான் கூடிக் கொண்டு வருகின்றது. இந்நிலை இம் மண்ணை விட்டும் எம் தமிழீழத்தை விட்டும் அகல வேண்டும்.
''வீட்டுக்கொரு வீரன் போனால் விடுதலையும் நாளை வரும்----'' எனும் பாடல்வரி கனவுகள் நனவாகி எம் தமிழீழம் எம் தலைவன் காலத்தில் மலர அன்றைய வீர அன்னையர்கள் வம்சம் மீண்டும் துளிர் விட வேண்டும். எம் தமிழீழ மறவர்களின் கனவு நனவாகி எம் தேசம் எமக்கு



வரவேண்டும். ஆனால் அவ் அன்னையர் கூட்டம் மீண்டும் உருவாக வேண்டும். நிட்சயம் உருவாகும்.

## விறுவிறுப்பான தொடர் நாவல்

# என் கணவன் எனக்கு மட்டும் தான்

கொஞ்சநேரம்தான் பெய்த மழையானாலும் நிலம் குளிர்ந்திருந்தது. மீண்டும் இரவைக்குப் பெய்யும்போல வானம் தெளிவில்லாமல் இருள்காடாகத் தெரிந்தது.

சுகுமார் முன்னேற்பாடாகக் குடையை எடுத்து சைக்கிளில் செருவிக் கொண்டு, "இந்திரா" என்று இளையவளை அழைத்தான்.

"என்னப்பா?"


"என்னதான் இருந்தாலும் என்னையும் ஒரு மனிதனாக நினைச்சி "காட்" அனுப்பியவங்க வீட்டுக்குப் போகாமலிருக்கிற சரியில்ல! நான் போறதும் வாறதும்!" என்றபடி சைக்கிளைத் தள்ளினான்.

"அப்பா அங்க கனநேரம் சுணங்கித்து நிக்காமக் கெதிபண்ணி வந்திருங்க" என்றாள் இந்திரா.

அவள் இப்படிச் சொன்னதில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருப்பதாக அவன் உணர்ந்தான்.

"இந்திரா, நீ என்னிடம் அப்போது சொன்னதைப் போல நான் இண்டைக்கு மட்டும்தான் குடிப்பன். அப்பா நாளையிலயிருந்து புது மனிதன்! அம்மா வந்தாலும் சரி வரா விட்டாலும் சரி நான் குடிக்கப்போறதில்ல எங்க சுதனக் காணல்ல?"

"இவடத்ததான் நிண்டான். ஆளக் காணல்ல. எந்த நாளும் இவன் இப்படித் தானப்பா வீட்டில ஒரு அஞ்சி நிமிசமும்




தங்கமாட்டான்."

"சரி இண்ணைக்கு மட்டும் தான்! நாளையிலயிருந்து வேலைக்குப் போனா எல்லாம் சரியாப் பொயித்திரும்!"

"என்னப்பா சும்மா வெறுங் கையோட போறீங்க?"

"சாமத்தியக் கலியாணத்துக்கு என்னத்த வாங்கித்துப் போறதெண்டு எனக்குச் சரியாத் தெரியல்ல. அதுகள் பாவம். காசக்குடுத்தாத்தான் எதை யெண்டாலும் செய்யுங்கள். சரி நான்வாறன்" என்று சொல்லிவிட்டு தெருக்கதவைத் திறந்த போது மாணிக்கம் சைக்கிளில் வந்தான்.

"தம்பி சுகுமார் எங்க பயணம்?"

"இவடத்ததான்.... சாமத்தியக் கலியாணத்துக்குப் பொயித்து வருவமெண்டு...!"

"பிறகென்ன....நானும் அங்க தான்போறன்! வா, ரெண்டு பேருமாப் போவம்!"

உதவிக்கு மாணிக்கம் வந்தது சுகுமாருக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. இருவரும் பேசிக் கொண்டே சென்றார்கள்.

"சாமத்தியக் கலியாணத்துக்கு அதிகமாகப் பொம்புளயள்தான் போவாங்க. என்ன செய்யிற அவளும் "காட்"ட அனுப்பித்தாள்! உங்களுக்குத் தெரியும் தானே இவள் பூங்கோதை இன்னும் மூத்தவன் வீட்டிலயிருந்துவரல்ல. அதால தான் நான் தனியப்போறன். ஏன் மாணிக்கண்ண உங்கட அவ வரல்லையா?"

"அது ஒரு மூதேசி! ஒரு இடத்தையும் போகக்கூப்பிட்டா வராது! பொம்புளயாகவும், ஆம்பிளயாகவும் நான் தான் கிடந்து இழுபட வேண்டியிருக்கு!"

"மாணிக்கம் இண்டைக்கு பரிமளம் சாராயம் விக்கமாட்டாள் எண்டு நினைக்கிறன். வேற எங்கெண்டாலும் எடுக்கலாமா?"

இப்படிச் சுகுமார் கேட்கும் போதே மாணிக்கத்திற்கு சாராயத்தவனம் எடுத்தது.

"இவன் வீரகத்திட பொண்டிலும் விக்கிறவள்தானே! அங்க எந்நேரமும் எடுக்கலாம்"

"எங்க பார்த்தாலும் இந்தப் பெண்டுகள்தானே மாணிக்கம் சாராயம் பிஸ்னஸ் பண்ணுதுகள்"

"இப்ப கஷ்டப்பட்டதுகளுக்கு லேசான தொழில் இதொண்டுதானே சுகுமார்! சரி சரி இந்த வீடுதான் நான் சொன்ன வீடு. இறங்கு!"

இருவரும் சைக்கிளை விட்டு இறங்கிக் கொண்டார்கள்.

"நான் இவடத்த நிக்கிறன். நீ போய்ச் சரக்கு இருக்காண்டு கேட்டுத்து வா" என்றான் சுகுமார்.

"இவளிட்டச் சாராயம் இல்லையெண்டா ரவுணிலேயே இல்லெண்டுதான் அர்த்தம். நீ கூச்சப்படாமச் சைக்கிளப் பூட்டித்து எனக்குப் பின்னால வா"

ஏழு மணியிருக்கும்! மழையிருள் வேறு, கும்மிருட்டாக எங்கும் இருண்டு போய் விட்டது. பெரிதான வளவு. முந்திரிகை மரங்கள் வளவெல்லம் குடைப்பரப்பி நின்றன. தூரத்தில் ஒரு சிறிய குடிசை குப்பிலாம்பொன்றின் வெளிச்சத்தில் வீரகத்தியனின் பெண்டில் குந்தியிருந்தாள்.

"பிள்ள சவுந்தரம்" என்று மாணிக்கம் குரல் கொடுத்ததுதான் தாமதம் விளக்குக்குப் பின்னாலிருந்து அண்ணார்ந்து பார்த்து "ஆரது மாணிக்கண்ணனா?" என்றாள்

"ஓம்புள்ள"

"அதார் பின்னால நிக்கிற?"

"நம்மட கிளாக்கர் சுகுமார்தான்"

"ரெண்டு பேருக்குமா எவ்வளவு வேணும்?" இப்படி அவள் கேட்டதும் மாணிக்கம் சட்டெனத் திரும்பி, "எவ்வளவு எடுப்பம்?" என்று சுகுமாரிடம் மெல்லக் கேட்டான்.

"பைன்ட் போதும் தானே"

"ஒ ஓ கனக்கக் குடிச்சித்துப் போனா அதயித அலம்புவம். ஆளுக்கு "கால் காணும்"

சுகுமார் கொடுத்த பணத்தை மாணிக்கம் கொண்டு போய் அவளிடம் கொடுத்ததும் அவள் குப்பி விளக்கு வெளிச்சத்தில் பணத்தை விரித்துப் பார்த்தாள், அப்போது அவளுடைய முகம் தெளிவாகத் தெரிந்தது.

பணத்தைப் பொத்திப் பிடித்தபடி எழுந்து அந்தச் சின்னக் குடிசைக்குள் நுழைந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் இரண்டு கிளாஸ், சாராய போத்தல் வெளியே வந்தது.

"மாணிக்கண்ண, சுணங்காதீங்க, போன கிழமையும் சாராயம் புடிக்கிறவனுகள் வந்து கரச்சல் படுத்தினவனுகள்!"

"ஓம்புள்ள எனக்குத் தெரியாதா!" என்றபடி சாராயத்தையும் கிளாசையும் கொண்டு வந்து மாணிக்கம், "இவடத்தையே இருப்பம் என்று டக்கெனக் குந்தினான்"

"இவடத்த இருக்கலாம் தானே?"

"ஓ நல்ல வடிவான கடற்கரை மண், ஊத்தகீத்த படாது, பயப்பிடாம இரன்"

இருவரும் மாறிமாறிக் குடித்து போத்தலைக் காலி செய்து கொண்டார்கள்.

மாணிக்கம் பீடியொன்றை எடுத்து சுகுமாரிடம் நீட்டினான்.

"வேணாம், நான் பீடி பத்திறல்ல. எனக்கிட்ட சீகரட்டொண்டு கிடக்கு!"

"அப்ப சரி இந்தா நெருப் பெட்டி, பத்தவை! நான் போய் போத்தலையும், கிளாசையும் குடுத்துப் போட்டு வாறன்"

இருவரும் வெளியே வந்து பூட்டி வைத்திருந்த சைக்கிளைத் திறந்து கொண்டு முன்னேறினார்கள்.

மழை பெய்து கிறவல் பாதை சதுக்புதுக் கென்றிருந்தது.

மாட்டு வண்டில், உழவு மெஷின்கள் போன தடயங்கள் பள்ளமும், திட்டியுமாகக் காணப்பட்டன. மாணிக்கம் லாவகமாகச் சைக்கிளைச் செலுத்தியபடி "சுகு, எப்படிச் சரக்கு?" என்று கேட்டான்.

"எந்தச் சரக்கக் கேக்கிறா?"

"ரெண்டும் தான்"

"சாராயத்தை விட அவள் வீரகத்திட பெண்டில் நல்லாயிருந்தாள்"

"உன்ர பெண்டில் ஊட்ட விட்டுப்போனதுக்குப் புறகு உனக்கு எல்லாப் பொண்டுகளும் வடிவாகத்தானிருக்கு"

"இல்ல மாணிக்கம், அழகு எங்க இருந்தாலும் அத ரசிக்கிறதில தவறு இல்லத்தானே!

"ஏன் அவள் பரிமளமும் ஆள் கருப்பெண்டாலும் நல்ல வடிவுதானே"

"அவள் ஒரு மாதிரியான வடிவு, இவள் வேறுவிதமான வடிவு!...

"என்னதான் வடிவெண்டாலும் எல்லாப் பொண்டுகளும் ஒண்டுதான்! இருட்டுப்பட்டா வித்தியாசமே இருக்காது! எல்லாம் நம்மட மனம்தான் சுகு காரணம்! "இவள் வீரகத்திட பெண்டில் எப்படி ஆள்?"

"பார்வைக்கு ஒரு மாதி ரித்தான். ஆனா இருபத்திரெண்டு கரட்! எவரும் வாலாட்டேலாது! ஆனா ஆசை யில இருட்டுக்க வச்சி அவள்ற மாம்பழச் சொத்தயில தட்டியிருக்கிறன். கையிலயும் காசி கொடுக்கக்குள்ள லேசாகக் கிள்ளியிக்கிறன்.

"அடிப்பன்! இண்டைக்கு!" என்று கடிவாளே தவிர கோபிக்கமாட்டாள்! அவ்வளவுதான் வேற விளையாட்டுக்கெல்லாம் அவள் ஆளில்ல!"

"கோவிச்சி ஊரக் கூட்டினா அவள்ற "பிஸினஸ்தானே கெட்டுப் போகும். அதாலதான் அவள் கிள்ளுறதுக்கும், நொள்ளுறதுக்கும் விட்டுக்குடுத்தாள்!"

"ஆ' அந்தா உனக்கும் புடிபடுகுதே! அதுசரி அவள் பரிமளம் எப்படி"

"உனக்கிட்டச் சொன்னா என்ன மாணிக்கம் இவள் என்ர பெண்சாதி பூங்கோதை என்னோட கோவிச்சிக் கொண்டு போன ஆத்திரத்தில் எவளெண்டாலும் ஒருத்தியோட தொடர்பு வச்சிக் கொள்ள வேணுமெண்டு தவிச்சன். பரிமளத்த எனக்குப் புடிச்சிப் போச்சி, ஆனா இன்னும் வாய் திறந்து அவளிட்ட என்ர ஆசையக் கேக்கல்ல, அதிகமேன் நீ அவள் வீரகத்திட பெண் டிலுக்குத் கிள்ளின மாதிரியும் நடந்த கொள்ளல்ல"

"அஞ்சப் பத்தக் காசக் குடுத்தா வளச்சிப் பிடிக்கலாம், ஆனா உன்னப் பொறுத்தளவில சரியில்ல, இப்பிடி நினைக்கிறதே பொஞ்சாதிக்குச் செய்யிற துரோகம். உன்னப் போல உன்ர பொஞ்சாதியும் நடந்தா உன்னால தாங்கேலுமா?"

"நானும் அதப்பத்தி இப்பவரக்குள்ள யோசிச்சித்தான் வந்தனான். நான் குடிக்கிறதும், பரிமளத்திட்டப் போய் வாறதும் இண்டையோட சரி. இனிமே வேணாம். எப்படியெண்டாலும் நான் போய் என்ர பெண்சாதியக் கூட்டித்து வரப் போறன்"

"அச்சா! அதத்தான் நீ செய்ய வேணும், எல்லார்ர வீட்டிலயும் இப்படி நரகல் பிரச்சினைகள் வாறதான் ஆளுக்காள் அஜஸ்ட் பண்ணினா எல்லாம் சரியாப் பொயித்திரும்."

பேசியபடியே இருவரும் சாமத்தியக் கலியாண வீட்டிற்கு முன்னால் வந்து இறங்கிக் கொண்டார்கள்.

*(தொடரும்)*

### வாசகர்களின் கவனத்திற்கு!

*"என் கணவன் எனக்கு மட்டும்தான்" தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?*

*அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.*

*நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

**கூப்பன்**

நாவலாசிரியர்
பெயர்..........................................
அனுப்புவரின் பெயர்..........................................
விலாசம்..........................................
கையொப்பம்..........................................




## தமிழைமறந்த தமிழன் தமிழனா?

உயிரோடு கலந்தெமது உடலுக்குள் ஓடுகின்ற
உதிரமாய் மாறியநல் ஒண்தமிழை மறந்துலகில்
மயிருக்கா வாழவேண்டும்? மனிதா நீ இம்மண்ணில்
மறத்தமிழன் பரம்பரையில் பிறப்பெடுத்தும்
பயிராக வாழுமுந்தன் பாலகர்க் கேன்தானோ
பைந்தமிழ்மேல் பற்றின்றி வளர்த்துக் கொண்டாய்?
உயிரான உன்தமிழ்த்தாய் அவளைத்தள்ளி
உலகத்தில் நீவாழும் வாழ்க்கை பொய்யே!

பிறமொழியைக் கற்றதிலே புலமைபெற்று
பேரறிஞராய் வாழ்தல் பிழையே இல்லை
அறவேநம் தாய்த்தமிழை மறந்து வாழ்தல்
அடுக்காது! தமிழர்களே தமிழை வாழ்வில்
மறப்பதுதான் பெருங்கொடுமை! வேறொன்றில்லை
மறப்பது நீர் தமிழையல்ல உன்தாயைத்தான்
இறந்தாலும் இச்செயலால் உனக்கு மோட்சம்
இல்லையென்று இப்போதே எண்ணிக்கொள்க!

தாய்மொழியை மறந்துவிட்டால் மெல்லமெல்ல
தமிழரது பண்பாடு, காலாசாரங்கள்
போய்விடுமே! என்றபயம் உமக்கே தய்யா
போலிகளே நீங்களெல்லாம் கடைசிக்காலம்
தாயென்பீர், தமிழென்பீர் ஐயோ எங்கள்
தலைவிதியே ~ என்றழுவீர் எல்லாம் வீணே!
மாய்ந்த பின்னால் உங்களது சரித்திரமும்
மறைந்து விடும் இது தமிழை மறந்தபாவம்!

வேற்றுமொழி பேசுகின்ற வெளிநாட்டாரும்
விரும்பிவந்து நம்தமிழை ஆய்ந்து கற்று,
ஆற்றிவைத்த அரும் பணியை அறிந்தும் கூட

ஆலகால விடம் குடிக்க அவர்க் கொண்டீரே
பாத்திகட்டிப் பயிர்விதைத்து ஆடும்மாடும்
பசிதீர்க்க விட்டதுபோல் வாழும் உங்கள்
சீத்துவத்தை என்சொல்வேன், தேன்தமிழின்
சுவையறியாச் செக்குமாட்டுக் கூட்டம் நீங்கள் !

வேட்டியெங்கே? சால்வையெங்கே? விபூதியெங்கே
வெளிநாட்டு மோகத்தால் எல்லாம் போச்சு!
நீட்டழகுக் கூந்தலெங்கே? திலகமெங்கே?
நீச்சலுடை தானுமக்கு மலிவாய்ப் போச்சு
கூட்டுறவாய் வாழ்ந்த தமிழ்ச் சாதியிங்கே?
குலைந்ததெல்லாம் உங்களைப்போல் தமிழ்மறந்து
நாட்டினிலே நாகரிக மோகம் கொண்டு
நாயாக அலைந்து வாழும் தமிழரால்தான்!

நல்ல தமிழ்ப் பெயரோடு வாழும் நீங்கள்
நாய்க்குவைக்கும் பெயரையெல்லாம் பிள்ளைகட்கு
நல்லதாமோ வைத்தழைத்தல்? நாளை அன்னார்
நடுக்கடலில் இருபடகில் காலைவைத்து
அல்லலுறும் நிலைக்காவார் ஐயோ உங்கள்
அறிவென்ன அறிவாமோ அறியேனய்யா
நல்ல தமிழ் தனை மறக்கும் தமிழர் நீங்கள்
நம் தமிழைக் காப்பாற்ற மாட்டீர் போங்கள்

தொழிலகத்தில் பேசுகின்ற மொழியை மேலும்
தொடர்ந்துங்கள் வீட்டினிலும் தாள்கிளப்பப்
பழகியதால் நீரென்ன புதுமை கண்டீர் ?
பாழாகப் போன தமிழ்ச் சாதியே நீ
பிழையில்லை பிறமொழியில் தேர்ச்சிபெற்று
பேசுவதும் , எழுதுவதும், தொழிலைத்தேடிப்
பிழைப்பதுவும் நல்லதுதான் ஆனா லெங்கள்
பைந்தமிழை மறந்ததுதான் பெரிய குற்றம்

தமிழ்மொழியை மறந்த தமிழ் மனிதரெல்லாம்
தமிழனென்று சொல்வதற்கே வெட்கம் வெட்கம்
அமிழ்தினிய மொழிமறந்து வாழும் கூட்டம்
ஆம் எங்கள் தமிழர்களின் கூட்டமில்லை
எமது மொழி, காலாசாரம் இதுதான் என்று
இவருரிமை கொண்டாட எதுவும் இல்லை
தமது சுகம் அதுபோதும் என்று வாழும்
தமிழ் மறந்த தமிழனொரு தமிழனில்லை.

-கவிஞர் செ. குணரத்தினம்

## உயிர்ப்பீந்த உத்தமன்



தம்பி திலீபா!
பதினாறு ஆண்டுகளுக்கு முன்
சந்தித்து உன்னோடு......
சந்திப்பா! சே! இல்லை
தரிசிப்பு என்பதுதான் சரி!
1987 செப்டம்பர் பதினான்கு
பொற்பதி வீதியில் அமைந்திருந்த
புலிகளின் தலைமைச் செயலகத்தில்தான்
உணர்ச்சிக் கவிஞன்
உன்னை எனக்கும்
என்னை உனக்கும் அறிமுகம் செய்து
வைத்தான்
வசீகரப் புன்னகையோடு வணக்கம் சொன்னாய்!
மெலிந்த உடலுக்குள்
நிறைந்த மனத்திடம் தெரிந்தது
பாட்டோடு வந்திருந்த எனக்குப்
பார்த்தீபனுன் தரிசிப்பால் பூரிப்பு
“நாளை நல்லூரில் தொடங்கும்
யாகத்தின் நாயகன் நீ ”என்று
காசியண்ணன் சொல்ல என்
மேனியெங்கும் புல்லரிப்பு
ஆதிக்க வெறியர் எங்களது
அற்புத விளக்கை அணையாமல் காப்பாரா?
தம்பியிவன் வைத்த, கோரிக்கை நிறைவேற்றி
நீதிக்குத் தலை சாய்ப்பாரா?
ஏய்ப்பாரா வேடிக்கை பார்ப்பாரா?
என்ற ஏக்கம் இதயத்தைக் கௌவியது
மறுநாள் (15.09.1987)
யாக மேடையில் தரிசித்தேன்

தியாகப் பயணத்தில் திலீபன்
மக்கள் சமுத்திரம் கோயில் வீதியில்
விழிநீரோடு வீற்றிருந்தது
இரண்டாம் நாள் மூன்றாம் நாள்
இதன் பின்பும் என்னால் இயலவில்லை
நீர் தானும் அருந்தாமல்
நீயிருந்த கடிய தவம்
உன்னை மனத்தின் உள்ளேந்தி!
ஊர் திரும்பி உருகி நின்றேன்
காந்தி தேசம் கண்திறக்கும் என நம்பிக்
காத்திருந்த மக்களெல்லாம்
நீந்திக் குளிக்க வைத்தார் கண்ணீரில்!
போலி முகமூடி தியாகநெருப்பில் தீய்ந்து விழ
துரோக வடிவச் சுயம் காட்டி
இந்தியா நிர்வாணமாய்
உலகின் முன் நின்றிழிவுற்றது
26.09.19987 மு.ப 10.58க்கு
பன்னிரு நாள் யாகப் பயணம் நிறைவுற்றது
திலீபன் நீ தீபமானாய் தமிழினத்தின்
விடுதலைக் கீதமானாய்!
உலகத் தமிழினம் உன்னால் பெற்றது
உயிர்ப்பு

## சீண்பாதீர்கள்

வாழ்ந்தால் மானம்
வீழ்ந்தால் வீரம் என்றிருந்தோம்!
எதிரியைக் காலடியில்தான்
கண்டிருக்கின்றோம்.!
இப்போது அவன் காலடியில்
எம்மைவைக்கப் பார்க்கிறான்
புரிந்துணர்வு ஒப்பந்தம் தந்த
பரிசில்களில் இதுவுமொன்று
ஆயுதத்துடன் எம்மைக்கண்டு
ஓடிய எதிரி
நிராயுத பாணியாக வருகின்ற
எங்கள் கைகளில்
விலங்கிடப் பார்க்கிறான்!
சத்தியத்திற்காகச் சாகத்துணிந்தவர்
நாங்கள்!
எம்மக்களுக்காகப் பொறுப்போம்
அண்ணனின் பொறுமைக்கும்
எல்லையுண்டு
பொங்கியெழுவான் ஓர் நாள்!
அப்போதுதான் எதிரி அறிவான்
இவை வெற்றுடம்பல்ல
வெடி குண்டென்று
மற்றவர்களைச் சீண்டாதீர்கள்
நாங்கள் சந்திரிக்காவின்
பிள்ளைகளல்ல
குணம்மாறி வாழ்வதற்கு!
நாங்கள் பிரபாகரனின் பிள்ளைகள்.




- இரா. சேனாதியான். -

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்ரசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 27-09-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 12




### இடமிருந்து வலம்

01) தூய்மை
05) அழகுணர்ச்சியுடன்கூடிய வெளிப்பாடு
06) செலவைச் சுருக்குதல் ஆனால் கஞ்சத்தனம் அல்ல. (குழம்பியுள்ளது)
08) மங்களமான முடிவு.
10) உமாதேவியின் இன்னொரு பெயர் (திரும்பியுள்ளது)
11) மோகத்துடன் கூடிய ஏக்கம்
13) வேகம் எனவும் கொள்ளலாம்.
14) பெண்கள் விரும்பும் இது சில சமயங்களில் அவர்களுக்கு வேலியாகி விடுவதும் உண்டு. (திரும்பியுள்ளது)
15) இதை வைத்தவன் எல்லோருமே தேவதாஸ் அல்ல.
16) இக் காலத்தில் இது கிடைப்பது வெகு சவாலாகவே உள்ளது. (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1) தென் தமிழீழப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளால் ஆட்லறி கையப்படுத்தப்பட்ட தாக்குதல் இடம்பெற்ற இடம்
2) முக்கனிகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
3) முனிவரை இப்படியும் சொல்லலாம்.
4) உயிரற்ற கல்லை சிற்பி உயிருள்ள இதுவாக மாற்றுவான்
5) இராமாயணத்தை தமிழில் தந்தவர்.
7) கனவு. (குழம்பியுள்ளது)
9) நிலத்தின் கீழ் உள்ள உலகம். (குழம்பியுள்ளது)
10) நாளுடன் சம்பந்தப்பட்ட இச்சொல்லை திருப்பிப் போட்டாலும் அதே சொல்லே வரும்.
12) கண் தோண்டும் மிருகம். (குழம்பியுள்ளது)
14) சில இடங்களில் இதுவே பயிரை மேய்ந்த கதையும் உண்டு. (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 10ற்கான விடைகள்.

**மேலிருந்து கீழ்**
01. வித்துடல்
05. பாதகம்
07. தைரியம்
09. வைர (ம்)
10. ஏணி
11. ஆ
12. காயம்
13. வந்தனம்
14. விரதம்
15. வீடு
16. அம்பு

**இடமிருந்து வலம்**
01. விந்தை
02. துயரம்
03. தடம்
06. கண்ணியம்
08. வைரி
10. ஏகாந்தம்
12. அரவம்
13. தவிடு

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**அ. வாசுகி**
**1ம் வருடகலைப்பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

**01. ம.எழிலரசி**
8ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

**02. திருமதி. வ.ஞானதேசிகன்**
மண்டூர் -02

**03. செல்வி.இளநிதி வரதராஜன்.**
1926 மாரியம்மன் கோவில் வீதி
கல்லடி, மட்டக்களப்பு.

**04. செல்வி ஜெ.பிரிந்திகா**
மட்/வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை, மட்டக்களப்பு

**05. செல்வி. ஆ.விமலராஜினி**
குருமண்வெளி-12களுவாஞ்சிகுடி.

**06. செல்வி சரவணமுத்து புவனேஸ்வரி**
பதுளை வீதி, மரப்பாலம்
கரடியனாறு

**07. வ.இளஞ்செழியன்**
பொறியியலாளர் அலுவலகம்
கி.ப.க.கழகம், வந்தாறுமூலை

**08. பே. குமாரலிங்கம்**
மட்.முதலைக்குடா ம.வி.
கொக்கட்டிச்சோலை

**09. செல்வி. அபிராமி விநாயகமூர்த்தி**
குருமண்வெளி 11,களுவாஞ்சிகுடி


**10. செல்வன். த. குனேஸ்**
குறிஞ்சாமுனை
கன்னன்குடா

# தானைத் தலைவனின் வழியில் சரித்திரம் படைத்தான் கப்டன் ஜெயந்தன்

## காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு

மட்டக்களப்பு மாவட்ட மண்ணின் ஓர் கிராமம் முறக்கொட்டாஞ்சேனை. விவசாயத்தோடு வீரமிகு தளபதிகளும், வீர வீராங்கனைகளும், விளைபயிர் நிலங்களும், படித்துப் பட்டம் பெற்றுப் பதவிகளில் இருப்போரும் நிறைந்த நல்லூர்.

தமிழின உணர்வு கொண்டு தானைத் தலைவனின் படையில் சேர்ந்து சரித்திரங்கள் பல எழுதிவிட்டு, சரித்திரமாய்






ஆகிவிட்ட சரித்திரவான்களின் சாதனைகளை அவர்கள் விட்டுச் சென்ற பாதையில் தானும் நடை போட எண்ணி தமிழீழப் போர்க்களத்தில் புதியதொரு போர்ப் பரணி பாடப் புகுந்தான் இந்த முறக்கொட்டாஞ்சேனை தந்த சம்புக்குட்டி தம்பதிகளின் தவப் புதல்வன் பத்மநாதன். 1972-ஆவணி 28ம் திகதி பிறந்தான்.

தந்தை சம்புக்குட்டி ஒரு பூசாரி. காலை, மதியம், மாலை வேளைகளில் ஆண்டவனுக்குத்தொண்டு செய்து வருவார் இவன் தந்தை. அவ் வேளையில் கசக்கிக் கட்டிய வெள்ளை வேட்டியுடன் பூப்பிடுங்கி மாலை கோர்த்து எடுத்துக் கொண்டு வருவான் இந்தப் பத்மநாதன்.

மூன்று ஆண்களும், மூன்று பெண்களும் உடன் பிறப்புக்கள். அதில் இந்தப் பத்மநாதன் கடைக்குட்டி. மட்/முறக் கொட்டாஞ்சேனை மகாவித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு வரைதான் கல்வி பயின்றிருக்கின்றான்.

இந்தியப் படைகளோடு சேர்ந்த தேச விரோதக் கும்பல்களையும் விடுதலைப் புலிகள் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த காலம். இராணுவச் சீருடை போட்டு துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு மறவன் பிரபாகரனின் படை வீரர்கள் வீர நடை போட்டு வரும் வேளைகளில் தன் வீட்டுப் படலையடியில் நின்று பார்த்திருக்கின்றான். கொள்ளை ஆசை இவனுக்கு. நாமும் இப்படிப் போகலாமா சேர்ப்பார்களா? பயிற்சி கஸ்ரமா? இப்படிப் பல கேள்விகள் இவனுள் எழும்பிய தாம்! தந்தை ஆனந்தக் கண்ணீரோடு கூறக் கேட்டிருக்கின்றோம். ''எங்கட குடும்பத்தில இவன் வித்தியாசமானவன். துடிப்பும் இவன் கூடப் பிறந்திருக்கு! சில வேளைகளில் அமைதியான நீரோடை போல அமர்ந்திருப்பான். என்னோட ஆலயத்துக்கும் வருவான். கரம் கூப்பிக் கடவுளை வணங்கியதும் என் மகனில் ஒரு கனிவான குணம் தெரியும். அது ஆலயம் வரும் அடியார்களுக்கு அமுது கொடுப்பதாகும். மகனே நீ என்னுடன் ஆலயம் வரும் வேளைகளில் இறைவனிடம் மண்ணுக்காகப் பொடியாகப் போகும் ஒரு வரம் ஒன்றைத் தா.....! என்று கேட்டாயோ.....! என்று இன்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது பத்மநாதன் தணலாகிப் பொடியான செய்தி கேட்ட பின் தந்தை சம்புக்குட்டி மேற்படி மற்றவர்களிடம் சொல்லி அழாமல் அழுதாராம்.

இப்படியிருந்த காலம் 1989ம் ஆண்டு ஆலயத்துக்குச் சென்று வருகின்றேன் என்று பெற்றவர்களிடம் சொல்லி விட்டு மண் மீட்புப் போருக்குப் போய் விட்டான். என் மகன் என்பதைப் புலி வீரர்கள் மூலம் கேட்டறிந்தார் தந்தை சம்புக்குட்டி. இருந்தும் வயதும் ஆளும் சிறிது தானே தாங்குவானா?...... தாயே நீதான் காப்பாற்ற வேண்டும் என் மகனை என்றழுதாராம்.

அம்பாறைக் கானகத்தில் ஏழாவது பயிற்சிப் பாசறையில் மனோ மாஸ்ரரின் தலைமையில் பயிற்சிதனைப் பெற்றான். 360 பேர் கலந்து கொண்ட பயிற்சிப் பாசறையது. சோதனை, வேதனைகளைத் தாங்கி துவண்டு விடாது பயிற்சியில் கலந்து செயற்படுகின்றவர்களில் இந்தப் பத்மநாதன் எனும் ஜெயந்தனும் ஒருவன்.

நாட்டுக்கு நல்லதைச் செய்யப் புறப்பட்டால் காட்டிக் கொடுப்புகளும் இருக்கத் தான் செய்யும். அதனால் இந்த ஜெயந்தன் புலியாகிய செய்தி கேட்டறிந்த தேசத் துரோகிகள் பொறி கக்கும் விழியோடு புறப்பட்ட வேங்கையின் அக்காவின் பிள்ளையான அருள் என்பவரை இழுத்துச் சென்று (1989ல்)சுட்டுக் கொன்றார்கள். அது மட்டுமல்லாது அடுத்த மருமகன் மாதவராஜா என்பவரையும் 1990ல் சிங்கள இராணுவச் சிப்பாய் வைனட் கத்தியினால் குத்திக் கொலை செய்தான். அடுத்த சகோதரன் திருமணமானவர். முறக்கொட்டாஞ்சேனை நடுச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். இவைகளையும் இந்த ஜெயந்தன் கேட்டறிந்திருக்கின்றான்.

அம்பாறை ஏழுதனில் தன்அடிப்படைப் பயிற்சியில் கலந்திருந்த காலம் அன்பு, அடக்கம், துணிவு பயிற்சி ஆசிரியரின் சொல்லுக்குக் கட்டுப்படுதல் -உணவில்

**குலேந்திரன் அங்கிள்**

கொஞ்சம் தயக்கம். காரணம் பூசாரியாரின் மகன் என்பதால் -மச்சம் மாமிசம் வெகு தூரம்.

360 பேர் பயிற்சி பெற்றார்கள். அனைவரும் திறமையானவர்கள். இரவு வேளைகளில் பயிற்சி ஆசிரியரின் இராணுவ, அரசியல் கருத்துக்களில் கலந்து அறிந்து கொண்டவன். பயிற்சி ஆசிரியரின் பாடங்களில் ஒன்று கரும்புலி கப்டன் மில்லரைப் பற்றியும், நெல்லியடி மகாவித்தியாலயத்தில் வெடி குண்டு கொண்டு போய் வெடித்து அந்த முகாம் தகர்க்கப்பட்டதையும் அதில் இருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை பற்றியும் அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு அவர்களின் திட்டம் தவிடு பொடியானது சம்பந்தமாக விரிவாக எடுத்துரைக்கக் கேட்டிருந்தவன் ஜெயந்தன்.

விண்ணென்றாலும் மண்ணென்றாலும் பயமென்று சொல்வதற்கில்லை. அதே நேரம் நெய்தல் நிலத்தைக் கண்டால் பெரும் தாக்கம் எவர்க்கும் எப்பவும் எழத்தான் செய்யும். ''கடல் மகன், கடும் நீரோட்டம் இருக்குதாம். அதனால் அப்பக்கமே காலடி எடுத்து வைக்க வேண்டாம் மகன்" என்று தமையனுக்குத் தாய்கூறி வைப்பாள். அதனால் பயந்த உள்ளங்களும் இருக்கத் தான் செய்யும்.

இரண்டாம் கட்ட ஈழப் போர்க்களம் பல போராளிகள் யாழ் மண்ணை நோக்கினார்கள். அனைவரிடமும் விபரம் கேட்டு எழுதப்படுகின்றது. ''தன்னை அழித்து அல்லது எதிரிகள் பலரை அழித்து, அல்லது பலம் மிக்க ஒரு இலக்கை அழிக்கக் கூடியதொரு படையணியினை உருவாக்குவதன் தேவையை எமது தலைவர் அவர்கள் ஏற்கனவே தமது சிந்தனையில் கொண்டிருந்தார்.

அவருடைய நீண்ட காலச் சிந்தனையின் வெளிப்பாடே ''கரும்புலிகள் , கடற்புலிகள், கடற்கரும்புலிகள் படையணி இக்கரிய வேங்கைகளின் படையணியில் இணைந்து தன்னைப் பொடியாக்கித் தமிழீழ மண்ணுக்கு விடுதலையைத் தேடிக் கொடுக்க எண்ணிய கடற் கரும்புலிகளில் இந்தக் கப்டன் ஜெயந்தன் வித்தியாசமானவன்.

தமிழீழக் கடற்பரப்பில் தமிழீழத் தலைவனின் ஆணையின்றி பகைவனின் எந்தக் கப்பல்களும் பவனி வரக் கூடாது என்பதும் அதற்காக உருவாக்கப்பட்ட கடற்படையும் அதிலிருந்து கடற்களம் நோக்கிச் செல்லும் கடல் வேங்கைகளின் வெடிமருந்தேற்றிய விசைப்படகில் இடிபட்டு உயிர் தப்பிச் சென்று மீண்டும் திரும்பிக் கடலில் வலம் வரக் கூடாது என்பது எங்கள் தேசியத் தலைவனின் திட்டம். அதற்கமையவே கடல் வேங்கைகளும் காவிய நாயகனின் அன்புக் கட்டளைக்கு அடி பணிந்து செயற்பட்டனர் செயற்படுகின்றனர்.

மேஜர் காந்தருபன், கப்டன் கொலின், கப்டன் வினோத் ஆகியோர் தலைவனின் சொற்கேட்டு தமிழீழக் கடற் பரப்பில் நானே ராஜா என 10.07.1990ல் கும்மாளமிட்டு வந்த பி-715 எடித்தாரா எனும் கப்பலை அடியோடு அழித்துக் கடலோடு கலக்க வைத்தனர் தமிழீழத் தலைவனின் கண்ணின் மணிகள்.

எங்கள் தேசியத் தலைவர் அவர்களின் திட்டப்படி ''எங்களால் இடிக்கப்பட்டு தப்பியதாக ஒரு கப்பலும் தமிழீழக் கடற் பரப்பில் உலாவரக் கூடாது" அதற்கமையவே எடித்தாரா கப்பலுக்குக் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து அடிப்பதுதான் திட்டம். தமிழீழக் கடற் பரப்பில் சிங்களக் கூலிப்படையின் அராஜகம் தலை விரித்தாடத் தொடங்கியது.

கடலில் வலம் வரும் கப்பல்களை உடைப்பதென்பது இலேசான காரியமல்ல. ஆனால் கடற்புலிகளுக்கு அது சாதாரண விடயமாகவே இருந்தது. தலைவனின் ஆணைகேட்டு மண்ணுக்காக, மக்களுக்காக தங்களைத் தணலாக்கிப் பொடியாக்கியவர்கள் கடற்புலிகள், இதற்கு நான் முந்தி நீ முந்தி என்றும் செயற்படுவார்கள். கடல் வேங்கைகள்.

வடபகுதி கட்டளை அதிகாரியாக அன்று கடமையில் இருந்தவர் ஜனாப் ராஜித் என்பவர். காங்கேசன்துறை, தலைமன்னார், காரைநகர் ஆகிய மூன்று கடற்படைத் தளங்களுக்கும் இந்த ராஜித்தே பொறுப்பாக இருந்தவர்.

(தொடரும்)

## சென்றவாரத் தொடர்ச்சி

174. 1989ஆகஸ்ட் 2,3,4ஆந் திகதிகளில் இந்திய வன்கவர்வுப் படையினர் வட தமிழீழத்தில் மேற்கொண்ட படுகொலை, அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினரால் வியட்நாமில் மேற்கொள்ளப்பட்ட ''மைலாய் படுகொலை"க்கு ஒப்பாகக் கருதப்பட்டது. 64 அப்பாவிகள் கொல்லப்பட்ட அப்படுகொலை தொடர்பாகத் தமிழ் ஆங்கில மொழிகளில் வெளியான நூல் எது?

**வல்வைப் படுகொலை** Massacre At Valvettithurai

175. யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற இறுதி நேரத் திட்டமிட்ட வேளையில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிறிலங்காவின் சிங்களப் படைத்துறையின் வடபிராந்தியக் கூட்டுத்தலைமை அராலித்துறையில் கண்ணிவெடித் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்ட போரியல் சாதனை நிகழ்த்தப்பட்டது எப்போது?

**08.08.1992இல்**

176. இலங்கைத் தீவில் ''இரு தேசங்களுக்கிடையேயான யுத்தம்" என உலக நாடுகளால் வர்ணிக்கப்பட்ட ''ஆகாய-கடல்-வெளி சமர்" மரபுவழிப் படை நடவடிக்கை விடுதலைப் புலிகளால் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

**1990 ஜூலை 10இல்**



177. 1993 இலிருந்து ஜூன் 05ம் நாள் அனுட்டிக்கப்பட்ட தமிழீழத் தேசிய நாள்களுள் ஒன்று உலக சூழல் தினத்தைக் கருத்திற் கொண்டு 1995 இலிருந்து ஜூன் 06ம் நாள் சிறப்பிக்கப்படுகின்றது. அந் நாள் எது?

**''தமிழீழ மாணவர் எழுச்சி நாள்''**

178. வன்னியை ஆண்ட கைலாய வன்னியனின் வீரவரலாற்றைக் கூறும் ''கரவைக்கிழார்" எழுதிய நாடகம் ஒன்று 1968 ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்தது. அந் நாடக நூலின் பெயர் என்ன?

**''தணியாத தாகம்''**

179. 1981ஆம் ஆண்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அறிக்கையின் படி 2.5 இலட்சம் தொன் அளவான கனியமணல் படுகை இருப்பதாகக் கண்டறியப்பட்ட தென்தமிழீழப் பிரதேசம் எது?

**திருக்கோவில்**

(✍ கோமளமைந்தன)

## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"

180. ''கோடை" எனும் புகழ்பெற்ற நாடகத்தை எழுதிய ஈழத்துக் கவிஞரான ''மஹாகவி" யின் இயற்பெயர் என்ன?

**து.உருத்திரமூர்த்தி (அளவெட்டி. யாழ்)**

181. 09.08.1992 இல் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பிற்கு அஞ்சிப் பதுங்கச் சென்ற அப்பாவித் தமிழ் மக்கள் 50 பேர் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் எப் பெயரால் அறியப்படுகின்றது?

**மயிலந்தனைப் படுகொலை**

(தொடரும்)

# 13வது நினைவு கூரும் புதுக்குடியிருப்பு படுகொலை 21-09-1990




**தென்** தமிழீழத்தின் தலைப் பட்டினமாகத் திகழ்வது மட்டுநகரின் தெற்கே சுமார் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மண்முனைப் பற்று பிரதேசப் பிரிவாகும். இப் பிரிவிற்கு உட்பட்ட கிராமமாகத் திகழ்வதே புதுக் குடியிருப்புக் கிராமமாகும். இப் புதுக்குடியிருப்புக் கிராமம் பல வகையிலும் சிறப்புற்று விளங்குகிறது. கிழக்கே கடலாலும் மேற்கே ஆற்றாலும் தெற்கே கிரான்குளம் எனும் கிராமத்தாலும் வடக்கே வேடர் குடியிருப்பு, தாளங்குடா எனும் கிராமங்களாலும் எல்லையினைக் கொண்டு பல வகையிலும் தன் பெயரினை நிலைநிறுத்தி சிறப்புமிக்க கிராமமாக விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறு இருப்பினும் இக்கிராம மக்களால் இன்றும் நினைவு கூர்ந்து மனவேதனையுடன் பேசும் விடயம் யாதெனில் இப்புதுக்குடியிருப்பில் 1990 - 09-21ம் திகதி முஸ்லிம் ஊர்காவற் படையினரால் மிகக் கொடூரமாகவும், மூர்க்கத் தனமாகவும் மனிதாபிமானம் அற்ற விசமிகளால் மிகக் கச்சிதமாக கோழைத் தனமாகச் செய்து முடிக்கப் பட்ட படுகொலையாகும்.

இச் சிறிலங்காவில் இரண்டாம் கட்ட ஈழப்போரானது 1990ம் ஆண்டு சிங்கள ஆட்சியாளர்களின் திட்டமிட்ட நயவஞ்சனைப் போக்கினால் ஆரம்பமாகி 1983ம் ஆண்டு யூலை கலவரத்தின் போது எம் இன உறவுகளினை யுத்தத் தீயிலே ஆகுதியாக்கியதைப் போல் மீண்டும் இத் தமிழ் இனத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டும் எனும் ஆதங்கநோக்கோடு. கீழ்க் காணும் படுகொலைகளை மிகக் கச்சிதமாகச் செய்து முடித்தனர். இதன் வரிசையிலே

1990-9-5 கிழக்குப்பல்கலைக்கழகப் படுகொலை.
1990-09-09 சத்துருக்கொண்டான் படுகொலை.
1990-08-07 திராய்க்கேணி படுகொலை.
1990-08-17 வீரமுனைப் படுகொலை.
1990-10-30 கொக்கட்டிச்சோலை படுகொலை.

என சுமார் 10,000க்கு மேற்பட்ட வெறும் அப்பாவிப் பொதுமக்களின் மேல் புலிச்சாயம் பூசிக் கொன்றொழித்தனர்.



இதன் வரிசையிலே இன்றைய நாள் நினைவு கூரும் படுகொலையாக விளங்குவது 13வது நினைவினைக் காணும் புதுக்குடியிருப்புப் படுகொலை யாகும்.

இப்படுகொலையினைப் பற்றி இப்படுகொலையில் இருந்து அன்று வெடி காயத்துடன் உயிர் தப்பிய 11 வயது இளைஞ (தற்போது 24வயது)ரிடம் கேட்ட போது அவர் தமக்கு இழைக்கப்பட்ட சோக அனுபவங்களையும் தன் தாய் இப்படுகொலையில் மரணித்ததால் உண்டான சோகத்தினைப் பற்றியும் அவர் பின்வருமாறு கூறினார்.

இப்படுகொலை யானது 1990-09-21ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு சிறிய தூறல் மழை யின் பின் 10.45 மணியளவில் முஸ்லிம் ஊர் காவல் படை யினர் கறுப்பு அரைக் காற்சட் டையும் கறுப்பு 'ரீ' சேட்டுடனும் வந்து சிங்களப் பாசை யின் மூலம் இக்கிராம மக்களை ஏமாற்றி வீடு வீடாகச் சென்று அவர்களால் முதன் முதலில் பிடிக்கப்பட்ட அ.வரதராசா க.பொ.த. (சா.த) மாணவன் மூலம் கடற்கரை வீதியில் இரு மருங்கிலும் உள்ள வீட்டினரை ஒவ்வொரு வீடாகச் சென்று எழுப்பி "உங்களிடம் ஒரு விசாரணை உள்ளது. அவ் விசாரணை முடிந்த உடன் அனுப்பு கின்றோம் என நயவஞ்சக வார்த்தைகளால் கூறி சுமார் 44 அப்பாவித் தமிழ் மக்களினைப் புதுக்குடியிருப்பு கடற்கரைக்குக் கொண்டு சென்றனர்.

பின் அக்கடற்கரை ஓரத்தில் உள்ள கிடங்கு ஒன்றினுள் எல்லோரையும் அமரும்படி செய்துவிட்டு அந்த 44 பேரினையும் வகைப்படுத்தினர் இதில் திருமணமானவர், திருமணமாகாதவர் பாடசாலை செல்வோர் என வகைப்படுத்திய பின் இரண்டு இரண்டு பேராக விசாரணை செய்ய வேண்டுமாம் எனக் கேட்டு முதலில் சிங்களம் தெரிந்தவர்களான சி.கதிராமப்போடி (63) சி.முத்துலிங்கம் (43) ஆகிய இருவரையும் கொண்டு சென்றனர். இதன் பின் இருவர் இருவராக ஆள்மாறி ஆளாகக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

மேலே கூட்டிச் சென்ற வர்களிற்கு என்ன நடக்கிறதென்பதினை அறியாத கிடங்கினுள் அமர்ந்திருந்த அப்பாவி மக்கள் தங்களுக்குரிய இஷ்ட தெய்வங்களின் பெயரினை உச்சரித்துக் கொண்டே இருந்தனர்.

இதன் பின் அ.பேரின்பராசா க.அமிர்தலிங்கம் ஆகியோரினை கூட்டிக் கொண்டு செல்லும் போது இவர்கள் இருவரும் இரு புறமும் ஓட உடனே எதிர் பாராமல் வெடி வெடித்து விட்டது. ஆனால் அவர்கள் இருவரும் கை கட்டப்பட்ட நிலையிலும் கண் கட்டப்பட்ட நிலையிலும் ஓடித் தப்பி விட்டனர். இதன் பின் இங்கு நடந்த சம்பவம் ஊர் மக்களுக்குத் தெரிந்து விட்டால் இவ் ஊர் மக்கள் வந்து விடுவார்கள் எனும் நோக்கில் அக்கிடங்கினுள் இருந்த அனைவருக்கும் தமது இயந்திரத் துப்பாக்கியினால் வேட்டுக்கள் தீர்த்து எம் இன உறவுகளை அவ் விடத்திலே துடி துடித்து மரணிக்க வைத்துவிட்டு ஓடி மறைந்தனர்.

அன்று பிற்பகல் 2.00 மணியளவில் ஆத்திரமும் கோபமும் கொண்டு பொங்கி எழுந்த அவ்வூர் மக்கள் ஒன்றுபட்டவராய் அச்சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு ஓடி வந்தனர். இதில் குறிப்பாக க. தருமலிங்கம் (தருமன்) என்பவரே அங்கு உடன் வந்து அங்கே குற்றுயிராய்க் கிடப்போரையும் காயப்பட்டோரையும் மற்றும் மரணப் படுக்கையில் மீளாத் துயில்வோரையும் அங்கிருந்து வண்டிகள் மூலம், தூக்கியும், நடக்க இயலுமானவரை நடத்தியும் அந்தக் கடல் ஓரத்தில் இருந்து அப்புறப்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

**- சாத்ஜகி -**
**தேசியகல்விக் கல்லூரி**

# தேடலும் பகிர்வும்

இந்தியாவின் இராமேஸ்வரத்தில் வீடு வீடாகப் பேப்பர் போட்டுக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். பிறகு பேப்பர் பேப்பராக அவன் படத்தைப் போட்டுப் பெருமைப்படுத்தியது. அந்த உலகப் புகழ்பெற்ற சிறுவன் யார் தெரியுமா? படகு படைத்து இயக்கியவர் மகனாய் இராமேஸ்வரம் தீவில் பிறந்து இந்தியக் குடியரசுத் தலைவராக உயர்ந்த "ஏவுகணை மனிதன்" ஆவுல் பக்கீர் ஜெயினுலாபுதீன் அப்துல்கலாம் என்ற சாதாரண மனிதர்தான். "வறுமை வெட்கத்துக்குரியது அல்ல" என்ற தன்முனைப்பாற்றலால் "வெற்றி நிச்சயம்" என்பதை வெளிப்படுத்தித் தேசத்தை நேசிக்கும் அவரது ஆக்கங்கள், உரைகள், கவிதைகள் என எண்ணற்ற எழுத்துக்கள் உத்வேகமளிப்பன.

இந்திய விண்வெளி மற்றும் பாதுகாப்பு வரலாற்றோடு இவரது வாழ்க்கையும் 'பிணைக்கப்பட்டுள்ளதை' அவரது "அக்னிச்சிறகுகள்" (Wings of Fire) நூலில் காணலாம். இந்தியப் பொருண்மியத்தைச் செழிக்க வைக்கும் நடைமுறைத் திட்டங்களை "இந்தியா 2020 புத்தாயிரம் ஆண்டுகளுக்கான ஒரு தொலைநோக்கு" (India 2020 A vision for the new Millennium) எனும் நூலில் அறியலாம். இத் தொடர்ச்சியாக அக்டோபர் 20இல் முதல் பதிப்பாக மு.சிவலிங்கம் தமிழாக்கிய இவரது அண்மைய நூல் "எழுச்சி தீபங்கள்" வெளிவந்தது. பெப்ருவரி 2003இல் ஐந்தாம் பதிப்பாக வெளியான இந்நூலை "நான் இந்தப் புத்தகத்தைப் பன்னிரெண்டாம் வகுப்பில் படிக்கும் ஒரு குழந்தைக்குச் சமர்ப்பிக்கிறேன்" என்று அப்துல் கலாம் குறிப்பிடுவது " உயர்வில் பணிவு, என்ற உன்னதத்தைக் காட்டுகின்றது.

**- த.வசந் -**

ஒன்பது அத்தியாயங்களைக் கொண்ட அந்நூலில் "அரசியலுக்கும் மதத்திற்கும் அப்பாற்பட்டது. தேசபக்தி" என்ற பகுதியில் அப்துல் கலாம் கூறும் கருத்துக்களில் சில வரிகளை நன்றியுடன் பகிர்ந்து கொள்வோம். பாரதத்துடனான எமது அரசியல் முரண்பாடுகளைக் கடந்தகால பகைமையுணர்வுகளைத் தள்ளி வைத்துவிட்டு இந் நூலைத் தேடிப் படிப்போம்.

"........உயர்ந்த நிலையை எட்டுவதற்காக நாம் எழுச்சி பெற வேண்டும். என்று எனது தேச மக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். இந்திய மக்களனைவரும் தங்களுடைய அபாரமான ஆற்றல்களுடனும், அளப்பரிய திறமைகளுடனும் எழுச்சி பெறுவதற்கான அழைப்பு இது." தேசங்களின் எழுச்சி அல்லது வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் சக்திகள் எவை? ஒரு தேசத்தை வலிமை படைத்ததாக மாற்றும் அம்சங்கள் எவை.? வலுவான ஒரு தேசத்தில் மூன்று அம்சங்களைக் காண முடிகின்றது. அவை அந்தத் தேசத்தின் சாதனைகளில் ஒரு கூட்டுப் பெருமிதம் ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்து செயல்படும் ஆற்றல்.

"தேசமாக இருந்தாலும் சரி, மக்களாக இருந்தாலும் சரி, மிக உயர்ந்த நிலையை எட்ட வேண்டுமென்றால் கடந்த காலத்தின் புகழ்பெற்ற நாயகர்கள், மகத்தான சாதனைகள், அரும்பெரும் சாகசங்கள், அசாத்திய வெற்றிகள் பற்றிய பெருமிதத்தை ஞாபகத்தில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். உயர்ந்த நிலைக்கு முன்னேறியுள்ள அனைத்து நாடுகளுமே ஒரு இலட்சிய உணர்வை ஊட்டிக் கொண்டிருக்கின்றன.

"ஒற்றுமையை உருவாக்கும்ஒரு தொலைநோக்குத்தான் நமது தேசத்திற்கு இப்போது தேவைப்படுகிறது. அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டி ஆக்கபூர்வமான மாற்றத்திற்கான ஒரு குறிக்கோள் சார்ந்த வேறு எதையும் விட குறிக்கோளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வழிமுறையில் அவற்றைப் பயன்படுத்துவதே நமது தலைமையின் முன்னே உள்ள மிகவும் அவசியமான, அவசரமான செயற்திட்டம்"

தேசவிடுதலைப் போரின் இன்னுமொரு கட்டத்திற்கு நகர்ந்துள்ள நாம். "கனவு மலரட்டும்! கனவு மலரட்டும்; கனவு மலரட்டும்! கனவுகள் எண்ணங்களாக வடிவம் பெறுகின்றன. எண்ணங்கள் செயல்களாகப் பரிணமிக்கின்றன" என்று பாடி "அப்துல்கலாம் கையால் விருதுகள் வாங்கலாம்" என்று இந்திய இளைய சமுதாயம் பாடிப் பணியாற்றக் காரணமாக அப்துல் கலாமின் வரிகளைப் பகுத்துணர்வோம்.

**01**

நிரந்தர கௌரவமான சமாதானத்துக்காகக் கனவு காண்கின்ற நாம் "அயர்லாந்து மண்ணில் உள்ள பிரிட்டிஷ் படை வீரனுக்கு ஓர் கடிதம்" எனும் தலைப்பிலான "பேட்ரிக் கால்வி"னின் கவிதையின் சில வரிகளைப் பார்ப்போம். "தான்பீரின், தொடரும் பயணம்" என்ற நூலின் பின்னிணைப்பாகக் காணப்பட்ட கவிதைகளுள் ஒன்றே இது. "சிங்களப் படைகளே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்று நீதி கேட்கும் எமது மக்களின் தன்மையை ஒத்தது. இக்கவிதை எஸ்.வி.ராஜதுரை மற்றும் வ. கீதா ஆகியோர் இதனைத் தமிழாக்கியுள்ளனர்.

**"படை வீரரே**
**இங்கு வரவேண்டும் என்று**
**நீ யாரையும் கேட்கவில்லை**
**அது எங்களுக்குத் தெரியும்.**
**நீ ஆணைகளுக்கு அடிபணிகிறாய்**
**அது எங்களுக்குத் தெரியும்.**
**உனக்கு ஒரு மனைவி**
**ஒரு காதலி**
**ஒரு தாய் உண்டு**
**அது எங்களுக்குத் தெரியும்.**
**உனக்குக் குழந்தைகள் உண்டு**
**அதுவும் எங்களுக்குத் தெரியும்.**
**ஆனால் படை வீரனே**
**எங்கு நீ நிற்கிறாயோ**
**அங்கே உனக்கு மரணம் நிச்சயம்.**
**எங்கு நீ நடக்கிறாயோ**
**அங்கே ஏற்படும் உனக்கொரு**
**எரிகின்ற காயம்.**
**எங்கு நீ உறங்குகிறாயோ**
**அங்கு உனக்கு அமைதியே இல்லை.**
.................................
.................................
**மரணமே இல்லாத**
**பசுமையானதொரு பூமியை**
**இறங்கிவரும் ஒரு நிசப்தத்தை**
**நாங்கள் கனவு காண்கின்றோம்**
**இந்தக் கனவை நாங்கள் காண்பதற்கு**

**படை வீரனே**
**நீ வேண்டியதில்லை.**
**அதுதான் எங்களது புரிதல்.**
**வீட்டுக்குப் போ படை வீரனே**
**நீ இங்கிருப்பது**
**காற்றை நாசப்படுத்துகிறது.**
**உனது புன்முறுவல்**
**எங்களை அலங்கோலப்படுத்துகிறது.**
**வீட்டுக்குப் போ படை வீரனே**
**உன்னைப் பிணமாக நாங்கள்**
**உன் வீட்டுக்கு அனுப்புவதற்கு முன்!"**

* * * *

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையிலிருந்து "நான் ஒரு கனவு காண்கிறேன். அந்தக் கனவு நனவாகி, நடைமுறை உண்மையாக வேண்டும் என்பது எனது அவா. எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம்பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்"

# இலங்கை வரலாறும் பூர்வீக மட்டக்களப்பும்

**தமிழகத்தின் நாகரீக வரலாறு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் (Megalothic) ஆரம்பமாவது போல ஈழநாட்டின் நாகரீக வரலாறும் பெருங்கற் காலத்துடன் ஆரம்பமாகின்றது. புவிச்சரிதவியல் (Geology) தாவரவியல் (Biology) விலங்கியல் (Zoology) கல்லியல் (Lithology) மானுடவியல் (Antharopology) தொல் பொருளியல் (Archaeology) போன்ற பல அறிவியல் துறைகளின் துணை கொண்ட ஆய்வுகளினடிப்படையிலே ஈழவரலாறு என்பது**

**01. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Prehistory Period)**
**02. வரலாற்று இடைக்காலம் (Proto history Period)**
**03. வரலாற்றுக் காலம் (History Period)**
**04பெருங்கற்காலம் (Magalatic Period) என வகைப்படுத்தப்பட்டு, மிக நீண்டகாலத் தொன்மையுடையது. என நிறுவப்பட்டுள்ளது. ஈழவரலாறு எத்தகைய தொன்மை வாய்ந்ததோ அத்தகைய தொன்மையுடையது. எமது மட்டக்களப்பு வரலாறு குறிப்பாக கிழக்கிலங்கைப் பிரதேசம். இதனைப் பல ஆய்வுகள் மூலம் தெளிவாகக் காட்டுகின்றன.**

**இலங்கை வரலாறு கூறும் ''மகாவம்சம்,, என்னும் நூலின்படி கலிங்க நாட்டிலிருந்து விஜயன் இலங்கைக்கு வருவதுடன் (கி.மு. 543) இலங்கை வரலாறு ஆரம்பமாகின்றது. கி.பி. 6ம் நூற்றாண்டில் மகா நாம தேரர் என்பவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் இந்நூலில் சிங்கள பௌத்த மன்னர்களின் வரலாறு மட்டுமே கூறப்பட்டுள்ளது. இந் நூலில் கர்ணபரம்பரைக் கதைகளும் (Myth) பொய் புரட்டுக்களும் தமிழ் மன்னர்களுக்கு எதிரான செய்திகளும் நிரம்பி உள்ளன.**

**இத்தகைய பின்னணியில் தமிழர் வரலாற்றையும் தமிழ்ப் பிரதேசங்களின் வரலாற்றையும் அறிவதற்கு நாம்பிற சான்றாதாரங்களையே நாட வேண்டியுள்ளது. அத்தகைய சான்றாதாரங்களைக் கொண்டு பின்வரும் உண்மைகளை நிறுவ முடியும்.**

**01. விஜயன் வரமுன்பே இலங்கையில் பூர்வீக குடிகள் வாழ்ந்திருக்கின்றனர்.**
**02. இவர்கள் ஒளிரலோயிட் எனப்படும் ஆதித் திராவிடர்கள்.**
**03. கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் இவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.**


## பூர்வீக மட்டக்களப்பு பிரதேசம்

1963ம் ஆண்டுவரை கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய இருமாவட்டங்கள் மட்டுமே இருந்தன. மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகல் முதல் தெற்கே குமண வரை பரந்திருந்தது. 163ல் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதி (கல்முனை முதல் குமண வரையுள்ள பிரதேசம்) அம்பாறை மாவட்டம் என தனியாகப் பிரிக்கப்பட்டது. இப்பிரிவினைக்கு முந்திய பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டம் எனப்படுவது. ஆனால் அதற்கும் முன்பு வரலாற்றுக் காலங்களில் மட்டக்களப்புப் பிரதேசம் என்பது றோகணை இராட்சியத்தின் பல இடங்களையும் உள்ளடக்கியதாக பரந்து இருந்தது. கதிர்காமம் தொடக்கம் இப்பிரதேசம் விந்தன வெல்லச, ஊவா போன்ற பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது

எஸ் பரண விதான (தொல்லியல் ஆணையாளர்) 1970ல் வெளியிட்ட Inscriptions of Ceylon I என்னும் தொல்பொருளில் திணைக்கள வெளியீட்டு நூலிலே மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்களை வெருகல் முதல் பாணம வரையுள்ள இடங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் மட்டக்களப்பில் பிராமிக்கல்வெட்டுக்கள் காணப்படுமிடங்களாக பின்வரும் இடங்களைக் குறிப்பிடுகின்றார். கோறளைப்பற்று, (வாழைச்சேனை) ஏறாவூர் பற்று (ஏறாவூர்) விந்தனைப்பற்று (விந்தனை) மண்முனைப்பற்று (மண்முனை) வேவகம் பற்று (இங்கினியாகலை) சம்மாந்துறைப்பற்று, பாணமைப்பற்று, அக்கரைப்பற்று என்பன. ஆகவே பூர்வீக மட்டக்களப்பு என்னும் போது ஊவா, விந்தெனவெல்லசவையும் உள்ளடக்கிய வெருகல் முதல் கதிகாமம் வரையிலான பிரதேசமே என்பது தெளிவாகும். இதனை பின்வரும் சான்றுகள் காட்டுகின்றன.'

01.Inscriptions of Ceylon by S.Paranavitana (P.P.Xiii)
02. Ceylon (ensus Report - 1972)பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுமிடங்கள் ஆதித்திராவிடருடன் தொடர்புடையவையாகும், கிழக்கிலும், தெற்கிலும் காணப்பட்ட பிராமி லிடிகள் ''தமிழி'' எனப்பட்ட தமிழ் பிராமி எழுத்துக்கள் என ஜராவதம் மகாதேவன், சந்தமங்கள சந்தமங்கள கருணரெத்தின சிரான் டெரனிய கல, போன்றோர் குறிப்பிடுகின்றனர்.



## மட்டக்களப்பின் வரலாற்றுக் சான்றாதாரங்கள்

மட்டக்களப்பின் உண்மையான வரலாற்றுத் தகவல்களை அறிவதற்குப் பின்வரும் சான்றாதாரங்கள் பெரிதும் உதவுகின்றன.

01. கற்காலம் பற்றி அறிய உதவும் எச்சங்கள், கல்லாயுதங்கள்,
02. பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமத்தாழிகள், புதைகுழிகள் ஏனைய எச்சங்கள்.
03. கட்டிட இடிபாடுகள், தூண்கள், குகைகள்
04. வரலாற்று இடைக்கற்காலத்தைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்கள்.
05. செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், வெளிநாட்டார் ஆய்வுகள், குறிப்புகள்.
06. இந்திய ஈழ நாணயங்கள் - இவை பற்றிய ஆய்வுக் குறிப்புக்கள்.
07. வரலாற்றுக்கால, பிராமி, கிரந்த, தமிழ் சிங்களக் கல்வெட்டுகள் செப்பேடுகள்.
08. மேல்நாட்டு ஆய்வாளர்களது சில நூல்கள், டயறிக் குறிப்புக்கள்.
09. போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால நூல்கள், அறிக்கைகள்.
10. மட்டக்களப்பு மான்மிய ஏட்டுச்சுவடி, மகாவம்சம் போன்ற நூற்குறிப்புகள்.
11. கல்வெட்டுக்கள் செப்பேடுகளின் விளக்க நூல்கள்.
12. 1960க்குப் பின் மட்டக்களப்பில் வெளிவந்த சில வரலாற்று நூல்கள்.

பின்வரும் நூல்கள் அவற்றுடன் அடங்கும்

01. மட்டக்களப்புத் தமிழகம்(1960) பண்தர் மகா வித்துவான் வி.சி.கந்தையா
02. குளக்கோட்டன் தரிசனம் (1992) க. தங்கேஸ்வரி
03. மாகோன் வரலாறு(1993) க. தங்கேஸ்வரி
04. மட்டக்களப்பு முற்குகர் வரலாறு ஞா.சிவசண்முகம்
05. The Land of Letters Dr.Xvier
06. Monograph of Batticaloa Distrid S.O. Canagaretnam
07. பண்டைய ஈழத்தமிழர் - நா.நவநாயகமூர்த்தி
08. மட்டக்களப்பு மக்கள் வாழ்வும் வளமும் - கட்டுரைத் தொகுப்பு F.X.C நடராசா
09. மட். மான்மியம் ஆராய்ச்சி(திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம்)
10. திராவிடக் கட்டிடக் கலையும் தொல் பொருளியல் ஆய்வும் - திருமதி தனபாக்கியம்குணபாலசிங்கம்
11. மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் 01,02 வீ.சி கந்தையா
12. சில இடப்பெயர்வுகள், ஆலய வரலாறுகள், கர்ணபரம்பரைக் கதைகள் முதலியன.

## சிலகுழறுபடிகள்

இவற்றுள் மட்டக்களப்பு மான்மியம் பற்றி சிறிது விளக்கவேண்டும் 19ம் நுற்றாண்டில் எழுந்த ஏட்டுப் பிரதியின் நூற்பதிப்பாக மகாவித்துவான் FXC நடராசா தொகுத்து பதிப்பித்த நூலாகும். 1952ல் வெளிவந்த இத்தலைப்பில் பல ஏடுகள் மட்டக்களப்புக் கிராமங்களில் கிடைக்கின்றன. அவற்றுள் பல இடைச்

**க. தங்கேஸ்வரி**

செருகல்கள் புகுந்திருக்கின்றன. ஏடுகளைப்பிரதி பண்ணிய புண்ணியவான்கள் தமது கைவரிசைகளையும் அதில் காட்டியுள்ளனர். அதனால் இவ்வேடுகளில் பாடபேதங்கள் நிறைய இருந்தன. அமரர் F.x.c மிகுந்த பிரயாசைப்பட்டு இந்நூலைப் பதிப்பித்தார். அதன் மறு பதிப்பு மட் கலாசாரப் பேரவையால் 2000ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பில் முதற் பதிப்பில் இடம் பெற்றிருந்த பல தவறுகள் திருத்தப்பட்டன. வித்துவான் சா.இ.கமலநாதன் இதனைச்செய்தார். ஆனாலும் வரலாற்றுத் தகவல்கள் தொடர்பாக அதன் நம்பகத் தனிமை கேள்விக் குறியாகவே உள்ளது.

இந்நூலை ஒரு முழுமையான மட்டக்களப்புக்குரிய வரலாற்று நூலாகக் கொள்வதற்கில்லை. இவற்றில் இடம் பெற்றுள்ள பல கற்பனைச் செய்திகளைக் களைந்து விட்டுப் பிற வரலாற்றுச் சான்றுகளுடன் ஒத்துப் போகும் தகவல்களை மட்டுமே நாம் வரலாறாகக் கொள்ளலாம்.

திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் இந்நூலை ஆராய்ந்து ''மட்டக்களப்பு மான்மிய ஆராய்ச்சி'' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். ஆனாலும் அந்நூலிலும் வரலாற்றுத் தகவல்கள் ஆதாரபூர்வமாக நிறுவப்படவில்லை. உதாரணமாக மகாசேனன் (கி.பி.272-302) மூன்று லிங்கக் கோவில்களை அழித்து அவ்விடங்களில் விகாரை கட்டினான் என்ற விடயம் மகாவம்சம் (xxxv ) வம்சத் தீபிகாசினி - மல்லசேனபதிப்பு போன்ற நூல்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவனே குளக்கோட்டன். என மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டிருக்கும். பிழையான தகவலை அப்படியே மீண்டும் ஒப்புவிப்பது.

ஒன்று மட்டும் தெளிவாக திடமாகக் கொள்ள வேண்டும். வெறும், ஏட்டுச்சுவடிகளுக்கும், இலக்கியங்களுக்கும் மட்டும் வரலாறாகாது ஆடக சவுந்தரியும், உலக நாச்சியும் தான் எமது வரலாறு என்ற கோட்பாட்டிற்கு அப்பால் முன் நோக்கிச் சொல்ல வேண்டும். வரலாற்று உண்மைகளைத் தேடவேண்டும்.

(தொடரும்)

# காத்திரன் பதில்

01. கே. புலியும், சிங்கமும் பேசும் போது நரியார் ஏன் இடையில் கிடந்து ஊளையிடுகிறார் காத்திரனே?

**எஸ். ஞானக்குமார், அம்பிளாந்துறை**

ப. நரியாரின் குணமே "கொழுத்திற விளக்கில் கும்பிடுறது" தான் இதுக்கு சிங்கம் இடம் கொடுத்தாலும் புலி இடம் கொடுக்காது.

02. கே. காத்திரனே! மட்டுநகர் பகுதியில் வேலை இல்லாத சில இளைஞர்கள் பெண் பிள்ளைகளுக்குப் பின்னால் சுற்றி அவர்களை இம்சிப்பதை எப்படித் தடுக்கலாம்?

**க. சந்திரகுமார், வவுணதீவு.**

ப. பெண் பிள்ளைகளே இவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் எப்படித் தெரியுமா? காலில் உள்ளதை கையில் எடுத்துச் சொத்தையில் சாத்த வேண்டியது தானே.

03. கே. காத்திரனே! முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்கள் புதைக்கும் அரசியல் வாதிகளைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**தி. அன்பன் சிறிதரன், மாவடிமுன்மாரி.**

ப. அரசியல்வாதிகளின் தொழில் பூசனிக்காயை சோற்றுக்குள் புதைப்பது மட்டுமல்ல முருங்கை காயையும், புடலங்காயாக மாற்றுவது தான்.

04. கே. படுவான்கரைப் பகுதி இளைஞர்கள் இளமையில் தமிழீழ மண்ணை நேசிக்கின்றார்கள். மட்டுநகர்புற இளைஞர்கள் இளமையில் பெண்களை நேசிக்கிறார்கள் ஏன் காத்திரனே?

**அ. கோணேஸ், பண்டாரியாவெளி**

ப. படுவான்கரை இளைஞர்களுக்கு மண் ஆசை, மட்டுநகர் இளைஞர்களுக்குப் பெண்ணாசை, இது வீரம் விளைநிலம். அது காதல் விளை நிலம். இங்கு தமிழ்ப்படை அங்கே சிங்களப்படை இதுதான் காரணம்.

05. கே. வாழ்க்கையில் வேதனை, சோதனை வருவது சகஜம் ஆனால் வாழ்க்கையே வேதனையாகவும், சோதனையாகவும் ஆனால் என்ன செய்வது காத்திரனே?

**வாசகி, மட்டுநகர்.**

ப. சோதனையும், வேதனையும் வாழ்க்கையானால் சாதனைகள் செய்யத் தயாராகிவிட்டாய் என்றுதான் அர்த்தம். எங்கே உன்சாதனையை எம் மண்ணில் காட்டுவிடு.

06. கே. காத்திரனே! எமது நாட்டுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**சா. சங்கீதா, பாலமுனை, மண்டூர்.**

ப. ஆலம்பழம் போல் இருக்கிறார். அணில் போல தாவுகின்றார் நல்ல பாம்பாய் நடிக்கிறார், நரிவேடமும் போடுகிறார்.

07. கே. காத்திரனே! பூனைக்கும், எலிக்கும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுமாயின் அது என்ன ஒப்பந்தமாக அமையும்?

**த. மேகராசா (மேரா) கலைப்பீடம், கி. ப. க. வந்தாறுமூலை**

ப. "எலி பூனை பலியாக உறவு உடன்படிக்கை" செய்யப்பட்டாலும் இரண்டிற்கும் சம்பந்தமில்லாத "பல்லி" பங்கு கேட்டுக் குழப்ப பார்க்குமே தம்பி.

08. கே. கதிர்காமத்திற்குச் செல்பவர்கள் எல்லாம் ஏன் மொட்டை அடிக்கிறார்கள் காத்திரனே?

**கே. ரசிகரன், மண்டபத்தடி, கன்னன்குடா.**

ப. கதிர்காமத்திற்குச் செல்லும் வளிகளில், "மொட்டை பிக்குகளின் முகத்தில் முளிப்பதால்" பழக்க தோசம் ஏற்படுகிறது.

09. கே. சோதிடத்தில் உமக்கு நம்பிக்கை உண்டா காத்திரனே!

**சிவலிங்கம் சுமதி, ஏறாவூர் 04**

ப. சோதிடத்தில் நம்பிக்கை உண்டு. சோதிடம் கூறுபவர்களிடம் நம்பிக்கை இல்லை.

10. கே. நல்ல ஜோக் சொல்வீர்கள் என்று பலரும் சொல்லுகிறார்கள் எங்கே ஒரு ஜோக் சொல்லுங்கள் காத்திரனே?

**மு. ப. இந்துஜன், அருள்நேசபுரம்.**

ப. இப்போதைக்கு நல்ல ஜோக் சொல்லுபவர்களாக அநுராபண்டார நாயக்கா, றவூக்ஹக்கீம், கதிர்காமர் என்று பட்டியலே உள்ளது நான் சொல்ல தேவையில்லை.

**உங்கள் கேள்விகளை**
**காத்திரன் பதில்**
**தமிழ்அலை**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை**
**எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

# கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் கண்டிக்கிறது

29.08.2003 அன்று வெளியான தினகரன் ஆசிரிய தலையங்கம் தொடர்பாக கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இச்செய்தியாளர் சங்கத்தின் செயலாளர். சண் தவராசாவினால் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கண்டனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவில் 29.08.2003 தினகரன் பத்திரிகையில் வெளியான ஆசிரிய தலையங்கம் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பற்றி தங்களின் கவனத்தை ஈர்க்கவிரும்புகிறோம். எமது சங்க நிறைவேற்றுக்குழு கூடி மேற்படி விடயம் தொடர்பாக ஆராயக் காரணமாக அமைந்தது. இந்த ஆசிரிய தலையங்கத்தில் எழுதப்பட்டிருந்த பிரதேச ஊடகவியலாளர் அமைப்புக்கள் இத்தகைய சோரம் போகும் ஊடகவியலாளர்களை இனங்கண்டு கொள்வது அவசியம் என்ற வாசகமே. சோரம் போவதைப்பற்றிப் பேசுவதற்கு நிட்சயமாகத் தினகரனுக்கு அருகதையே இல்லை. சோரம் போவது தொடர்பில் தன்னை மறந்து ஏரிக்கரைப் பத்திரிகை ஒன்று சிந்திப்பது வேடிக்கையான ஒரு விடயம் என்பது எங்கள் அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தைப் புறம்தள்ளிவிட்டுப் பார்த்தால் கூட பின்வரும் மூன்று விடயங்கள் கவனிக்கத் தக்கவை. 1, கிழக்கில் கடந்த வாரம் இடம் பெற்ற பதற்ற நிலையின் போது பிரதேச ஊடகவியலாளர்கள் கற்பனை செய்து ஒவ்வொருவிதமாக செய்திகளை வெளியிட்டார்கள். 2, ஆங்கில இதழொன்றும் அதன் சகோதர சிங்கள இதழும் முஸ்லீம் பிரதேசங்களில் ஆயுதப்பயிற்சி தொடர்பில் செய்தி வெளியிட்டமை. 3, அலிஸாஹிர் மௌலானாவின் கரடியனாறு தேனகம் சந்திப்பு. முதலாவது விடயத்தைப்பார்த்தால் தினகரனைத்தவிர வேறு எந்தவொரு பத்திரிகை நிறுவனமும் தமது செய்தியாளர் கற்பனை செய்து செய்தி எழுதியதாகத் தெரிவிக்கவில்லை. அவ்வாறு நீங்கள் கருதுவதானால் உங்கள் நிறுவனத்தின் கற்பனையான செய்தியாளர் மீது நீங்களே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதனைவிடுத்துப் பொதுவாகக் குற்றம் சாட்டுவது அனைத்து ஊடகவியலாளர்களையும் அவமதிக்கும் ஒரு செயலாகக் கருதுகிறோம். தாங்கள் தெரிவித்துள்ள ஆயுதப்பயிற்சி தொடர்பிலான செய்தியைப் பிரதேச செய்தியாளர்கள் அந்தக் கொழும்புப் பத்திரிகைக்கு எழுதவில்லை.

ஆசிரிய பீடத்தில் பணியாற்றும் செய்தியாளர்களே எழுதியுள்ளனர். அலிஸாஹிர் மௌலானாவின் கரடியனாறு தேனகம் சந்திப்புத் தொடர்பான செய்தியை ஆரம்பம் முதலே நீங்கள் கையாண்டவிதம் தவறானது. செய்திகள் வெளியிடப்படும்போது மறுப்புக்கள் வெளிவருவது செய்தித்துறையைப் பொறுத்தவரை, புதியதொரு விடயமல்ல. அரசியல்வாதிகள் ஒரு இடத்தில் ஒன் றைப்பேசிவிட்டு பின்பு மறுப்பது வழமையான ஒரு விடயம்தான். அரசியல்வாதிகள் இதில் பெரும் கில்லாடிகள் என்பது பலரும் அறிந்த உண்மை. மேலும் தங்கள் பத்திரிகையில் வெளிவந்த குறித்த செய்தியில் செய்தி எழுதிய நிருபரின் பெயரோ, இடமோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அப்படியானால் ஒரு பிராந்திய செய்தியாளர் மீது எவவாறு நீங்கள் குற்றம்சாட்ட முடியும்? எனவே இச்செய்தி முழுக்கமுழுக்க ஒரு பிராந்திய நிருபரின் செய்தி எனக்கொள்ள முடியாது. அதேவேளை வெளிவந்த செய்தியை மறுக்கும் விடயத்தில் அலிஸாஹிர் மௌலானா பத்திரிகைத் துறையின் மரபை மீறிச்செயற்பட்டதுடன் தினகரன் ஆசிரியரும், ஆசிரிய பீடமும் அதற்குத் துணை போயுள்ளமையும் காணமுடிகிறது.

மறுப்பு அறிக்கையை வேறு ஒரு நிருபரிடம் வழங்காது சம்பந்தப்பட்டவர் நேரடியாக ஆசிரிய பீடத்திற்கு அனுப்புவதே மரபு ஆகும். உண்மைநிலை இவ்வாறு இருக்க அரசியல்வாதியான அலிஸாஹிர் மௌலானாவை திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பத்திரிகை மரபை மீறி , பத்திரிகா தர்மத்திற்கு முரணான வகையில் பத்திரிகையின் ஆதரமான பிராந்தியச் செய்தியாளர்களை அவமதிக்கும் வகையில் இலங்கையின் பழம்பெரும் தமிழ் தினசரியான தினகரனில் வெளியிடப்பட்ட ஆசிரிய தலையங்கம் மிகவும் கஸ்டமான காலங்களிலும் நடு நிலை தவறாது சேவையாற்றிய எம்போன்ற நேர்மையான பத்திரி கையாளர்களை அவமதிக்கும் செயலாகவே கருதுகிறோம். எனவே பிரதேச பத்திரிகையாளர்களை அவமதிக்கும் இது போன்ற செயல்களை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

## புதுக்குடியிருப்புப் படுகொலை......

உறவுகளினை நாம் இழந்திருக்க வேண்டும்.

இப்படுகொலையில் மீளாத்துயில் கொண்ட எம் 17 பேருக்கும் இப் புதுக்குடியிருப்பு கிராமத்தில் கடற்கரை வீதியில் 17 அடி ஸ்தூபி ஒன்று அவர்களில் ''நினைவாலயமாக'' எழுப்பப்பட்டுள்ளது. ''நீங்கள் மரணிக்கவில்லை எம் இதயங்களில் உறவாடிக் கொண்டு இருக்கின்றீர்கள்.'' உங்களுக்கு உண்டான நிலையைப் போக்க எம் இனம் ஆயுதம் ஏந்தி விட்டன. எங்களின் கனவுகளிற்குள் நீங்கள் வாழ்வீர்கள் உங்களின் கனவுகளிற்கும் எம்தேசம் விடிவு பெறும்.... 1990.09.21ம் திகதி புதுக்குடியிருப்புப் படுகொலையில் மீளாத்துயில் கொள்ளும் எம் இன உறவுகளின் பெயர்கள்.

| | |
|---|---|
| 01.சி.கதிராமப்போடி | 63 |
| 02.செல்லம்மா | 32 |
| 03.க.கமலேஸ்வரி | 26 |
| 04.த.இந்திரன் | 29 |
| 05.செ.சிவஜோதி | 22 |
| 06.பா.நல்லையா | 34 |
| 07.கு.கண்ணகை | 27 |
| 08.த.அழகம்மா | 35 |
| 09.சா.உதயகுமார் | 17 |
| 10.சா.சிவகுமார் | 14 |
| 11.சி.முத்துலிங்கம் | 43 |
| 12.க.மகேஸ்வரி | 39 |
| 13.மு.தருமவதி | 39 |
| 14.அ.வரதராசா | 15 |
| 15.வே.புலேந்திரன | 23 |
| 16.வே.யோகநாயகி | 17 |
| 17.ஆ.க்திராமப்போடி | 65 |

## அம்பாறைக்கு...

கிடைக்கும் போது சகல சமூகங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் நோக்கமாகும் என தெரிவித்தார். பல்லின சமூகங்கள் வாழும் முரண்பாடுகள் நிறைந்த ஒரு பிரதேசத்தில் அந்தந்தச் சமூகங்களின் ஆதங்கங்கள், அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்ட ஜப்பானியத் தூதுவர் அம்பாறை மாவட்டத்திலிருந்து புறப்படும் போது பிரச்சினைகளை நேரில் கண்ட அனுபவத்தின் அடிப்படையில் இதைத்தெரிவித்தார். ஒரு இனத்திற்குத் தீர்வை வழங்கிவிட்டு ஏனைய இனங்களைப்புறந்தள்ளும் நிலைமை ஒரு போதும் ஏற்படாது.


**மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற**
**THE PHONE SHOP**
**நிறுவனத்தில் வேலை வாய்ப்பு**

பதவி :--Sales Executive
தகைமை :-- G.C.E. A/L
மட்டு மா நகரில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
மேலதிக தகைமை:~ கணணி அறிவு,
ஆங்கில அறிவு,
A/Lஇல் வர்த்தகப்பிரிவு,
சிங்களத்திலும் தொடர்பாடல்.
சம்பளம்:~ பேசித் தீர்மானிக்கப்படும்
மேலதிக வேலை நேரக் கொடுப்பனவும் உண்டு.

**ஆர்வமுடையோர் தங்கள் சுய விபரக்கோவையினை passport அளவு வர்ணப்புகைப்படம் 2 பிரதியுடன் கீழ்வரும் முகவரிக்கு எதிர்வரும் 05-10-2003 இற்கு முன்னர் தபாலில் விண்ணப்பிக்கவும்**


**THE PHONE SHOP,**
**276.1, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**
*மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.*
065- 2226400
0777- 550947
0777- 550948

**நாளைய உலகை இன்றே அனுபவியுங்கள்**

# அலையின் பார்வையில்







லெப். கேணல் தியாகி திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பெரியகல்லாற்றில் இடம்பெற்ற நிகழ்வில் தியாகி திலீபனின் திருஉருவப் படத்தினை தாங்கி வரும் பாடசாலை மாணவிகள்.

கொடியினை ஏற்றி வைக்கும் மட்டு அம்பாறை துணை அரசியல் பொறுப்பாளர் கிருஷன் மற்றும் ஈகைச்சுடர் ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கிருஸ்ணப்பிள்ளை.





லெப். கேணல் தியாகி திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருமலை ~ கிண்ணியாவில் இடம் பெற்ற நிகழ்வில் கிண்ணியா அரசியல் துறைப்பொறுப்பாளர் அற்புதம் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்துவதையும், தியாகிதிலீபனின் படத்திற்கு பொதுமக்கள் அஞ்சலிசெலுத்துவதையும் இங்கே காணலாம்.



விடுதலைப்புலிகள் அமைப்பில் இணையவந்த இரண்டு சிறார்களை மீள அவர்களின் பெற்றோர்களிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்துள்ளனர். பெரிய நீலாவணையைச் சேர்ந்த சிவலிங்கம் சஞ்சித் (14), சேனாதி திருக்கிஸ்னா (15) ஆகிய இருவருமே கையளிக்கப்பட்ட சிறார்கள் ஆவர்.

அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் நிக்கயோர் முன்னிலையில் அம்பாறை~மாவட்ட துணைஅரசியல் பொறுப்பாளர் த.குயிலின்பன் பெற்றோர்களிடம் சிறார்களைக் கையளிப்பதைக் காணலாம்.



கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டப்பெருவிழா கடந்த ஞாயிறன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. தான்தோன்றீஸ்வரனின் இத்தேரோட்டப் பவனி காண கிழக்கின் நாலா திசைகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் இங்கு வருகை தந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

## போரை விரும்பும் புத்த பிக்குகள்



கொழும்பு புறக்கோட்டை அரசமரத்தடிச்சந்தியில் அகிம்சையைப் போதிக்க வேண்டிய புத்த பிக்குகள் இங்கே அமர்ந்திருப்பது எதற்காக என்றால் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகத்தான்.





களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைக்கு அருகாமையில் உள்ள வடிகால் இது. குப்பைகள் நிறைந்து அழுக்கடைந்து காணப்படும் இவ்வடிகாலினால் தொற்று நோய்கள் ஏற்படும் ஆபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இப்பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேச சபையினர் இதனைக் கவனத்தில் எடுத்துத் தீர்வு காண வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகின்றனர்.

(படம், தகவல் எஸ். ரவீந்திரன்)

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நீத்தி பதிப்பகத்தில் 20.09.2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.